பக்கங்கள்: 24 விலை:20 ரூபா

கண்கவர் ஆடைத் தெரிவுகளுக்கு
சரவணா ரெக்ஸ்
இல.526,529 பருத்தித்துறை வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0778448045
இல.171, பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992

# காலைக்கதிர்
Kalāikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 28, ஞாயிற்றுக்கிழமை 13.08.2017 கதிர் 280

# இன்று வரை காலக்கெடு டெனீஸ்வரன் பதவி விலக!

## அவரது ரெலோ கட்சி நேற்று விதித்தது



வவுனியா, ஓகஸ்ட் 13
வடமாகாண அமைச்சர் டெனீஸ்வரன் தமது அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்வதற்கு இன்று வரை 24 மணி நேர கால அவகாசம் வழங்கியிருக்கின்றது அவரது ரெலோ கட்சி.

நேற்று வவுனியாவில் நடைபெற்ற ரெலோவின் தலைமைக் குழுக் கூட்டத்தில் டெனீஸ்வரனையும் வைத்துக் கொண்டு இந்த முடிவை எடுத்து அதனை அவரிடம் தெரிவித்தது அந்தக் கட்சி.

பக்கம் 22

## அமைச்சர் பதவிக்கு விந்தனே ரெலோவின் ஒரே பரிந்துரை!

அந்த முடிவில் மாற்றம் ஏதும் கிடையாதாம்

வவுனியா, ஓக.13
'வடக்கு மாகாண சபையில் ரெலோ சார்பில் அமைச்சர் பதவிக்கு பரிந்துரை செய்யப்பட்டவர் கனகரத்தினம் விந்தன்தான். அதில் எந்த மாற்றமும் இல்லை. அது எமது கட்சியின் அரசியல் குழு எடுத்த முடிவு. அதை யாரும் தம்பாட்டில் மாற்ற முடியாது.'

– இவ்வாறு திட்டவட்டமாகவும், தெளிவாகவும் கூறினார் ரெலோ செயலாளர் நாயகம் என்.சிறீகாந்தா.

நேற்று கட்சியின் தலைமைக் குழுவின் கூட்டம் வவுனியாவில் நடைபெற்ற பின்னர்

பக்கம் 22

## நீதி அமைச்சருக்கு எதிராக 17 பேர் கையெழுத்து!

கொழும்பு, ஓக.13
நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவுக்கு எதிராக கொண்டுவர எதிர்பார்த்துள்ள உத்தேச நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 17 பேர்தற்போது கையெழுத்திட்டுள்ளனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவுக்கு எதிராக அரசாங்கம் நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கவுள்ளதாக பல்வேறு கருத்துகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இது தொடர்பில் நாடாளுமன்ற

பக்கம் 22

### வடக்கு சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம்

## பதவி விலக விரும்பிய கடிதத்தையே இராஜினாமாக் கடிதமாக ஏற்றார் விக்கி

யாழ்ப்பாணம்,ஓக.13
வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பதவியிலிருந்து விலக விரும்புகிறார் எனத் தெரிவித்து மருத்துவர் ப.சத்தியலிங்கம் தமக்கு எழுதிய கடிதத்தை அவரது ராஜினாமாக் கடிதமாகக் கருதி அவரது பதவி விலகலைத் தாம் ஏற்றுக்கொண்டிருக்கிறார் என சத்தியலிங்கத்துக்கு அறிவித்திருக்கிறார் முதலவர் விக்னேஸ்வரன்.

"பதவி விலக விருப்பம் தெரிவித்து நீங்கள் எழுதிய கடிதத்தின் அடிப்படையிலும், அக்கடிதத்தை எனக்கு நீங்கள் அனுப்பிய பின்னர் சுகாதார அமைச்சு அலுவலகத்துக்கு நீங்கள் சமுகம் தராதமையின் அடிப்படையிலும் நீங்கள் அப்பதவியிலிருந்து விலகிவிட்டீர்கள் எனக் கருதி, உங்கள் பதவி விலகலை

பக்கம் 22




## மஹிந்தவின் மகன் ரோஹித நிதி மோடிப் பிரிவுக்கு அழைப்பு

செயற்கைக்கோள் விவகாரம் தொடர்பில் விசாரிக்க

கொழும்பு, ஓக.13
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகன் ரோஹித ராஜபக்ஷ நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டுள்ளார் எனத் தெரியவருகின்றது.

இலங்கையின் தொலைத்தொடர்புசெயற்கைக்கோள் என்ற பெயரில் சீனாவினால் விண்ணுக்குஏவப்பட்ட Supreme SAT செயற்கைக்கோள்கள் திட்டம் தொடர்பில் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காகவே ரோஹித ராஜபக்ஷ அழைக்கப்பட்டுள்ளார்.

பக்கம் 22

## அதிரடிப் படை ஜீப் மீது திடீர் துப்பாக்கிச் சூடு!

நீர்கொழும்பு குரண பகுதியில் சம்பவம்



கொழும்பு, ஓக.13
நீர்கொழும்பு, குரண பிரதேசத்தில் விசேட அதிரடிப் படையினர் ரோந்து சென்ற சமயம் அவர்களின் ஜீப்மீதுதுப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

அதிரடிப் படையினர் பயணித்த ஜீப் குரண பிரதேசத்தைக் கடந்து செல்ல முற்பட்ட நிலையில் வான் ஒன்றில் வந்த இனந் தெரியாத நபர்கள் அதிரடிப்படை ஜீப் மீது திடீரென துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

நேற்று மாலை 5.30 மணியளவில்நடைபெற்ற இந்தச்சம்பவத்தின்போது துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களில் இருவர் காயமடைந்துள்ளனர் என்றும் அவர்களுடன் சந்தேக நபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் நேற்றிரவு தகவல் வெளியாகி இருந்தது.

சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதியில் பொலிஸாரும் அதிரடிப்படையினரும்

பக்கம் 22

## நேர்மையான, நாட்டை நேசிக்கும் அரசியல்வாதிகளைத் தேடுகிறோம்

வெற்றிபெறுவோம் என்ற நம்பிக்கையில் மைத்திரி

கொழும்பு,ஓக.13
மேலிருந்து கீழ் வரை மோசடிகள், களவு மற்றும் ஊழல்கள் நிறைந்திருந்த இந்த நாட்டின் அரசியல் கலாசாரத்தை ஒரேயடியாக மாற்றிவிட முடியாது என்றபோதும் நேர்மையாகச் செயற்படும், நாட்டை நேசிக்கும் அரசியல்வாதிகளை உருவாக்கும்கஷ்டமானபணிக்காக தற்போதைய அரசு அர்ப்பணிப்புடன் உள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

எத்தகைய குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட போதும் அந்த சவாலை வெற்றிகொண்டு மக்கள் எதிர்பார்க்கும் தூய அரசியல் கலாசாரத்தை நாட்டில் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

தலவை விளையாட்டு மைதானத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற மகாவலி எச் வலயத்தில் உள்ள விவசாயிகளுக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

என்னதான் விமர்சனங்கள், குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட போதும்

பக்கம் 22

### எமது கட்சியினருக்கு தொந்தரவு, அழுத்தம்:

## அரசிலிருந்து விலகிவிடுவோம்! மைத்திரியிடம் கூறினார் ரணில்



கொழும்பு,ஓக.13
நல்லாட்சி அரசில் அங்கம் வகிக்கும் தமது கட்சியினருக்கு எதிராக தொடர்ந்தும் அழுத்தங்களும், தொந்தரவுகளும் கொடுக்கப்பட்டால்,எதிர்வரும் ஜனவரி மாதம் அரசில் இருந்து விலக ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளதாக அரசியல் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தனிப்பட்ட ரீதியில் சந்தித்து இந்த முடிவை அறிவித்துள்ளார் என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

நல்லாட்சி அரசில் ஐக்கிய தேசியக்

பக்கம் 22



## வடக்கில் எவ்வித குழப்பங்களோ பாதுகாப்பு அச்சுறுத்தலோ இல்லை

அதை வெளிப்படுத்தவே பாதுகாப்பின்றி வந்தேன் என்கிறார் சஜித்

யாழ்ப்பாணம்,ஓக.13
"வடக்கில் எந்தவித குழப்பங்களும் இல்லை. பாதுகாப்பு அச்சுறுத்தலும் இல்லை. அதை வெளிப்படுத்தவே நான் சாதாரண மனிதனாக, இரு பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் மட்டும் யாழ்ப்பாணத்துக்கு வந்தேன்"

– இவ்வாறு தெரிவித்தார் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் சஜித் பிரேமதாச.

வடக்கில் நிலைமைகள் சரியில்லை, குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன என்று சிலர்

பக்கம் 22

# மாகாணசபைத் தேர்தல்கள் குறித்த சு.க.முடிவை நாம் வரவேற்கின்றோம்

## அமைச்சர் மனோகணேசன் தெரிவிப்பு



கொழும்பு, ஓக 13

சப்ரகமுவ, கிழக்கு, வட மத்திய மாகாண சபைகளின் ஆயுள்காலம் இன்னும் சில மாதங்களில் முடிவுக்கு வருகின்றன. இந்த சபைகளுக்கான தேர்தல்கள் ஒத்திவைக் கப்பட வேண்டும் என்றே 20ஆவது திருத்தயோசனையைக் கைவிட வேண்டும் என்றும், தேர்தல்கள் ஒத்தி வைக்கப்படாமல் நடத்தப்பட வேண்டும் என்றும் ஸ்ரீ லங்காசுதந்திரக்கட்சிஎடுத்துள்ள முடிவுகளை நாம் வரவேற்கிறோம் என்று ஜனநாயக மக்கள் முன்னணி- தமிழ் முற்போக்குகூட்டணி தலைவரும், தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும்அரசகருமமொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இந்த ஒத்திவைப்பு அவசியமற்றது. ஒத்திவைக்க அரசமைப்பைத் திருத்த வேண்டும். இது நாட்டில் தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தும். அதைவிட புதிய அரசமைப்பைக் கொண்டு வரலாம். அதற்கு இன்னும் சிறிது காலம் எடுக்கும். ஆகவே, உரிய வேளையில் சப்ரகமுவ, கிழக்கு, வட மத்திய மாகாண சபைகளின் தேர்தல்களை நடத்துவதே சாலச்சிறந்தது.

ஆனால், அதை அவசர அவசரமாக புது ஒரு தேர்தல் முறைமையை அறிமுகம் செய்து நடத்த முடியாது. உள்ளூராட்சி சபைகள் தொடர்பில் நாம் இப்போது ஏற்றுக் கொண்டுள்ள புதிய கலப்பு தேர்தல் முறைமை ஒருமுறை பரீட்சித்து பார்க்கப்பட வேண்டும். எனவே,உள்ளூராட்சிசபைகளின் தேர்தல்கள் புதிய முறைமையின் கீழ் முதலில் நடத்தப்பட வேண்டும். அதையடுத்து அதில் உள்ள நடைமுறை சிக்கல்களை கணக்கில் எடுத்து, உருவாக்கப்படும் புதிய மாகாணசபைத் தேர்தல் சட்டத்தின் கீழ் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். அதை இப்போது செய்ய முடியாது.

ஆகவே, இப்போது நடத்தப்படவுள்ளசப்ரகமுவ, கிழக்கு, வடமத்திய மாகாண சபைகளின் தேர்தல்கள், மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பில் இப் போதும் நடைமுறையில் உள்ள பழைய விகிதாசார முறை மையின் கீழேயே நடத்தப்பட வேண்டும். இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீரவுடன்நேற்றுக் காலை பேசியிருந்தேன். எதிர்வரும் அமைச்சரவை கூட்டத்தில் இந்த பிரச்சினை எடுத்துக் கொள்ளப் படும்.-என்றுள்ளது. (எ)

# பொதுபலசேனாவால் விஜித தேரருக்கு உயிர் ஆபத்தாம்!

பொதுபலசேனாஇனவாத அமைப்பால் தனது உயிர் எந்த சந்தர்ப்பத்திலும் பறிக் கப்படலாம் என்று வட்டரெக்க விஜித தேரர் தெரிவித்துள்ளார்.

தனது உயிருக்கு ஏதாவது அச்சுறுத்தல் ஏற்படுமாயின் அதற்கு அரசே பொறுப்புக் கூற வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக குழப்ப நிலையை ஏற்படுத்தினார் எனக் கூறி, வட்டரக்க விஜித தேரர் கோட்டைப் பொலிஸாரால் கடந்த முதலாம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்.

ஜாதிக பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளரான விஜித தேரர் தனது உயிருக்கு பொதுபலசேனா அமைப்பால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்ட சந்தர்ப்பத்தில் அவர் கைது செய்யப்பட்டி ருந்தார்.

ஜனாதிபதியை சந்திப்பதற்கு அனுமதிகோரிய வட்டரக்க விஜித தேரரை, ஜனாதிபதி செயலக பணியாளருக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் கலங்கம் விளைவிக்கும் வகையில் செயற்பட்டமை உள்ளிட்ட காரணங்களால் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், கோட்டை நீதிவான் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப் பட்ட வட்டரக்க விஜித தேரர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையில் இந்த விடயத்தைக் குறிப்பிட் டுள்ளார். (எ)

# கிளிநொச்சி படையினர் ஏற்பாட்டில் 200 பேருக்கு மூக்குக்கண்ணாடிகள்



கிளிநொச்சி, ஓக 13

'விசன் கெயார்' நிறுவனத்தின் அனுசரணையில் கிளிநொச்சி படையினரின் ஏற்பாட்டில் 200 பேருக்கு நேற்று மூக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி இரணைமடு தாமரைத் தடாக மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பார்வைக் குறைபாடுகள் உள்ள 200 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி படையினரின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் அஜித் காரியகரவன விசேட அதிதியாகக் கலந்துகொண்டு தெரிவுசெய்யப்பட்டுள்ள பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடிகளை வழங்கினார். (எ)

# இராணுவத்திலிருந்து தப்பியோடியோருக்கு பாதுகாப்பு அளிப்பது தண்டனைக்குரியது!

## இராணுவத் தலைமையகம் தெரிவிப்பு

கொழும்பு, ஓக 13

இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்ற மற்றும் விடுமுறை பெறாமல் கடமைக்கு திரும்பாதிருக்கும் இராணுவ வீரர்களுக்கு பாது காப்பளிப்பது தண்டனைக்குறிய குற்றமாகும் என்று இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனவிரத்ன இதனைக் கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்ற மற்றும் விடுமுறை பெறாமல் கடமைக்கு திரும்பாதிருக்கும் இராணுவ வீரர்கள் பொய்யான தகவல்களை வழங்கி பல்வேறு நிறுவனங்களில் பணிபுரிந்து வருகின்றனர் .

இதுபோன்ற இராணுவ வீரர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குவது மற்றும் பாதுகாப்பு வழங்குவதானது நாட்டில் காணப்படுகின்ற சட்டத்தின் நீதி மன்றத்தால் தண்டனை பெறக்கூடிய குற்றமாகும். (எ)

# சின்மயா மிஷனில் இன்று அருளுரை

நல்லூர், ஓக.13

நல்லூர் உற்சவத்தை யொட்டி பருத் தித்துறைவீதி, இலக்கம் 700 என்ற முகவரியில் உள்ள யாழ்ப்பாணம் சின்மயா மிஷ னில் ஆன்மீக அருளுரை நிகழ்வு இடம்பெற்று வருகிறது.

நாளாந்தம் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகள் மாலை 7.30 மணி முதல் 8 மணிவரை அருளுரை வழங்குவார்.

இன்றைய தலைப்பு: 'மனக்கட்டுப்பாடு?'




யாழ்ப்பாணம், ஓக.12

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

இன்றைய நிகழ்வில் பாட்டு: கிருபாசக்தி கருணா, வயலின்: கா.குகபரன், மிருதங்கம்:வி.ரமணா, முகர்சிங்: சி.செந்தூரன்.

***

நல்லூர் உற்சவத்தில் உலக சைவத் திருச்சபை இலங்கை நடத்திவரும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் மாலை 6.45 மணிமுதல் 7.45 மணிவரை நடைபெற்று வருகிறது. அந்த வகையில் இன்று சைவநெறி சன்மார்க்கர் வி.விஸ்ணுஜன் ''ஆறுபடை ஆண்டவன் மகிமை' என்னும் தலைப்பில் ஆன்மீக உரையாற்றுவார். (இ)

# 'அ'புரத்தில் விபத்து: 5 பேர் படுகாயம்!

அனுராதபுரம், ஓக. 13

அனுராதபுரம் - புலங்குலம பகுதியில் ஓட்டோவும் மோட்டார்சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில், ஐந்து பேர்படுகாயம்அடைந்தனர்.

இந்த விபத்து நேற்று சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

படுகாயம் அடைந்த ஐவரும் அநுராதபுர வைத்தியசாலையில் சிகிச்சைக் காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை அனுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச)

# வெளிநாட்டுவவல்கள் இராஜாங்க அமைச்சர்-சுஷ்மா இடையே சந்திப்பு



வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் வசந்த சேனாநாயக்கவுக்கும் இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திருமதி சுஷ்மா ஸ்வராஜுக்குமிடையில் சந் திப்பு ஒன்று நேபாளத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ளது.

'பிம்ஸ்ரெக்' அமைப்பின் அமைச்சர்கள் மாநாட்டுக்கு அமைய இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இரு நாடுகளுக்கும் முக்கியமான விடயங்கள் தொடர்பில் இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

# நல்லூரில் நாடகத் திருவிழா; இன்றிரவு இரு நாடகங்கள்

நல்லூர் பெரும் திருவிழாக் காலத்தில் செயல்திறன் அரங்க இயக்கம் நடத்தும் 'நாடகத் திருவிழா' எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தொடர்ந்து நடைபெறும்.

இந்த நாடகத் திருவிழா நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்துள்ள பண்டாரக்குளத் தின் முன்பாகவுள்ள பஞ்சபூத அரங்கிலே நடைபெறும். இதில் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் ''குழந்தைகள் பாவனை செய்யும்'' சிறுவர் நாடகம் இன்று ஞாயிற்றுக் கிழமை இரவு7.45 மணி முதல் 8.30 மணிவரையும், தே.தேவானந்தின் ''பசுவும் புலியும்'' சிறுவர் நாடகம் இரவு 8.30 மணி முதல் 9.15 வரையும் இடம்பெறவுள்ளன.

# இலங்கை இராவணனால் ஆளப்பட்ட சிவபூமி அந்தத் தொன்மை திட்டமிட்டு அழிக்கப்பட்டது

## முன்னாள் எம்.பி. சுரேஷ் அரசு மீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஓக.13

“இலங்கை இராவணனால் ஆளப்பட்டதொரு சிவபூமி. 2500 வருடங்களுக்கு முன்னர் விஜயன் இலங்கைக்கு வருகை தருகின்ற காலகட்டத்தில் இலங்கையில் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம், தொண்டீஸ்வரம் ஆகிய ஐந்து ஈஸ்வரங்களும் காணப்பட்டன.

தமிழ் மக்களின் வாழ்வியலுடன்பின்னிப்பிணைந்ததொன்மைக் கலாசாரத்தை இலங்கை அரசாங்கம் திட்டமிட்டு அழித்து வருகின்றது.”

– இவ்வாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றம்சாட்டியுள்ளார்.

அகில இலங்கைச் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் இலங்கைவேந்தன் கலைக் கல்லூரியில் நடைபெற்ற உலக சைவ இளைஞர் மாநாட்டின் முதலாம் நாள் நிகழ்வில், நேற்று முன்தினம் உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் –

தமிழ் மக்களின் வாழ்வியலுடன் கலாசாரம், பண்பாடு என்பன ஒன்றித்துப் போயுள்ளன. எமது மொழி, சமயம், வாழ்க்கை முறை என்பவற்றையொட்டி எமது பண்பாடுகளும், நாகரிகங்களும், பழக்க வழக்கங்களும் அமைந்துள்ளன.

ஆகவே, இவை அழிக்கப்படும் போது எமது இனம், மொழி, நாகரிகம், பண்பாடு என அனைத்தும் அழிக்கப்படும். இதனைக் கலாசாரப் பேரழிவு என்று குறிப்பிடலாம். இவ்வாறான கலாசாரப் பேரழிவை இலங்கை அரசாங்கம் திட்டமிட்டு மேற்கொள்கிறது.

இலங்கையில் பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது என்பதற்காக பௌத்த மக்கள் இல்லாத சைவ மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றதொரு பிரதேசத்தில் பௌத்த மதத்தைத் திணிப்பது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

### எமது இனத்தை அழிக்க பல்வேறு சூழ்ச்சிகள்

எமது இனத்தை அழிப்பதற்கு பல்வேறு பட்ட சூழ்ச்சிகள் பிரயோகிக்கப்படுகின்றன. தமிழ் மக்கள் தமது மொழியை, சமயத்தை, பண்பாட்டை, கலாசாரத்தை பாதுகாப்பதற்காக மிகவும் நீண்டகாலமாகப் போராட வேண்டிய துர்ப்பாக்கிய சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம், தொண்டீஸ்வரம் ஆகிய ஐந்து ஈஸ்வரங்களுக்கும் என்ன ஆனது? தொண்டீஸ்வரம் என்பது இல்லாமலேயே போய்விட்டது. திருக்கோணேஸ்வரம் ஆலயத்திற்கு முன்பாக புத்த பெருமானுடைய மிகப் பெரிய சிலை அமைக்கப்பட்டுள்ளது.

திருக்கேதீஸ்வரம் ஆலயத்தைச் சூழவும், யாழ்ப்பாணத்திலுள்ள நகுலேஸ்வரர் ஆலயத்தைச் சூழவும் பௌத்தமயமாக்கும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. பௌத்த மதத்தைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக சைவசமயத்தை அழிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவது எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

### இராணுவத் துணையுடன் பௌத்த விகாரைகள்

நடைபெற்று முடிந்த யுத்தத்தில் பல நூற்றுக்கணக்கான சைவ ஆலயங்களும், ஏனைய ஆலயங்களும் அழிக்கப்பட்டன. குண்டுகள் வைத்துத் தகர்க்கப்பட்டன. தற்போது அந்த ஆலயங்கள் மீளக் கட்டியெழுப்பட்டு வளர்ச்சியடைந்து வரும் சூழலில் அரசாங்கம் இராணுவத்தின் துணையுடன் பௌத்த மதம் இல்லாத பிரதேசங்களில் பௌத்த விகாரைகளை அமைத்து வருகிறது.

கன்னியா வெந்நீருற்று பழமை வாய்ந்த காலத்தில் இலங்கையை ஆண்ட இராவணனால் தனது தாயாருக்கு ஈமக் கிரியைகள் செய்வதற்காக உருவாக்கப்பட்டது. தற்போதைய காலகட்டத்தில் அந்தப் பகுதியில் பௌத்த துறவியொருவர் நிரந்தரமாகத் தங்கிப் பிழைப்பு நடத்தி வருகிறார்.

### நயினாதீவிலும் 67 அடி உயர சிலை

மூதூரில் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமை வாய்ந்த தமிழரின் பாரம்பரியச் சிலைகள் உடைக்கப்பட்டுள்ளன. நயினாதீவில் கடல்பகுதியில் 67 அடி உயரமான புத்தபெருமானின் சிலை நிறுவுவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வடக்கு, கிழக்கு முழுவதும் ஒருகாலத்தில் சிவபூமியாக விளங்கினாலும் கூட அதனை மாற்றும் வகையில் அரசாங்கம் திட்டமிட்டுப் பல்வேறு செயற்பாடுகளை நிகழ்த்தி வருகிறது.

அம்பாறையில், திருகோணமலையில் ஏற்கனவே பௌத்தமயமாக்கல் வெற்றிகரமாகச் செய்து முடிக்கப்பட்டுள்ள சூழலில் தற்போது வடக்கு முழுமையாகக் குறி வைக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறான விடயங்கள் தொடர்பில் நாங்கள் வெளிப்படையாகப் பேசினால் இனவாதிகளாகவும், ஏனைய மதங்களுக்கு எதிரானவர்களாகவும் சித்திரிக்கப்படுகின்றோம். உண்மையில், நாங்கள் ஏனைய மதங்களுக்கோ, இனங்களுக்கோ எதிரானவர்களல்லர். எம் ஒவ்வொருவருக்கும் எமது மதத்தையும், கலாசாரத்தையும் பின்பற்றப் பூரண உரித்திருக்கிறது.

அந்த உரித்தைப் பெரும்பான்மைப் பலம் கொண்டு நசுக்குகின்ற போது நாங்கள் வெறுமனே பார்வையாளர்களாக இருக்க முடியாது.

எங்களுடைய சமயத்தை, கலாசாரத்தைப், பண்பாட்டை, மொழியைப் பாதுகாக்கின்ற பெரும் பொறுப்பும், கடமையும் எங்கள் மண்ணின் இளைஞர், யுவதிகள் மத்தியிலுள்ளது. தமிழ் மக்களின் பாரம்பரிய கலாசாரங்களை எமது மண்ணில் நிலை நிறுத்த வேண்டிய, எமது சமயத்தைப் பாதுகாக்க வேண்டிய முழுப் பொறுப்பும் இளைஞர்கள் இடமுள்ளது.

நாடாளுமன்றத்திற்குச் சென்ற எமது அரசியல்வாதிகள் இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுத் தருவார்கள் என்பதை விடுத்துத் தமிழ் இளைஞர், யுவதிகள் எமது கலாசாரம், பண்பாடு, மொழி, சமயம் அனைத்தையும் பாதுகாக்க முன்வர வேண்டும்.

பல்லாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த எமது கலாசாரம், பண்பாடு என்பவற்றை நிலை நிறுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் இவ்வாறான சைவ மாநாடுகள் உறுதுணை புரியும். – எனத் தெரிவித்தார். (ம)

# வீரமுனைப் படுகொலை நினைவேந்தல் நேற்று உணர்வுபூர்வமாக இடம்பெற்றது

## மக்கள் கண்ணீருடன் அஞ்சலி





அம்பாறை – வீரமுனைப் படுகொலையின் 27 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக வீரமுனையில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபிக்கு முன்பாக நேற்று உணர்வுபூர்வ அஞ்சலி இடம்பெற்றது.

1990 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி அம்பாறை வீரமுனையில் அப்பாவித் தமிழ் மக்கள் மீது படையினர் நிகழ்த்திய கண்மூடித்தனமான தாக்குதல்களில் 232 பேர் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட தமது உறவுகளுக்காக அங்கு நினைவுத் தூபி ஒன்றை எழுப்பியுள்ள மக்கள் ஆண்டுதோறும் அங்கு நினைவேந்தல் நிகழ்வை நடத்தி வருகின்றனர்.

நேற்றைய தினம் அங்கு முன்னாள் கிராம சேவையாளர் பொன்னம்பலம் தலைமையில் நினைவேந்தல் இடம்பெற்றது. இதன் போது, நினைவுத் தூபிக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது, படுகொலை செய்யப்பட்டவர்களை நினைவு கூர்ந்து சுடர் ஏற்றி ஒரு நிமிட அஞ்சலியுடன் அகவணக்கமும் செலுத்தப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன், கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான தவராசா கலையரசன், மு.இராஜேஸ்வரன், இரா.துரைரெட்ணம் மற்றும் கல்முனை மாநகர முன்னாள் உறுப்பினர் எஸ்.ஜெயக்குமார் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியுள்ளனர்

சம்பவ தினத்தன்று சம்மாந்துறை பிரதேசத்தில் நிகழ்ந்த வன்செயல்கள் காரணமாக வீரமுனையையும் அதன் சுற்றுவட்டக் கிராமங்களான வீரச்சோலை, மல்லிகைத்தீவு, மல்வத்தை, வளத்தாப்பிட்டி, சொறிக்கல்முனை அம்பாறை பகுதிகளைச்சேர்ந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் வீரமுனை சிந்தா யாத்திரைப் பிள்ளையார் கோயில் வளவினுள்ளும் வீரமுனை இராமகிருஷ்ண மிசன் பாடசாலை வளாகத்திலும் தஞ்சம் புகுந்திருந்தனர்.

படையினர் மற்றும் அவர்களுடன் சேர்ந்து இயங்கிய குழுக்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்கள் திடீரென அங்கு நுழைந்து அந்த மக்களை சுட்டும் வெட்டியும் படுகொலை செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## நல்லூரில் செவ்வாயன்று இசை அர்ச்சனை

நல்லூர் கார்த்திகைத் திருவிழாவை முன்னிட்டு நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை ஆலயத்தின் உள் வீதியில் எட்டுத்திக்கும் இசை அர்ச்சனை நடைபெறும். ஆர்வமுள்ள கலைஞர்கள், நாதகான விற்பன்னர்கள் இந்த இசை அர்ச்சனை நிகழ்வில் கலந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## விபத்துக்களில் 1,270 பேர் பலி!

2017 ஆம் ஆண்டின் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மே மாதம் 31 ஆம் திகதி வரையான முதல் ஐந்து மாத காலப்பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் சிக்கி ஆயிரத்து இருநூற்று எழுபது பேர் பலியாகியுள்ளனர் என போக்குவரத்து பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்துகள் 528 இடம்பெற்றுள்ளது. அதில் சிக்கி 548 பேர் பலியாகியுள்ளனர்.

இதேவேளை, கடந்த வருடத்தின் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துகளில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கையை விட இவ்வருடத்தின் முதல் ஐந்து மாதங்களில் 34 மரணங்கள் அதிகரித்துள்ளன எனவும் போக்குவரத்து பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது. (ம)

## ரயில் கட்டுப்பாட்டாளர் குழு நேற்று திடீர் பகிஷ்கரிப்பு

ரயில் கட்டுப்பாட்டாளர்கள் குழுவொன்று நேற்றுக் காலை 10 மணி முதல் திடீர் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதனால் கோட்டை ரயில் நிலையத்துக்கும் மருதானை ரயில் நிலையத்துக்கும் இடையிலான ரயில் போக்குவரத்தில் தாமதம் ஏற்பட்டது. ரயில்வே கட்டுப்பாட்டாளர்களுக்கு வழங்கப் பட்டுள்ள அரச வீடுகளில் பரவியுள்ள பூச்சி வகையை மட்டுப்படுத்த இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் பணிப்பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும், நேற்று முற்பகல் 11 மணிக்கு இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது. (ம)




# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பொறுப்புக்கூறல் விடயத்தில் பொறுப்பின்றிச் செயற்படும் இலங்கை

இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், யுத்தக் குற்றங்கள் போன்றவை தொடர்பில் உண்மையைக் கண்டறிதல், பாதிப்புற்ற தரப்புகளுக்கு நீதியையும், உரிய நஷ்ட ஈட்டையும் பெற்றுக் கொடுத்தல், மீள நிகழாமையை உறுதி செய்தல் ஆகிய விடயங்களின் அடிப்படையில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கு ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் முன்னால் இலங்கை அரசு இணக்கம் தெரிவித்து, இப்போது இரண்டரை வருடங்கள் கடந்துவிட்டன.

ஆனால், செயலில் எதுவும் நடந்தனவாக இல்லை.

அவ்வப்போது - வருடத்துக்கு மூன்று தடவை - ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கூடும் காலத்தில், இது தொடர்பாக ஏதோ இங்கு விடயங்கள் நடக்கின்றமை போல பாவனை செய்யப்படும். பிறகு எதுவும் நகராது. விடயங்கள் கிடப்பில் போடப்படும்; அல்லது கிணற்றில் போட்ட கல்லாகிவிடும்.

மேற்கூறிய பொறுப்புக்கூறல் பற்றிய விடயம் 2015 மார்ச்சில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் விரிவாக ஆராயப்பட்டது. அப்போதுதான் - சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர்தான் - பதவிக்கு வந்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசு, தானும் சேர்ந்து இலங்கையில் பொறுப்புக்கூறல் சம்பந்தமான தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்து அங்கு நிறைவேற்றியது. அந்தப் பொறுப்புக்கூறல் விவகாரத்தில் இலங்கை ஆற்றிய பணிகளை, அடுத்த இரண்டு வருடத்தில் மதிப்பீடு செய்வது என்றும் 2015 மார்ச்சில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானத்தில் முடிவெடுக்கப்பட்டிருந்தது.

ஆனால், இது விடயத்தில் எதுவுமே செய்யாத இலங்கை, இரண்டு வருடங்களாகக் காலத்தை இழுத்தடித்து விட்டு, 2017 மார்ச்சில் - இரண்டு வருட முடிவில் - முன்னைய தீர்மானப்படி விவகாரம் கவுன்ஸிலில் மறுபரிசீலனை செய்யப்பட்டபோது புதுக்கதை விட்டது.

2015 மார்ச்சில், தானும் சேர்ந்து நிறைவேற்றிய தீர்மான விவகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தனக்கு மேலும் கால அவகாசம் வழங்குமாறு அது கோரியது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் இலங்கை விடயத்தில் மிகத் தாராளமாக நடந்து கொண்டது.

இலங்கைத் தரப்பு முதலில் ஒரு வருடகால அவகாசத்தையே முன்வைத்தது. ஆனால், உறுப்பு நாடுகள் சிலவோ, *"இல்லை, இல்லை, உங்களுக்கு ஒரு வருடம் அல்ல; இரண்டு வருடகால அவகாசம் வழங்குகின்றோம். அதற்குள் செய்து காட்டுங்கள். இப்போதிருந்து ஒரு வருடத்தில் இந்த விடயத்தில் நீங்கள் என்ன முன்னேற்றத்தைக் காட்டுகின்றீர்கள் என்பது பற்றிய இடைக்கால அறிக்கையை மட்டும் கவுன்ஸிலுக்கு, மனித உரிமைகள் கவுன்ஸில் ஆணையாளர் சமர்ப்பித்தால் போதும்."* - என்ற சாரப்பட குறிப்பிட்டு, அந்தக் கால அவகாச நீடிப்பு விடயத்தில் தாராளமாகவும் நடந்து கொண்டன.

இரண்டு வருட கால அவகாச நீடிப்பு வழங்கி இப்போது ஐந்து மாதங்கள் கடந்து ஏகிவிட்டன. அடுத்த மாதம் நடுப்பகுதியிவ் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் அடுத்த கூட்டத் தொடர் ஜெனீவாவில் ஆரம்பமாகப் போகின்றது. இந்தக் கூட்டத் தொடரில் இலங்கை குறித்து எந்தவித விடயங்களும் ஆராய்வதற்கான நேரடிச் சாத்தியங்கள் இல்லை.

இலங்கையின் நடவடிக்கைகள் பற்றிய இடைக்கால அறிக்கையும் பரிசீலனையும் அடுத்த மார்ச் மாதம் நடக்கும் அமர்விலேயே உத்தியோகபூர்வமாக முன்னெடுக்கப்படும் என்றாலும் -

இப்போது, மேலும் இரண்டு வருட கால நீடிப்பு வழங்கி, ஆறு மாதங்கள் கடந்த நிலையில், இங்கு புதிதாக எதுவுமே நடக்கவில்லை என்பது தொடர்பான தமது ஆதங்கத்தை - சீற்றத்தை - எரிச்சலை - சர்வதேச அமைப்புகள், பொதுநிறுவனங்கள், மனித உரிமை இயக்கங்கள் - அங்கு கொட்டித் தீர்ப்பதற்கான வாய்ப்புகள் நிறையவே இருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

அதனால் கடந்த மார்ச் மாதம் வழங்கப்பட்ட கால நீடிப்போடு கிணற்றில் போட்ட கல்லாகத் தேங்கிப் போய்க் கிடந்த இந்த விடயம், மீளவும் ஒரு தடவை வெளியே எடுக்கப்பட்டு,ஆரவா ரம் செய்யப்பட்டு விட்டு, மீண்டும் கிணற்றில் போடப்படுவதற்கான சாத்தியங்கள் நிறையவே தென்படுகின்றன.

வழமைபோல, இலங்கைத் தரப்பில் ஏதேனும் சளாப்பல் காரணங்களும், விளக்கங்களும், வியாக்கியானங்களும் கூறப்படும். அத்துடன் விடயம் முடிந்துவிடும்.

கடந்த தடவை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டத்துக்குப் பல மாதங்களுக்கு முன்னர், இங்கு ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தது. காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு வழி செய்யும் சட்டமே அது. கடந்த கவுன்ஸில் அமர்வில் அது ஒரு சாதனையாக இலங்கைத் தரப்பால் முன்வைக்கப்பட்டது. ஆனால், அது தொடர்பில் எந்தச் செயற்பாடும் கடந்த ஒரு வருடமாக நடக்கவில்லை. இந்தப் பின்புலத்தில் அந்தச் சட்டத்தைச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கை என்ற பெயரில், இன்னொரு சட்டம் சில மாதங்களுக்கு முன்னர் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. அதனை, கவுன்ஸிலின் தற்போதைய கூட்டத் தொடர் சமயத்தில் பிறிதொரு சாதனையாக பிரசாரம் செய்வார்கள். அவ்வளவுதான். அதற்கு மேல் எதுவும் நடக்காது.

காணாமற் போனோர் அலுவலகச் சட்டப்படி அதற்குரிய ஆணையாளர்கள் ஏழு பேரை நியமிப்பதற்கான முயற்சிகள் கூட இதுவரை நடக்கவேயில்லை.

பொறுப்புக்கூறல் விடயத்தில் உருப்படியாக எதுவுமே இங்கு முன்னெடுக்கப்படவில்லை என்பதை சர்வதேசத்துக்கு உரிய வகையில் - வெளிப்படையாக - கூறி, இலங்கை அரசுக்கு சர்வதேச நெருக்குதலைத் தீவிரப்படுத்த வேண்டிய சூழல் வந்திருக்கிறது.

தீர்வு முயற்சிகளில் மெத்தனம் காட்டும் இலங்கை அரசுக்கு நெருக்குதல் கொடுப்பதற்குத் தீர்மானித்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை, இந்த விடயத்தையும் ஓர் ஆயுதமாகக் கொள்வது நல்லது.

# ஜூலை இனக்கலவரம் தொடர்பான சாகலவின் கருத்து கேலிக்குரியது

## கிண்டலடிக்கிறார் புத்திக பத்திரண எம்.பி.



நாட்டில் 1983ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரம் தொடர்பான சட்டம் ஒழுங்கு அமைச்சரின் கருத்து கேலிக்கூத்தாகும் என்றுஐக்கிய தேசியக்கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தனிநபர்பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

1983ஆம் ஆண்டு ஜுலை கலவரத்தில் உயிரிழந்தவர்கள் தொடர்பில் சட்டம், ஒழுங்கு அமைச்சர், பதுளை, மாத்தறை, கண்டி, கேகாலை மாவட்டங்களில் வெறும் 7 தமிழர்களே உயிரிழந்தனர் என்று குறிப்பிட்டார். அவரின் கூற்று பெரும் கேலிக்கூத்தாகும்.

நாடாளுமன்றத்தில் இவ்வாறான தவறான கூற்றுக்களை முன்வைப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இந்த நிலை யில், மலையக மக்களின் பாதிப்புகள் குறித்து வெளிப்படுத்துவதற்கென ஆணைக் குழுஒன்றைநியமிக்கவேண்டும்.

இவ்வாறான ஆணைக் குழுவை நியமிப்பதன் மூலம் நாடாளுமன்றத்தில் இவ்வாறு தவறான தரவுகளை வெளிப்படுத்துவது தவிர்க்கப்படும். - என்றார்.

# பாடசாலைகளுக்கு உளவள அலுவலர்களாக பட்டதாரிகளை இணைப்பதற்கு நடவடிக்கை!

## நாடாளுமன்றில் அமைச்சர் கருணாதிலக தெரிவிப்பு

இலங்கையின் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் நிலவுகின்ற உளவள அலுவலர்களுக்கான வெற்றிடங்களை வேலையற்ற பட்டதாரிகளைக் கொண்டு நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

-இவ்வாறு அமைச்சர் கஜந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

நாட்டின் சகல பாடசாலைகளுக்கும் பட்டதாரிகளை உளவள அலுவலர்களாக இணைத்துக்கொள்கின்றமை தொடர்பில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா மஹ்ரூப் முன்வைத்த தனிநபர் பிரேரணை மீதான விவாதத்துக்கு கல்வியமைச்சு சார்பில் பதில் வழங்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இதன்படி நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளில் 2 ஆயிரத்து 703 உளவள அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன. இவற்றை நிரப்ப விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

இதற்காக 3 மாத விசேட பயிற்சிகளுடனேயே பட்டதாரிகளை உள வள அலுவர்களாக இணைத்துக்கொள்ளத்தீர்மானிக்கப்பட்டுள்ளது.இதன்முதற்கட்டமாக அவர்களை மாகாண பாடசாலைகளுக்கு அனுப்பி மூன்று மாத பயிற்சி வழங்கப்படும். மேலும், சேவையில் இணைக்கப்பட்ட பட்டதாரிகள் 5 வருடங்களுக்கு தேசிய கல்வி நிறுவகத்தில் மேற்படி விடயம் தொடர்பில் பாடநெறியை தொடர்வதற்கும் வாய்ப்புகள் வழங்கப்பட உள்ளன. இதன்படி இந்த நியமனங்களை வழங்குவதற்கு 13 ஆம் திருத்தச்சட்டத்துக்கு அமைவாக மாகாணசபைகளுக்கு அதிகாரம் உண்டு. -என்றார். (ச)

# சட்டமா அதிபர் திணைக்களம் மீது விளக்கமின்றிய குற்றச்சாட்டுகள்

## மேலதிக பிரதி சொலிஸ்சிட்டர் ஜெனரல் அதிருப்தி

சட்டமா அதிபர் திணைக்களம் தொடர்பில் எந்தவித புரிதலும் இன்றியே குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன என்று மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் யசந்த கோத ா கொட தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை செய்து வரும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் முன்னிலையாகி விசேட அறிக்கை ஒன்றை முன்வைத்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி குற்றச்சாட்டின் பிரதான சந்தேகநபராகக் கருதப்படும் அர்ஜுன் அலோசியஸின் கையடக்கத் தொலைபேசியின் அனைத்து தொடர்பாடல்களும் பீ.டி.எவ். ஆக மாற்றப்பட்டுள்ளன.

இதற்கமைய எவர் வேண்டுமானாலும் தங்களுக்குத் தேவையான வார்த்தைகளைப் பயன்படுத்தி அவை தொடர்பான தகவல் பறிமாற்றத்தை அறிந்து கொள்ள முடியும்.

இந்தத் தொழில்நுட்ப முறைமையைக் கொண்டே முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் பெயர் அடங்கிய 25 பக்கங்களைக் கொண்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

ஆனால், இந்தத் தொழில்நுட்பம் தொடர்பில் எந்தவித புரிதலும் இன்றி 8 ஆயிரத்து 600 பக்கங்களைக் எவ்வாறு சட்டமா அதிபர் திணைக்களம் 48 மணித்தியாலத்துக்குள் விசாரணை செய்து முடித்தது என்று குற்றம் சாட்டப்படுகின்றது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள் தமது கடமையை செவ்வனே நிறைவேற்றி வருவகின்றமையால் பாதிக்கப்பட்டுள்ள தரப்பினர் ஆத்திரமடைந்து சட்டமா அதிபர் திணைக்களத்தின் மீது பழி போடும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். - என்றார்.

**கழிவுகளைத் தரம் பிரித்து அகற்றிடுவோம்!**

கழிவுகளை அதற்கான நிறக் குறியீட்டுக் கூடைகளிலோ/பைகளிலோ சேகரித்து வினைத்திறனுடன் மீள் சுழற்சிக்கு உதவிடலாம். நேரமும் மீதப்படுத்தப்படும்.

- கண்ணாடிக் கழிவுகள் – சிவப்பு நிறக் கூடை
- கடதாசிக் கழிவுகள் – நீல நிறக் கூடை
- பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுகள் – செம்மஞ்சள் நிறக் கூடை
- இலத்திரனியல் கழிவுகள் – கறுப்பு நிறக் கூடை
- உக்கக்கூடிய கழிவுகள் – பச்சை நிறக் கூடை




நகர்ச் சுத்தம் நலம் தரும்

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ். மாநகரசபை.

## நாளை

14.08.2017
திங்கட்கிழமை

நட்சத்திரம் : பரணி பி.இ. 3.32வரை
திதி : ஸப்தமி மா. 6.26 வரை

சுபநேரம் : 12.05 – 1.35 வரை
இராகுகாலம் : 7.35 – 9.05 வரை

## பிரிவினைகள் இன்றி நம்பிக்கையுடன் வாழ்வதற்கான

# உரிமையை உறுதி செய்வதுதான் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு



### ஜனாதிபதி மைத்திரி யோசனை

கொழும்பு, ஓக.13

பிரிவினைகள் மற்றும் சந்தேகங்களின்றி சமூகத்தில் அனைவரும் நம்பிக்கையுடன் வாழ்வதற்கான உரிமையை உறுதி செய்வதனூடாகவே சமூக மற்றும் இன அடிப்படையிலான சகல பிரச்சினைகளுக்குமான தீர்வுகளைக் காணலாம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மாத்தறை வெஹெர ஹேன பூர்வாராம ராஜமகா விகாரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரை யாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வேற்றுமையை இல்லாதொழித்து அனைவரும் புரிந்துணர்வுடனும், நம்பிக்கையுடனும் செயற்படும் சமூகம் ஒன்றைக்கட்டியெழுப்புவதற்கு அனைவரும் பிரிவினைகளின்றி ஒன்றுபட வேண்டும்.

உன்னதமான பிக்குகள் சமூகத்தின் கௌரவத்தை யும், நன்மதிப்பையும் பாது காக்கும் வகையில் அவர்கள் செயற்பட வேண்டும்.

ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணிகளில் சில இளம் பிக்குமார்கள் நடந்து கொள்ளும் விதம் ஊடகங்களினூடாக உலகம் முழுவதும் காண்பிக்கப்படுகின்றமையால் பிக்குகள் தொடர்பாக மக்களிடம் ஏற்படக் கூடிய தவறான எண்ணங்களைத் தவிர்க்க முடியாது.- என்றார்.

# ரோஹிங்யா அகதிகள் விடுவிக்கப்பட்டு இரத்மலானையில் தங்க வைப்பு



மிரிஹான தடுப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த மியன்மார், ரோஹிங்யா அகதிகள் 32 பேரும் விடுவிக்கப்பட்டு இரத்மலானையில் அமைந்துள்ள வீடொன்றில் தங்கவைக்கப் பட்டுள்ளனர்.

அந்த அகதிகளுக்கு வேறொரு நாட்டில் புகலிடம் பெற்றுக் கொடுக்கும் வரை கல்கிஸ்ஸை பகுதிக்கு மாற் றும் நடவடிக்கையில் ஐ.நா. சபையின் யூ.என்.எச்.சி.ஆர். நிறுவனம் நடவடிக்கை எடுத்து உள்ளது.

மியன்மார் ரோஹிங்யா அகதிகள் படகில் தத்தளித்த நிலையில் இலங்கை வடக்கு கடல் எல்லையில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் விரைவில் மருத்துவ பட்டப்பின் படிப்பு டிப்ளோமா



வட மாகாண மருத்துவர்களுக்கான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா கற்கை நெறிகளை யாழ். பல்கலைக் கழகத்தை நிலையமாகக் கொண்டு ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சில் இடம் பெற்ற வடமாகாண மருத்துவர் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன நடத்திய சந்திப்பில் இதுதொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. இதற்கு உயர்கல்வி அமைச்சும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவும் இணக்கம் தெரிவித்துள்ளன.

வடக்கின் வைத்திய சாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக 900 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று இதன்போது அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (எ)

# பூநகரியில் குடிதண்ணீருக்கு பற்றாக்குறை; பூர்த்தி செய்ய மேலும் 30 ஆயிரம் லீ.தேவை

### பிரதேச செயலாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஓக 13

மக்களின் குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்ய மேலும் 30 ஆயிரம் லீற்றர் குடிதண்ணீர் பூநகரிப் பிரதேசத்துக்குத் தேவைப்படுகிறது என்று பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வறட்சியின் தாக்கத்தால் கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்டு இருக்கும் பெரிய பிரச்சினையாக காணப்படுவது குடிதண்ணீர்ப் பிரச்சினையாகும். மாவட்டத்தின் பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவு குடிதண்ணீரில் அதிகளவு பாதிப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவு ஆகும்.

பூநகரிப்பிரதேச செய லாளர் பிரிவில் உள்ள 15 இற்கும் அதிகமான கிராமங்கள் முற்றாக குடிதண்ணீர் இன்றிக் காணப்படும் பிரதேசங் களாக உள்ளன. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மற்றும் பூநகரிப் பிரதேச சபை ஆகியவற்றுடன் இணைந்து வறட்சியால் பாதிக்கப்பட்ட 5 ஆயிரத்து 604 குடும்பங்களில் 2 ஆயிரத்து 160 குடும்பத்தினருக்கு மாத்திரம் எங்களால் குடி தண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் 3 ஆயிரத்து 144 குடும்பங்களுக்கான குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாமல் உள்ளது.- என்றார். (எ)

# வவுனிக்குள ஏற்று நீர்ப்பாசனத்தை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும்

### அந்தத் திணைக்களம் கோரிக்கை

முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் கீழ் உள்ள ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை விவ சாயிகள் பயன்படுத்துவதற்கு எதிர்காலத்தில் முன் வர வேண்டும் என்று நீர்ப்பாசனத் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பெரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான வவுனிக்குளத்தின் கீழ் இடது கரை, வலது கரை நீர்ப்பாசன வாய்க்கால்களை அண்டிய வகையில் உள்ள குடியேற்றத் திட்டங்களில் மேட்டு நிலப் பயிர் செய்கைகளை ஊக்குவிக்கும் வகையில் 20 இற்கும் மேற்பட்ட ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்கள் இருந்தன.

1990ஆம் ஆண்டு போர் காலத்தில் அனைத்து ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்களும் செயலிழந்து போயுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருந்தும் 1994ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் பாண்டியன்குளம் பகுதியில் உள்ள நீர்ப்பம்பி மூலம் குறிப்பிட்ட பகுதிகளில் மேட்டு நிலப் பயிர்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தொடர்போர், பொருளாதாரத் தடை காரணமாக அதுவும் செயலிழந்து போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டு மீள் குடியேற்றத்தின் பின்னர் 30 வருடங்களுக்கு மேலாக எந்தவித புனரமைப்புப் பணிகளும் இன்றி பராமரிப்பு வேலைகள் மாத்திரம் செய்யப்பட்டு வந்த குளம் புனரமைக்கப்பட்டதுடன் அதன் நீர்க்கொள்ளளவும் அதிகரிக்கப்பட் டுள்ளது.

இந்தநிலையில், முன்னர் போன்று ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தைநடைமுறைப்படுத்தி தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இது தொடர்பில் வவுனிக் குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் கருத்துத் தெரிவிக்கையில்-

'வவுனிக்குளத்தின் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் அந்தக் குளத்தின் கீழ் உள்ள செல்வபுரம், பாண்டியன்குளம், ஆகிய பகுதிகளில் ஏற்று நீர்ப்பாசனத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அதனை விவசாயிகள் எவரும் பயன்படுத்தாத நிலையில் செயலிழந்து காணப்படுகின்றன.

விவசாயிகள் கோரிக்கைகளுக்கு அமைவாக பெருந் தொகை நிதிகளைச் செலவிட்டு இவ்வாறான திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற போதும் அதனை விவசாயிகள் பயன்படுத்தாமல் இருக்கின்றனர்'.-என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வன்னேரிக்குளம் அணைக்கட்டு திருத்த வேலைகள் ஆரம்பம்

கிளிநொச்சி, வன்னேரிக்குளம் அணைக்கட்டுக்கான திருத்த வேலைகள் மாகாணத்துக்கென குறித்தொதுக்கப்பட்ட 30 லட்சம் ரூபா நிதியின் கீழ் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

கிளிநொச்சியில் காணப்படும் பெரிய நீர்ப்பாசனக்குளங்களில் ஒன்றாகக் கருதப்படும் வன்னேரிக் குளத்தின் கீழ் 346 ஏக்கர் நிலப்பரப்பில் 115 வரையான விவசாயக் குடும்பங்கள் விவசாயச் செய்கையை மேற்கொண்டு வருகின்றன.

இந்த நிலையில், அந்தக்குளத்தின் அணைக் கட்டு மற்றும் நீர்ப்பாசன வாய்க்கால்கள், கழிவு வாய்க்கால்கள் என்பன பல காலங்களாகச் சேதமடைந்து காணப்படுகின்றன.

இவ்வாறு சேதமடைந்த நிலையில் காணப்படும் இந்த குளத்தின் புனரமைப்பு வேலைகள் தற்போது பல்வேறு நிதித்திட்டங்கள் மூலம் மேற்கொள் ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

# அச்சத்தின் மத்தியில் வசிக்கும் துணுக்காய் குடியிருப்பு மக்கள்



## காட்டு யானை தொல்லையால்

முல்லைத்தீவு - துணுக்காய் குடியிருப்புப் பகுதியில் உள்ள குடியிருப்பு வீதிகள் புனரமைக்கப்படாமை மற்றும் காட்டு யானைகளின் தொல்லையால் அங்கு வாழும் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பல துன்பங்களை அனுபவித்து வருகின்றன என்று பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள துணுக்காய் குடியிருப்புப் பகுதியில் தற்போது நூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்த நிலையில், குடியிருப்பின் பிரதான வீதியாகக் காணப்படும் துணுக்காய் கோட்டைகட்டியகுளம், வீதி மாத்திரமே புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள போதும், அந்த வீதியிலிருந்து குடியிருப்புக்களுக்குச் செல்லும் எந்த வீதியும் புனரமைக்கப்படாது காணப்படுகின்றன.

இதனால் வீதியைப் பயன்படுத்தும் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், முதியோர் எனப் பலர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனை விட தினமும் அந்தப் பகுதிகளில் காட்டு யானைகளின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதனால் தினமும் தாங்கள் அச்சத்துடன் வாழ வேண்டிய ஒரு சூழ்நிலையே காணப்படுகின்றன என பிரதேச மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு வாழ்ந்து வரும் குடும்பங்கள் தமது கிராமத்தில் உள்ள குடியிருப்பு வீதிகளைப் புனரமைத்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, இவ்வாறு வாழ்ந்து வரும் குடும்பங்கள் அன்றாடம் கூலி வேலை செய்தே வாழ வேண்டிய நிலையில் அங்குள்ள பல குடும்பங்களுக்கு சமுர்த்திக் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளன.

தற்போதைய வறட்சியால் கூலி வேலை எதனையும் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது எனவும் மக்கள் கூறியுள்ளனர்.

அத்துடன், வீதிகள் புனரமைக்கப்படாமை, தொழில் வாய்ப்பின்மை, குடிதண்ணீர்ப் பிரச்சினை எனப் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் காட்டு யானைகளின் தொல்லையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதற்கான தீர்வைப் பெற்றுத்தர உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

## திருமலையில் சிறுமியை வன்புணர்ந்த சிறுவன் கைது!



மொறவெவ, ஓக.13

திருகோணமலை மொறவெவ - குணவர்த்தனபுரப் பகுதியில் 6 வயதுச் சிறுமி ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய சிறுவன் ஒருவனை, நேற்று வெள்ளிக்கிழமை திருகோணமலைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அதே பகுதியைச் சேர்ந்த 16 வயதுச் சிறுவன் ஒருவனே மேற்படி சிறுமியை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமி திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சிறுவனை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

## உமா ஓயா திட்டத்துக்கு எதிரான மனு; விசாரணை செப்.29 இற்கு ஒத்திவைப்பு!




உமா ஓயா திட்டத்தை உடனடியாக கைவிட உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு விசாரணையை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 29 ஆம் திகதிக்கு உயர் நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

உமா ஓயா திட்டத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவை, நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொண்டபோதே உயர் நீதிமன்றம் இந்த அறிவிப்பை விடுத்தது.

உமா ஓயா நீர் மின் திட்டத்தால் சுற்றுச் சூழல் பாதிப்புக்கள் ஏற்படும். மேலும், அந்தப் பகுதியில் வாழும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் சொந்த இடங்களை விட்டு வெளியேற நேரிடும் என்பன போன்ற காரணங்களைச் சுட்டிக்காட்டியே உமா ஓயா திட்டத்தை கைவிடுமாறு கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

மேலும், நோர்வேயிலிருந்து வந்திருந்த விசேட நிபுணர்கள் நடத்திய ஆய்வுகளின் முடிவுகளுக்கு அமைய உமா ஓயா திட்டத்தால் சுற்றுச் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் தொடர்பில் முறையாக ஆராயப்படவில்லை என மனுதாரர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதேவேளை, இந்த மனு தொடர்பில் தங்களுக்கும் கருத்துக்களை தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்குமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினர் அனுமதி கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## குச்சவெளியில் விபத்து: இளைஞர் உயிரிழப்பு!

குச்சவெளி, ஓக. 13

திருகோணமலை குச்சவெளி பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை மோட்டார் சைக்கிள் மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில், இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும், ஒருவர் படுகாயமடைந்தார்.

புடவைக்கட்டுப் பகுதியைச் சேர்ந்த அன்வர் முகம்மட் சஜித் (வயது- 24) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். அதே இடத்தைச் சேர்ந்த நளார் பெளஸ் (வயது -19) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

இவர்கள் கடற்றொழிலுக்குச் செல்வதற்காக திருகோணமலையில் இருந்து புடவைக்கட்டுப் பகுதிக்கு வேகமாக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்து தொடர்பான விசாரணைகளைக் குச்சவெளிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச)

### அதிபர் சேவை 2 ஆம், 3 ஆம் வகுப்பினருக்கு

## வினைத்திறமை காண் தடைதாண்டல் பரீட்சைக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது கல்வி அமைச்சு!

இலங்கை அதிபர் சேவை 2 ஆம் 3 ஆம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடை தாண்டல் பரீட்சைக்கான விண்ணப்பங்களை கல்வி அமைச்சு கோரியுள்ளது.

இந்தப் பரீட்சை எதிர்வரும் டிசெம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது. இல. 1885.31 மற்றும் 2014.10.22 ஆம் திகதிய இலங்கை அதிபர் சேவை பிரமாணக் குறிப்புக்கு அமைவாக இந்தப் பரீட்சை நடத்தப்பட உள்ளது என கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராய்ச்சி அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-,

இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் தர உத்தியோகத்தர்களுக்கு மூன்று பாடங்களிலும், 3 ஆம் தர உத்தியோகத்தர்களுக்கு இரண்டு பாடங்களிலும் பரீட்சை இடம்பெறும்.

முழுப் பாடங்களுக்குமான பரீட்சைக் கட்டணம் 500 ரூபா ஆகும். இந்தப் பரீட்சைக்குவிண்ணப்பிப்பதற்கான முடிவு திகதி செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி ஆகும்.

இதற்கு முன்னர் இல. 1086.26 மற்றும் 1990.07.02 ஆம் திகதிய இலங்கை அதிபர் சேவையின் பிரமாணக் குறிப்பிற்கமைவாக இடம்பெற்ற வினைத்திறமை காண் தடை தாண்டல் பரீட்சையில், பாடசாலையின் நிர்வாகம் மற்றும் மேற்பார்வை பாடத்தில் சித்தியடைந்த உத்தியோகத்தர்கள் கல்வி அமைச்சின் சுற்றறிக்கை இல.33.201 இற்கு அமைவாக இரண்டாவது வினைத்திறமை காண் தடை தாண்டல் பரீட்சையில் பாடசாலை நிர்வாகம் மற்றும் மேற்பார்வை பாடத்தில் சித்தியடையும் தேவையில் இருந்து விடுவிக்கப்படுவர் .

இது தொடர்பில் மேலதிக தகவல்களை ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி வெளியான வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்கலாம். சகல பரீட்சாத்திகளுக்குமான பெறுபேறுகள் www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக வெளியிடப்படும். தனிப்பட்ட முறையிலும் அனுப்பி வைக்கப்படும் .-என்றார். (ச)

# 20 ஆவது சட்டவரைவுக்கு கூட்டமைப்பு ஆதரவில்லை!



## அடித்துக் கூறுகிறார் சுமந்திரன்

கொழும்பு, ஓக 13

அரசால் முன்வைக்கப்பட்டுள்ள அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்ட வரைவின் தற்போதைய வடிவத்துக்கு எந்தவொரு சூழ்நிலையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு அளிக்காது என்று கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மாகாணசபைகளைக் கலைக்கும் அதிகாரத்தை நாடாளுமன்றத்துக்கு வழங்கும் இந்தத் திருத்தச் சட்ட மூலம் தொடர்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு பேச்சு நடத்தவில்லை.

இது தொடர்பாக அரசுடன் எந்த இணக்கப்பாடும் ஏற்படுத்தப்படவில்லை.

இந்தச் சட்டவரைவு தொடர்பாகக் குறிப்பிட்ட காலத்துக்குள் அரசியல் கட்சிகளுடன் தீவிரமான கலந்துரையாடல்களை நடத் துவதன் மூலம், இலங்கை அரசு தேவையற்ற பிரச்சினை களைத் தவிர்க்கலாம்.

ஏனைய கட்சிகளின் ஒப்புதலுடன், இந்தச்சட்டவரைவை அரசு மீண்டும் அறிமுகப்படுத்தினால் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு அதற்கு ஆதரவாக நிச்சயம் வாக்களிக்கும்.

மாகாணசபைத் தேர்தலைபிற்போடுவதற்காக மாத் திரமே இந்தச் சட்டத் திருத்தவரைவைக் கொண்டு வருவதை ஏற்க முடியாது.

20 ஆவது திருத்தச்சட்டவரைவை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதற்கு, 16 உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு முக்கியமாகும். -என்றார்.(எ)

## மீண்டும் அரசியலில் குதிக்கவுள்ளார் நெவில் பெர்ணான்டோ

தான் மீண்டும் அரசியலுக்குள் பிரவேசிக்க எதிர்பார்க்கிறார் என்றும் எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் முன்னணிக் கட்சியொன்றில் வேட்பாளராகப் போட்டியிடவுள்ளார் என்றும் சைட்டம் மருத்துவக் கல்லூரியின் தலைவர் வைத்தியர் நெவில் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தான் மக்களுக்குச் செய்யும் சேவையின் அடிப்படையில் அரசியலுக்கு வருவதற்கான உரிமை தனக்கு உள் ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பல கோடி ரூபா செலவு செய்து அமைக்கப்பட்ட நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலையை அரசுக்கு நன்கொடையாக வழங்க முன் வந்தேன். இது மக்களுக்குச் சேவை செய்வதற்காகவே ஆகும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தேசிய லொத்தர் சபைகளை பொறுப்பேற்க மாரப்பன மறுப்பு



வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்க திலக் மாரப்பன இணங்கியுள்ளார். எனினும், அவர் தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை என்பனவற்றைப் பொறுப்பேற்க மறுத்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

நிதி அமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்க அண்மையில் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டபோது, ஏற்கனவே தன்வசம் இருந்த தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை ஆகிய அரச நிறுவனங்களும் தனது பொறுப்பின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் என்று நிபந்தனை விதித்திருந்தார்.

அதற்கமைய நிதி அமைச்சின் பொறுப்பில் இருந்த இந்தத் துறைகள், வெளிவிவகார அமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்கவுக்கு மாற்றிக் கொடுக்கப்பட்டன.

இந்தநிலையில் மத்திய வங்கி பிணை முறி சர்ச்சையை அடுத்து. வெளிவிவகார அமைச்சர் பதவியை விட்டு ரவி கருணாநாயக்க விலகியுள்ளார்.

இதனால் புதிய வெளிவிவகார அமைச்சராக திலக் மாரப்பன நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், அவர், தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை ஆகிய நிறுவனங்களை தமது பொறுப்பில் எடுத்துக் கொள்ள மறுத்துவிட்டார் என்று கூறப்படுகிறது.

இதையடுத்து மீண்டும் இந்த நிறுவனங்கள் நிதி அமைச்சின் கீழ் கொண்டு வரப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராக ரவி கருணாநாயக்கவின் மைத்துனர் ரொமேஸ் ஜெயவர்த்தன இருக்கும் அதே சமயம், தேசிய லொத்தர் சபை தலைவராக அவரது உறவினர் ஒருவரே பதவியில் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# நீதி அமைச்சரை பதவி நீக்குவதற்கு ஐ.தே.க.தலைமைப்பீடம் தீர்மானம்



## ஜனாதிபதியிடம் கோரவுள்ளனராம் ஆங்கில ஊடகம் தகவல்

கொழும்பு, ஓக 13

நீதி மற்றும் பௌத்த சாசன அமைச்சர் பதவியில் இருந்து விஜேதாச ராஜபக்ஷவை நீக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோருவதற்கு, ஐக்கிய தேசியக் கட்சி தலைமைப்பீடம் முடிவு செய்திருப்பதாகக் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் அந்த ஊடகம் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ மீது ஐ.தே.கவினர் பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சுமத்தியுள்ளனர்.

குறிப்பாக, அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான முடிவை விமர்சித்தனர். அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை மீறியமை, அவரது அமைச்சின் கீழ் உள்ள சட்டமா அதிபர் திணைக்களம் ராஜபக்ஷக்களுக்கு எதிரான நீதிமன்ற விசாரணைகளை இழுத்தடிக்கின்றமை, ரவி கருணா நாயக்க விடயத்தில், சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூத்த சட்டவாளர் நடந்து கொண்ட முறை போன்ற விடயங்கள் தொடர்பாக விஜேதாச ராஜபக்ஷ மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட ஐ.நா. அதிகாரி ஒருவரை அவர் விமர்சித்ததும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ரவி கருணாநாயக்க பதவியை விட்டு விலகியமையும், நாடாளுமன்றத்தில் உள்ள பிரதமரின் செயலகத்துக்குச் சென்ற அமைச்சர்களான ராஜித சேனாரத்ன மற்றும் சுஜீவ சேனசிங்க ஆகியோர் விஜேதாச ராஜபக்ஷவை பதவி நீக்க வேண்டும் என்று கோரினர்.

அவர்களுடன் சென்ற பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹர்சன ராஜகருண, ஹெக்டர் அப்புகாமி, அசோக பிரியந்த, சாந்த அபேசேகர, சந்திப சமரசிங்க, சமிந்த விஜயசிங்க, கவிந்த ஜெய வர்த்தன, துசித ஜெயமான போன்றவர்களும் விஜேதாச ராஜபக்ஷ தொடர்பில் கடுமையான விமர்சனங்களை முன்வைத்ததுடன், அவரை பதவி நீக்க வேண்டும் என்றும் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரியிருந் தனர்.-என்றுள்ளது.

இந்தநிலையில், விஜேதாச ராஜபக்ஷவைப் பதவியில் இருந்து நீக்குமாறு ஜனாதிபதியிடம் அடுத்த வாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேட்டுக் கொள்வார் என்று ஐ.தே.கவின் பின் வரிசை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். (எ)

# நீதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்க முடியாது



## முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு

நீதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்கப்படமாட்டாது என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மினுவன்கொட பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று திரும்பியபோது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இத னைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விஜேதாச ராஜபக்ஷவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு தரமாட்டோம், அவர் ஊர்க்காரர் தானே. அவர் உள்ளே போராட்டத்தை நடத்த வேண்டும் அதற்கு ஆதரவளிக்கப்படும்.

மேலும், மோட்டார் போக்குவரத்து விதி மீறல்களுக்கான அபராதம் குறித்தும் இதன் போது கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

குடிபோதையில் வாகனம் செலுத்துவோருக்கு அபராதம் விதிப்பதில் தவறில்லை. எனினும் சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி போன்றவற்றை மறந்து வைத்துவிட்டு வந்தவர்களுக்கு பெரிய தொகை அபராதம் விதிப்பது நியாயமில்லை. குறிப்பாக ஓட்டோச் சாரதிகளுக்கு அவ்வளவு பெரிய தொகையைச் செலுத்த முடியாது.-என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir



# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

13.08.2017 - 19.08.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆடித் திங்கள் 29 ஆம் நாள் ஷஷ்டித் திதி இரவு 09.32 மணி வரை. பின்னர் ஸப்தமி. நட்சத்திரம்: அசுவினி பி.இ.05.04 மணி வரை. பின்னர் பரணி. மரணயோகம் பி.இ. 05.04 மணி வரை. பிறந்த நட்சத்திர வழிபாடு: அசுவினி.

ராகுகாலம்:- மாலை 4.54 மணி முதல் 6.27 மணி வரை.

சுபநேரம்:- காலை 9.05 மணி முதல் 10.34 மணி வரை.

திவசம் செய்ய வேண்டிய திதி:- ஆடி மாத தேய்பிறை ஷஷ்டி.

**சந்திராட்டமநாள்:** உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்களில் பிறந்தோர் இன்று சுப கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

**கணிப்பு: 'ஜோதிடமணி' பிரம்ம ஸ்ரீ சி.ஜெகதீஸ்வரக்குருக்கள் ஜே.பி.**

## மேஷம்:

நன்மையான வாரம் ஆகும். உத்தியோகத்தில் பதவி உயர்வும், மதிப்பும், மரியாதையும் ஏற்படும். செய்தொழில் வியாபாரத்தில் நல்ல ஆதாயம் கிடைக்கும். ஆரோக்கியம், செல்வம், செல்வாக்கு அதிகரிக்கும். நினைத்த காரியங்கள் நடந்தேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

வெளிநாட்டுத் தொடர்புகளால் எதிர்பாராத நன்மை உண்டாகும். திருமண காரியங்கள் பலிதமடையும். புதிய தொடர்புகளால் புதிய தொழில்கள் அமைத்தல் ஆகியன நிறைவேறும். விவசாயிகளுக்கு அரசின் புதிய சலுகைகள் நன்மையுண்டாகும்.

## ரிஷபம்:

யோசனையான வாரம் ஆகும். ஆரோக்கியம் கெடும். குடும்ப உறவில் சலசலப்பு இருக்கும். விரோதிகளால் சிக்கல் உருவாகும். பொருள் இழப்பும், வீண் அலைச்சலும் மன வேதனை தரும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கெடுபிடிகள் இருக்கும். பிள்ளைகளால் வீண் வம்பு, வழக்குகள் உண்டாகும். நண்பர், உறவினர்களுடன் விரோதம் உண்டாகும்.

கடன் தொல்லையால் மனக் கவலை ஏற்பட்டு விலகும். எதிர்பாராத விபத்துக்கள் ஏற்பட்டு பணம் விரயமாகும். தாயாரின் உடல்நிலை பாதிக்கப்படும்.

## மிதுனம்:

மகிழ்ச்சியான வாரம் ஆகும். செய்தொழில் வியாபாரம் லாபகரமாக இருக்கும். பெண்களால் தன வரவு உண்டாகும். வீடு, காணி வாங்கி மகிழ்வார்கள். லொத்தர் பந்தயம் மூலம் நல்ல ஆதாயம் கிடைக்கும். மேலதிகாரிகளின் ஆதரவும், பதவி உயர்வும் கிடைக்கும்.

விரோதிகளும் நண்பர்களாக மாறுவார்கள். எதிரிகளின் தொல்லை மறையும். உறவினர், நண்பர்களின் உதவி கிடைக்கும். வெளிநாட்டுப் பயணமுயற்சி வெற்றி அளிக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். புதிய நண்பர்களின் சேர்க்கை நன்மையைத் தரும்.

## கடகம்:

மத்திமமான வாரம் ஆகும். பண விரயம், வீண் அலைச்சல் உண்டாகும். தொழிலில் மறைமுக எதிர்ப்புகள் அதிகரிக்கும். சுபகாரியம் நிறைவேறி, புதிய கடன் சுமை உருவாகும். விபத்து, ஆயு தங்களால் காயங்கள் ஏற்படும். எச்சரிக்கை தேவை. வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும்.

குடும்பத்தில் மனத்தாங்கல் உண்டாகி விலகும். காரிய தாமதம் ஏற்படும். நண்பர்கள், உறவினர்களின் உதவி நன்மை தரும். வியாபாரத்தில் மத்திம லாபம் கிடைக்கும். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை.யாருடனும் கவனமாகப் பழகுதல் வேண்டும்.

## சிம்மம்:

ஆக்கபூர்வமான வாரம் ஆகும். வீடு, நிலம் வாங்கும் சந்தர்ப்பம் கனிந்து வரும். மன நிம்மதி ஏற்படும். எதிர்பாராத வகையில் பணம் வரும். நண்பர்கள் உறவினர்கள் நெருக்கமானவர்கள். குடும்ப உறவு மகிழ்ச்சிகரமாக இருக்கும்.

உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவும், உதவியும் கிடைக்கும். உறவினர்களுடன் விருந்துகள் அடிக்கடி நடைபெறும். பெரியோர்கள் சந்திப்பும், உதவியும் கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடந்தேறும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றி நல்ல பெயர் எடுப்பார்கள்.

## கன்னி:

அலைச்சல் மிகுந்த வாரம். சுயதொழில் புரிபவர் கள் நிறைய அலைய வேண்டி வரும். சிலருக்கு உடலில் ரோகங்கள் உண்டாகி, மருத்துவ உதவியை நாடுவார்கள். மாணவர்கள் சிலர் உயர் கல்வி நிமித்தம் வெளிநாடு செல்ல எண்ணி, ஏஜென்சியின் உதவியை நாடுவார்கள்.

உத்தியோகத்தில் இடமாற்றத்தால் குடியிருக்க வாடகை வீடு தேடி அலைவார்கள். தொழிலாளர்கள் வேலை வாய்ப்பைத் தேடி அலைவார்கள். வியாபாரிகள் தம் வியாபாரத்தை விரிவு படுத்த எண்ணி வங்கிகளின் உதவியை நாடுவார்கள்.

## துலாம்:

சமபலன்கள் உள்ள வாரம் ஆகும். குடும்ப அபிவிருத்தியில் எதிர்பார்த்த சௌகரியங்களும், பண வசதியும் குறையும். சொத்து விவகாரங்கள் தாமதப்படும். உடல் நலத்தில் கவனம் தேவை. தாய், தந்தையரின் ஒத்துழைப்பு ஓரளவு இருக்கும்.

வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் குறையும். நண்பர்கள் மாறுபட்டு நடந்தாலும் தக்க சமயத்தில் உதவிக் கரமாக இருப்பார்கள். மாணவர்கள் கடும் முயற்சியால் கல்வியில் முன்னேற்றமடைவார்கள். தொழில் உத்தியோகத்தில் எத்தகைய சிரமங்களையும் சமாளித்துக் கொள்வார்கள்.

## விருச்சிகம்:

அனுகூலமான வாரம் ஆகும். தொழில், வியாபாரம் முன்னேற்றமடையும். குடும்பத்தில் போதிய சௌகரியங்களும், பண வசதிகளும் திருப்தி அளிக்கும். ஸ்திர சொத்து விவகாரங்கள் அனுகூலமடையும்.

புண்ணிய தல யாத்திரைகளை மேற்கொள்ள நேரும். திருமண பிராப்தி சித்திக்கும். பொதுத் தொண்டில் நன் மதிப்பும் ஏற்படும். போட்டி, பந்தயங்களால் திடீர் தனப் பிராப்தி ஏற்படும். வாகன வசதியும், விவசாயத்தில் அபிவிருத்தியும் நூதன ஆடை, ஆபரண சேர்க்கையும் ஏற்படும்.

## தனுசு:

மேன்மையான வாரம் ஆகும். பணவரவு நன்றாக அமையும். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். தேகாரோக்கியத்தில் மேன்மையும் சுறுசுறுப்பும் இவர்களின் செயற்பாடுகளை விறுவிறுப்பாக்கும். உடன் பிறந்த சகோதரரால் அனுகூலம் உண்டாகும்.

குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். தொழில் வியாபாரம் எதிர்பார்த்தபடி வளர்ச்சி பெறும். உத்தியோகத்தர்களுக்கு நன்மையும், மேன்மையும் உண்டாகும். கலைஞர்களுக்கு வரவும் பாராட்டும் சிறப்பாக இருக்கும். மாணவர்களின் படிப்பு, போட்டி, பந்தயம் வெற்றியைத் தரும்.

## மகரம்:

சஞ்சலமான வாரம் ஆகும். பண வரவு குறையும். குடும்பத்தில் சிறு சலசலப்பு உண்டாகும். பெண்களால் அவப் பெயர் உண்டாகும். தந்தையுடன் கருத்து வேறுபாடு ஏற்படும். பூர்வீகச் சொத்து வழக்கு கவலையளிக்கும். வியாபாரம் நட்டமடைந்து கவலையைத் தரும்.

கொடுக்கல், வாங்கலில் அதிக கனவம் தேவை. விவசாயிகளுக்கு கால் நடைகளால் பாதிப்பு ஏற்படும். தொலை தூரச் செய்தி பாதிப்பை தரும். பணவரவு ஓரளவு இருந்த போதிலும் அவ்வப்போது சிறு தேவைகளுக்குக் கூட கடன் வாங்க நேரிடும்.

## கும்பம்:

மத்திமமான வாரம் ஆகும். வருமானம் சுமாராக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் பிரச்சினையைத் தரும். எதிரிகளால் பாதிப்பு ஏற்பட்டு விலகும். புதிய கடன் சுமை ஏற்க நேரிடும். உறவினர், நண்பர்கள் வருகை செலவை அதிகரிக்கும். சிலருக்கு வீடு கட்டுவதில் புதிய பிரச்சினைகள் தோன்றி மறையும்.

தொழில் வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். அரசியல்வாதிகளால் குழப்பம் ஏற்பட்டு விலகும். சுபகாரியம் தள்ளிப் போகும். வீண் சந்தேகம் சண்டை சச்சரவுகள் குடும்ப உறவைப் பாதிக்கும். சிலருக்கு வாகனத்தால் வீண் செலவுகள் ஏற்படும்.

## மீனம்:

கீர்த்தியான வாரம். பண வரவு தாராளமாக இருக்கும். தொழில் வியாபாரிகள் புதிய கூட்டு ஒப்பந்தங்கள் புதிய தொழில்கள் மூலம் லாபமடைவார்கள். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஒத்துழைப்பும், பாராட்டும் நன்மையைத் தரும். கலைஞர்களுக்கு பரிசும், பாராட்டும் கிடைக்கும். காரியங்களில் கவனமும் வெற்றியும் அதிகரிக்கும். உடலாரோக்கியம் மேன்மை பெறும்.

சுபகாரியங்கள், திருமண காரியங்கள் நடைபெற்று மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகளால் அனுகூலம் உண்டாகும்.




# மாலை பொழுதின் மயக்கத்திலே மாவை இன்னும் உறக்கத்திலே...!

– தெய்வீகன் –

**யாழ்**.பல்கலைக்கழகத்துடன் இணைந்து உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடத்திய சர்வதேச மாநாட்டின் இரண்டாம் நாள் அமர்வின் இடையே தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா அவர்களின் பவள விழா நிகழ்வு அற்புதமாக நடைபெற்று முடிந்திருக்கின்றது.

வண்ண வண்ண மாலைகளின் நடுவே வடிவான அவரது படங்கள் ஊடகங்களில் வெளிவந்து அவரது தொண்டர்களை உச்சி குளிரவைத்திருக்கிறது. 'பிக் – போஸ்' ஓவியாவைவிட மாவை அண்ணன் அழகாக இருந்தார் – என்றுகூட கூட்டமைப்பின் அபிமானி ஒருவர் முகநூலில் படு சீரியஸாக ஒரு பதிவுபோட்டிருந்தார்.

தனது தலைவர் சம்பந்தன் அவர்கள் யாழ்ப்பாணம் வருகின்றநேரம் பார்த்து இந்த நிகழ்வை அவர் முன்பாக நடத்தி இன்புறவேண்டும் என்ற மாவை அவர்களின் ஆசை நினைத்தது போல நடந்து முடிந்திருப்பது அவருக்கு நிச்சயம் இரட்டிப்பு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கும். அடுக்கி வைத்த மாலைகளுக்கும் அங்க வஸ்திரத்துக்கும் இடையில் மக்களின் மாணிக்கமாக மின்னிய அண்ணன் தன் முன்னால் திரண்டிருந்த கூட்டத்தையும் தனக்கு அளிக்கப்பட்ட கௌரவத்தையும் பார்த்து நிச்சயம் இரண்டுதுளி ஆனந்த கண்ணீரைச் சொட்டியிருப்பார். அவர் எதிர்பார்த்ததும் அது தானே!

மாவை சேனாதிராசா.

சாதாரண மனிதரா என்ன?

சுமார் அரைநூற்றாண்டு காலத்துக்கும் மேற்பட்ட அரசியல் வாழ்வு!

இரு தசாப்த காலத்துக்கும் மேற்பட்ட நாடாளுமன்ற அனுபவம்!

மாகாணசபையினுள் ஊடுருவுகின்ற 'பதவிக்கனவுதான்' சற்று சறுக்கினாலும் உள்ளே நடைபெறுகின்ற நாடகங்களை பின்னணியிலிருந்து அரங்கேற்றுமளவுக்கு அரூப அரசியல் ஞானம் கொண்ட சாணக்கியவாதி.

தமிழர் மனங்களையும் அவர்களது தேர்தல் அரசியலையும் விரல்நுனியில் தெரிந்திருந்து வைத்திருக்கும் பேராளுமை!!

இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். அப்படியொரு அசகாய சூரர்.

தமிழர் அரசியலில் இவ்வளவு கால முதிர்ச்சியுடன் – ஆட்சிக்கு வந்த எல்லா தரப்புக்களையும் மடக்கி பொக்கெட்டுக்குள் வைத்துக்கொள்ளுமளவுக்கு – திறமையோடும் வலிமையோடும் வாழ்ந்து வளர்ந்தவர்கள் மிகச் சிலர்தான். அவர்களிலும் மிகச் சொற்பமானவர்கள்தான் இன்றுமுள்ளார்கள்.

அரைநூற்றாண்டு காலத்துக்கும் மேலாக ரத்தமும் சகதியுமாக கடந்து வந்திருக்கும் தமிழ் அரசியலில் காலெடுத்து வைப்பதென்பது தேநீர் குடிப்பதுபோல சிம்பிளான அலுவல் இல்லை என்பதை வரலாற்றைத் தெரிந்தவர்கள் சொல்லுவார்கள். கத்திமேல் நடப்பதைப் போன்றது. கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டாலும் ஓரத்தில் இருத்தி மிக்சர் சாப்பிட வைத்து விடுவார்கள். நூற்று ஒன்றாகவும் இல்லாமல் தொண்ணூற்றொன்பதாகவும் இல்லாமல் சரியாக நூறில் பயணம் செய்த 'அரசியல் விற்பன்னர்கள்தான்' இன்று தாறுமாறாக தளைத்திருக்கிறார்கள்.

அவர்களது வரிசையில் மாவை அண்ணனுக்கு என்றைக்குமே ஒரு தனி இடம் உண்டு. இப்போதைக்கு அவருக்குத்தான் முதலிடமும்கூட.

இவையெல்லாம் 'அரசியல்' என்ற ஜன்னலின் வழியாக கண்டு ரசித்து பாராட்டப்படவேண்டிய அவரது பண்புகள்.

ஆனால், மக்கள் தரப்பிலிருந்து நோக்கும்போது இவ்வாறு அரசியல் மேதாவிகளாக – அநாத ரட்சகர்களாக – தீர்வெடுக்கும் மீட்பர்களாக – மக்களால் தெரிவு செய்யப்பட்டு நாடாளுமன்றம் அனுப்பிவைக்கப்பட்டுள்ள மாவை அண்ணன் போன்றவர்களிடம் அவர்களது வாக்காளர்கள் எதிர்பார்ப்பது என்ன?

அந்த எதிர்பார்ப்புக்களில் மாவையும் அவர் தோழர்களும் இவ்வளவு காலத்தில் பயணித்திருக்கும் தூரம் எவ்வளவு?

அந்த தூரத்தை ஓடிக் களைத்த வெற்றிக்களிப்பில்தான் தற்போது பவள விழா பட்டாபிஷேகங்கள் எல்லாம் நடைபெற்றுக் கொண்ருக்கின்றனவா என்பவற்றைத்தான் இந்த பத்தி ஆராயவிருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இன்றைய பயணம் மிகக்கடுமையான பாதையில் சென்றுகொண்டிருப்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

நல்லாட்சி அரசின் கீழ் தமது சகலவிதமான பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும் என்று காத்திருந்த மக்கள் இன்று எல்லா பிரச்சினைகளுக்கும் தாங்களே வீதிக்கு வர வேண்டிய நிலையில் வாடிப் போயுள்ளார்கள். எடுத்ததெற்கெல்லாம் போராட்டம். சுதந்திரமான வாழ்க்கை முதல் சுடலையொன்றை அகற்றுவது வரை எல்லாவற்றுக்கும் போராடித்தான் நீதியை பெற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் பொதுமக்கள் வெதும்பிப்போயுள்ளார்கள். அடுத்த தேர்தலுக்கு வாக்கு கேட்டு வருப வர்களை அல்லையிலேயே போட்டு மிதிக்கும் கோபத்தோடு பாதிக்கப்பட்ட மக்கள் வீதிகள்தோறும் விரக்தியோடு காத்திருக்கிறார்கள்.

தாகத்துக்கு தண்ணீர் கேட்டு கத்திக்கொண்டிருக்கும் மக்களுக்கு 'புரியாணி போடுகிறேன் பார்' என்று சமையல் கட்டிலேயே நின்றுகொண்டிருக்கும் தங்கள் தலைவர்களை பார்த்து பார்த்து நாவறண்டு போயுள்ளார்கள் மக்கள். அவர்களின் தாகம் இன்னமும் அடங்கவில்லை என்பது தலைவர்களுக்கும் புரிவதாக இல்லை.

> **"தாகத்துக்கு தண்ணீர் கேட்டு கத்திக் கொண்டிருக்கும் மக்களுக்கு 'புரியாணி போடுகிறேன் பார்' என்று சமையல் கட்டிலேயே நின்று கொண்டிருக்கும் தங்கள் தலைவர்களை பார்த்து பார்த்து நாவறண்டு போயுள்ளார்கள் மக்கள். அவர்களின் தாகம் இன்னமும் அடங்கவில்லை என்பது தலைவர்களுக்கும் புரிவதாக இல்லை."**



தலைவர்கள் என்று கூறுபவர்கள் எல்லாம் முகநூல்களில்தான் தங்களது தொண்டர்களோடு சேர்ந்து முஸ்தபா முஸ்தபா பாடிக்கொண்டிருக்கிறார்களே தவிர, களத்தில் அறிக்கைகளுக்குள் ஓடிப்போய் வசதியாக ஒளிந்து கொள்கிறார்கள். அதிலும் யார் முதலில் அறிக்கை விடுவது என்பதில் போட்டி வேறு.

அபிவிருத்தி விடயத்தில் மிகப் பெரும் வரப்பிரசாதமாக அமையப் போகிறது என்ற நம்பிக்கையுடன் பெற்றுக்கொண்ட மாகாண சபையோ இன்று புத்தூர் சவாரித்திடல் போலாகி விட்டது. நாளொரு சண்டை, வாரமொரு பதவிப்பறிப்பென்று ஆளையாள் வேட்டியை உருவிக்கொண்டு சமராடுகிறார்கள். தெற்கு கைகொட்டி சிரித்துக்கொண்டிருக்கிறது. இவர்களை நம்பி தமிழீழத்தையே கொடுக்கலாம் போலிருக்கிறது என்று சிங்கள முகநூல் வட்டங்களில் எள்ளலும் நக்கலும் மலிந்து போய் கிடக்கின்றன.

மறுபுறத்தில் அரசியல் தீர்விலாவது ஏதாவது ஒளிக்கீற்று தெரிகிறதா என்று பார்த்தால் சம்பந்தரோ வாயை திறக்கிறாரே இல்லை. சுமந்திரனோ வாயை மூடுகிறாரே இல்லை. ஆனாலும் இருவராலும் மக்களுக்கு ஒன்றுமே விளங்குவதாக இல்லை.

எல்லாம் கிடைக்கும் படகை கவிழ்க்க வேண்டாம் – என்கிறார் சுமந்திரன். மைத்திரியைவிட ஒரு மானஸ்தனை கண்டதில்லை – என்ற கணக்கில் உச்ச நம்பிக்கையோடு தலதாமாளிகைக்கெல்லாம் சென்று சிங்கள மக்களின் மனங்களை வெற்றி கொள்ளுவதற்கு சாஷ்டாங்கமாக கிடக்கிறார் சம்பந்தர்.

இவர்கள் இருவரும் அரசோடு பேசியதை ஒட்டுக்கேட்டுவந்தவர்கள் இணைப்பை விட்டுவிட்டார்கள் என்று சங்கு ஊதி தகவல் சொல்கிறார்கள். முதலமைச்சரோ முதலாம் வகுப்பு மாணாக்கன் கணக்கில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நீதிக்கதை சொல்லிக்கொண்டிருக்கிறார்.

போர் முடிந்து எட்டு ஆண்டுகளாகிய நிலையில் – இந்த மாதிரியான சீத்துவக்கேட்டுடன் – இன்னமும் அழுந்திக்கொண்டிருக்கும் ஒரு சமூகத்தின் தலைவருக்கு இப்போது பவள விழா கொண்டாடவில்லை என்று யார் அழுதார்?

முப்பதாண்டு காலத்துக்கும் மேலாக உலகின் மிகக் கொடிய அழிவுகளையெல்லாம் அனுபவித்து விட்டு எஞ்சியிருக்கும் ஊனையும் உயிரையும் தம்மகத்தே சுமந்து கொண்டு ஈனக்குரலோடு இன்னமும் உயிர் வாழ்ந்துகொண்டிருக்கின்ற பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் உரிமைகளுக்காக தினம் தினம் வீதியில் போராடிக்கொண்டிருக்கின்றபோது –

அவற்றுக்கெல்லாம் தினம் தினம் தவறாது அறிக்கை விடுத்து தனது 'புரிந்துணர்வுகளை மாத்திரம்' ஒலிபரப்பிக்கொள்ளும் மாவை அண்ணனுக்கு– அந்த மக்களின் சாக்குரல்களுக்கு மத்தியிலும் தனக்கு சால்வை வேண்டுமென்ற ஆசை எப்படி வர முடிந்தது?

ஒரு சாதாரண மனிதனே இழவு விழுந்த வீட்டுக்கு அருகில் களியாட்ட நிகழ்வை நடத்துவதற்கு கூனிக்குறுகிப்போவான். ஆனால், அழுது வடித்துக்கொண்டிருக்கின்ற அந்த மக்களின் வாக்குகளை பெற்று மக்கள் பிரதிநிதி என்று மேடைக்கு மேடை மார்தட்டுகின்ற மாவை அண்ணன், இந்த ரணகளத்தின் மத்தியிலும் தனக்கு கிளுகிளுப்பு தேடும் பவள விழா பட்டாபிஷேகத்தை ஊர் கூட்டி வைக்குமளவுக்கு தனது வாக்காளர்களில் எத்தனை பேரினது பிரச்சினைகளை இதுவரை தீர்த்துவைத்தார்? அல்லது அந்த சாதனையின் பேரால் தனக்குத்தானே வைத்துக் கொண்ட வெற்றி விழாத் தான் இதுவோ? (18 ஆம் பக்கம் பார்க்க...)


காலைக்கதிர் Kalaikkathir






# ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...? 260

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா




அமெரிக்க இராணுவ செல வினங்களை ஆண்டுக்கு 54 பில்லியன் டொலராக அதிகரிப்பது மற்றும் 75 கப் பல்கள் அளவிற்கு கப்பற்படையின் அளவை விரிவாக்குவதற்கான திட்டங்களை ட்ரம்ப் அறிவிப்பதற்கு முன்னரே மேற்கொள்ளப்பட்டு வந்த அமெரிக்க கடற்படையின் ஒரு மிகப்பெரிய விரிவாக்கத்தின் பாகமாக ஜெரால்ட் ஃபோர்ட் வந்துள்ளது. வரவிருக்கும் தசாப்தத்தில், அமெரிக்க இராணுவம் ஒரு ஜோடி விமானந்தாங்கி போர்க்கப்பல்களை நிலைநிறுத்த மட்டும் திட்டமிடவில்லை, மாறாக தொலைதூர ஏவுகணை நீர்மூழ்கிக் கப்பல்கள், சிறுபோர்க்கப்பல்கள், போர்விமானங்கள், தொலைதூர குண்டு வீசிகள் மற்றும் அணுகுண்டு ஏவுகணைகளின் புதிய ரகங்களையும் நிலைநிறுத்தத் திட்டமிட்டுள்ளது.

ஒபாமா மற்றும் ட்ரம்ப் இருவரின் கீழும் இராணுவ செலவுகளின் விரிவாக்கத்திற்கு, ஊடகங்களின் தரப்பிலிருந்து, உற்சாகமான ஒப்புதலோ அல்லது மவுனமோ கிடைத்துள்ளது.

**சுமார் மூன்றில் இருந்து நான் காண்டுகளுக்கு இந்த விமானந் தாங்கி போர்க்கப்பல் செயற்படும் காலத்திலேயேகூட, இதுநிர்மூலமாக் கப்படலாம்**

சுமார் மூன்றில் இருந்து நான் காண்டுகளுக்கு இந்த விமானந்தாங்கி போர்க்கப்பல் செயற்படும் காலத்திலேயேகூட, இது நிர்மூலமாக்கப்படலாம். ஐக்கிய இராஜ்ஜியம் அதன் மிகப்பெரிய விமானந்தாங்கி போர்க்கப்பலான HMS குவின் எலிசபெத்தை படையில் இணைத்த போது, ராயல் யுனெடெட் சேவைகள் பயிலகம் குறிப்பிடுகையில், ரஷ்யா, சீனா மற்றும் ஏனைய நாடுகளால் நிலைநிறுத்தப்பட்டிருக்கும் இப்போதைய தலைமுறை போர்க்கப்பல்-எதிர்ப்பு கடற்படை ஏவுகணைகளுக்கு எதிராக இந்த மிகப்பெரிய கப்பல் பெரிதும் பாதுகாப்பற்றது என்று குறிப்பிட்டது.

''அரை மில்லியன் பவுண்டை (விட) குறைந்த விலையிலான ஏவுகணைகளில் ஒன்று 3 பில்லியன் பவுண்டுக்கும் அதிகமாக விலை கொண்ட ஒரு பிரிட்டிஷ் விமானந்தாங்கி போர்க்கப்பலை குறைந்தபட்சமாவது சேதப்படுத்தக்கூடியதாகும்'' என்றது குறிப்பிட்டது.

ரஷ்ய பாதுகாப்புத்துறை அமைச்சகம் அச்செய்தி குறித்து நகைச்சுவையாக கருத்துரைக்கையில், பிரிட்டிஷ் விமானந்தாங்கி போர்க்கப்பல் ''ஒரு மிகச் சுலபமான கடல் இலக்கு தான்'' என்று குறிப்பிட்டது. இதே ஏளனம் ஜெரால்ட் ஃபோர்டுக்கும் பொருந்தும். சுமார் 4,300 கப்பல் சிப்பந்திகள், விமான ஓட்டிகள் மற்றும் அதிகாரிகளைக் கொண்ட இந்த எ/கு எந்திரம், கலினின்கிராட், சிரியா அல்லது அதே போல, சீனா இவற்றின் 400 மைல் கடல்எல்லைக்குள் இறங்கினால், சில நிமிடங்களுக்குள் மூழ்கடிக்கப்படலாம்.



இவ்வாறு இருக்கின்ற போதிலும் அமெரிக்கா இதுபோன்ற பதினொரு டைனோசர்களைக் கொண்டுள்ளது, அத்துடன் ஏனைய நாடுகளது விமானந் தாங்கி போர்க்கப்பல்கள் அளவிற்கு எட்டு மிகப்பெரிய ஹெலிக்கொப்டர் தாங்கிப் போர்க்கப்பல்களையும் கொண்டுள்ளது, உலக போர்க் கப்பல்களில் ஏற்றத்தக்க சுமையளவில் அமெரிக்கா மூன்று கால்பகுதிகளைக் கொண்டுள்ளது.

அண்மையில் அதை படையில் இணைக்கும் விழாவில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உளறல்களோடு குழப்பமான உரை ஒன்றை வழங்கினார், முழுக்க முழுக்க பயங்கர அச்சுறுத்தல்களைக் கொண்டிருந்த அதில், அவர் அமெரிக்கா கோரப்பற்களுடன் தன்னை ஆயுதமயமாக்கி வருவதன் மீது ஒரு சித்திரத்தை வழங்கினார். அமெரிக்காவின் பலம் யாருக்கும் சளைத்ததில்லை, நாம் ஒவ்வொரு நாளும் மிகப் பெரிய நாடாக, தலைசிறந்த நாடாக மற்றும் பலமாக மாறிக் கொண்டிருக்கிறோம் என்ற ''உலகிற்கான ஒரு சேதி தான்'' இந்தக் கப்பல் என்றார்.



ng Jun/REX/Shutterstock

''ஒரு சண்டை ஏற்பட்டால், அதில் எப்போதும் நாம் தான் வெல்வோம், வெல்வோம், வெல்வோம் என்ற இந்த விதத்தில் தான் அச்சண்டை முடிவுறும் என்பதையும் இக்கப்பல் உறுதிப்படுத்துகிறது. நாம் ஒருபோதும் தோற்கமாட்டோம். நாம் வெல்வோம்'' என்பதையும் ட்ரம்ப் சேர்த்துக் கொண்டார்.

''அமெரிக்கா முன்னேறி வந்து கொண்டிருக்கிறது என்பதை ஒவ்வொருவரும் அறிவார்கள், இதனால் நமது எதிரிகள் அச்சத்தில் நடுங்குவார்கள், '' என்றவர் அறிவித்தார். யார் இந்த எதிரிகள் என்பது ஓரிடத்திலும் குறிப்பிடவில்லை (இவர்கள் கலாஸ்னிகோவ் ஏந்திய இஸ்லாமியவாதிகள் கிடையாது என்பதை ஒருவர் அனுமானிக்கலாம்).

''ஒரு சண்டை ஏற்பட்டால், அதில் எப்போதும் நாம் தான் வெல்வோம், வெல்வோம், வெல்வோம் என்ற இந்த விதத்தில் தான் அச்சண்டை முடிவுறும் என்பதையும் இக்கப்பல் உறுதிப்படுத்துகிறது. நாம் ஒருபோதும் தோற்கமாட்டோம். நாம் வெல்வோம்,'' என்பதையும் ட்ரம்ப் சேர்த்துக் கொண்டார்.

இராணுவத்தின் மீதான படைத்துறைசாரா ஆட்சியின் கோட்பாட்டை தெளிவாக மீறிய அவர், அரசாங்கத்திடம் இராணுவ செலவினங்களை விரிவாக்க கோருமாறு அந்நிகழ்வில் கூடியிருந்த கப்பல் சிப்பந்திகள் மற்றும் அதிகாரிகளுக்கு முறையிட்டார்.

மொத்தத்தில் அந்த முன்னாள் ரியல் எஸ்டேட் ஊகவணிகர் தொகுத்துரைக்கையில், ''சண்டை என்று வந்துவிட்டால், நமக்கு நியாயமான சண்டை வேண்டியதில்லை. அதற்கு எதிர்விதமானதே நமக்கு வேண்டும். நமக்கு வேண்டியது வெற்றி, நாம் முழு வெற்றி பெறுவோம்,'' என்றார்.

அவர் உரையில், பாசிசவாத சிந்தனை கொண்ட அவரது ஆலோசகர்களான ஸ்டீபன் பானன் மற்றும் ஸ்டீபன் மில்லரின் செல்வாக்கு இருந்ததை எடுத்துக்காட்டும் வகையில், அதில் ஜனநாயகம்'' என்ற வார்த்தையோ அல்லது மரபார்ந்து அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நடவடிக்கைகளை நியாயப்படுத்த கூறப்படும் ''தற்காப்பு'' கொள்கையோ கூட குறிப்பிடப்படவில்லை. மொத்தத்தில் அப்பட்டமான இராணுவ பலம், அச்சுறுத்தல்கள் மற்றும் மிரட்டல்கள் தான் இருந்தன.

(கேள்வி தொடரும்)

காலைக்கதிர் Kalaikkathir





# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



63




## அத்தியாயம் - V

## கரவெட்டிக்குள் நகர்ந்தோம்

எமது வாழ்வின் இக்கட்டான இந்தக் கட்டத்திலே சுக்ளா எம்மோடு இணைந்தார். விடுதலைப் புலிகளிடையே அனுபவம் மிக்க மூத்த உறுப்பினர் இவர். வடமராட்சியின் இதயப் பகுதியான கரவெட்டிப் பிரிவுக்கு இவர் பொறுப்பாக இருந்தார். போர் அனுபவமும் இவருக்கு நிறைய உண்டு. அந்தப் பகுதியைப் பற்றியும் அங்கு வாழும் மக்கள் பற்றியும் விலாவாரியாக அறிந்திருந்தார். எத்தகைய வசதிகளை எமக்கு ஏற்படுத்த வேண்டும் என்பதில் அவர் தெளிவாக இருந்தார். வல்வெட்டித்துறையில் இருந்து நான்கு மைல் தூரத்தில் எமக்கு ஒரு வீடு பார்த்த சுக்ளா, எமது பாதுகாப்புப் பொறுப்பையும் தானே ஏற்றுக்கொண்டார். கரவெட்டி, கலட்டியில் ஒரு நவீன வசதிகள் உள்ள வீடொன்றை எமக்காக அமர்த்தினார். இந்தியப் படைகளின் வரவால் பாதுகாப்பான இடம் தேட வேண்டியிருந்த பொட்டு அம்மானுக்கும் ஏனைய காயமடைந்த போராளிகளுக்கும் இந்த வீடு போதுமாக இருந்தது. இங்கிருந்து மந்திகை மருத்துவமனைக்கு மருந்து கட்டப் போவது பொட்டு அம்மானுக்கு வசதியாக இருந்தது. வீட்டிலே தங்குவதற்கு வரும் ஆட்களின் தொகை கூடிக் குறையும். ஆனால், எம் எல்லோருக்கும் பொதுவாக ஒன்று இருந்தது. அதுதான் பொதுவான ஆபத்து. பாதுகாப்பும் தங்குமிடவசதியும் எல்லோருக்கும் பொதுவாகத் தேவையாகவும் இருந்தன.

வடமராட்சியில் மக்கள் வாழும் பகுதிக்குள் இந்திய இராணுவம் படிப்படியாகத் திட்டமிட்டு ஊடுருவியது. ஆனால், அந்தப் புவியியல் அமைப்பு அவர்களுக்குப் புதிராகவே இருந்தது. இனி, கிராமங்களில் காணப்பட்ட ஒழுங்கைகளின் சிக்கலான பின்னல் அமைப்பு புதிதாக அங்கு செல்பவர்களுக்குத் திகைப்பூட்டிக் குழப்பம் ஏற்படுத்துவதாக இருக்கும். ஆனால், புலிகளுக்கு இதுவே வாய்ப்பாக இருந்தது. இந்தியப் படைகளைத் தவிர்ப்பதற்கு கிராமவாசிகளுக்கும் இந்த இடியப்பச்சிக்கல் போன்ற ஒழுங்கை அமைப்பு உதவியாக இருந்தது. குழப்பம் அடைந்த இந்தியப் படைகள் ஆக்கிரமிப்பின் ஆரம்ப காலத்தில் பிரதான வீதிகளில் மட்டுமே காவல் உலா புரிந்தார்கள். இது எமக்கும் நல்ல வசதியாக இருந்தது. காயமடைந்த போராளிகளுக்குக் குறிப்பாக பொட்டு அம்மானுக்கு உடல் தேறிவர அவகாசம் கிடைத்தது. அடுத்ததாக இந்திய இராணுவம் வருகிறதா என்று கலவரம் அடையாமல் நிலைமைய அவதானிக்கவும் ஒவ்வொரு வளர்ச்சியையும் கூர்ந்து கவனிக்கவும் பாலாவுக்கும் எனக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

முன்னாள் ஈரோஸ் தலைவர் பாலகுமார் வடமராட்சியைச் சேர்ந்தவரே. இந்த நாள்களில் எமது புதிய முகாமில் பாலாவைச் சந்திக்க அவர் வந்தார். இந்தியாவில் வாழ்ந்த காலத்தில் இருந்தே பாலகுமாரை பாலாவுக்கு நன்கு தெரியும். விடுதலைப் புலிகளின் அரசியல் கொள்கை மீது பாலகுமாருக்கு நிறைய நம்பிக்கை இருந்தது. இந்திய அமைதிப் படையோடு அவருடைய அமைப்புக்கும் பிணக்கு இருக்கவில்லை. ஆகவே, இந்திய இராணுவத் தலைமையிடமிருந்து புலிகளுக்குச் செய்தி கொண்டு வரக்கூடிய வசதியான நிலையில் அவர் இருந்தார். மேலும் நாட்டுப்பற்று உடையவர் என்ற நிலையில் பகைமை உணர்வு கொண்ட இந்தியர்களோடு அல்லாது புலிகள் மட்டிலேயே அவருக்கு ஆழ்ந்த அனுதாபம் இருந்தது. அவர் வரும் போதெல்லாம் இந்தியப் படைகளின் சிந்தனை என்ன, நகர்வுகள் என்ன என்பது போன்ற முக்கியத் தகவல்களுடன் வருவார். அவர் கொண்டு வந்த சுவையான செய்திகளில் ஒன்று வடமராட்சி இந்திய இராணுவத் தளபதிகளிடமிருந்து வந்திருந்தது. இந்திய இராணுவ உயர்பீடத்துக்கும் பாலாவுக்கும் இடையே ஒரு சந்திப்பு இடம்பெற அவர்கள் விருப்பம் தெரிவித்திருந்தார்கள். அந்த அழைப்பு ஒரு சூழ்ச்சியாக இருக்குமோ என்று பாலா சந்தேகப்பட்டார். ஆனால், போரை முடிவுக்கு கொண்டுவர வழிபிறக்குமா என்ற சிந்தனையில் பிரபாகரனுக்கு விவரம் அறிவித்தார். ஆழமாகச் சிந்தித்த பிரபாகரன் பாலாவைக் கைது செய்யும் சூழ்ச்சியாக இது இருக்கலாம் என்று கருதியமையால் இந்தியத் தளபதிகளைப் போய்ப் பார்க்க வேண்டாம் என்று பாலாவுக்கு அறிவுரை கூறினார். பிரபாகரனுடைய அனுமானம் சரியாகவே இருந்தது. ஏனென்றால், இதே ஏமாற்று முறையை இந்தியர் மட்டக்களப்பில் கையாண்டு, மூத்த விடுதலைப் புலிப் போராளி ஒருவரைத் தடுத்து வைத்தார்கள். நல்ல காலம், அவர்கள் வீசிய வலையில் நாம் சிக்க

> இந்திய இராணுவ உயர்பீடத்துக்கும் பாலாவுக்கும் இடையே ஒரு சந்திப்பு இடம்பெற அவர்கள் விருப்பம் தெரிவித்திருந்தார்கள். அந்த அழைப்பு ஒரு சூழ்ச்சியாக இருக்குமோ என்று பாலா சந்தேகப்பட்டார்

வில்லை. பாலாவை இந்தியர் கைது செய்திருப்பார்களாயின், அவர்களுக்கு அது ஒரு பரப்புரை வெற்றியாக இருந்திருக்கும். அதற்கு இடமளிக்கும் எண்ணம் எமக்கு இருக்கவில்லை. அவர்களுடைய பரப்புரை முயற்சிகள் மும்முரமாக முடுக்கி விடப்பட்டிருந்தன. கொழும்பின் கட்டுப்பாட்டில் வானலைகள் இருந்தன. கொழும்பு அரசு இந்தியர்களுடன் ஒத்துழைத்தது. ஆகவே, தமிழ் மக்கள் நம்பும் வகையில் செய்திகள் புனையப்பட்டன. இராணுவப் பெருவெற்றிகள் பற்றியும் கைதான அல்லது கொல்லப்பட்ட அல்லது சரணடைந்து விட்ட புலிப் போராளிகள் பற்றியும் பொய்க் கணக்குகளைப் பெருப்பித்துக் கூறியது. தவறான தகவல்களைச் செய்தி அறிக்கைகளாக வெளியிட்டு, தமிழ்ப் பொதுமக்களுக்கும் புலிப் போராளிகளுக்கும் மனமுறிவு ஏற்படுத்த முயன்றது. இப்படியான நிலையில் பாலாவோ பொட்டு அம்மானோ கைது செய்யப்பட்டு விட்டார்கள் அல்லது கொல்லப்பட்டு விட்டார்கள் என்று இந்தியப் பரப்புரை அமைப்பு பெருமை பீற்றிக் கொள்ள இடமளிக்கக் கூடாது என்பதில் நாம் உறுதியாக இருந்தோம். இந்திய இராணுவம் எம்மை உயிரோடு பிடிப்பதற்கு நாம் இடமளிக்கக் கூடாது என்பதே பாலாவுடையதும் என்னுடையதும் எண்ணமாக இருந்தது.

இந்திய இராணுவம் வடமராட்சியில் தனது ஆக்கிரமிப்பைத் தீவிரப்படுத்தி, தனது கட்டுப்பாட்டையும் இறுக்கமாக நிறுவியது. முக்கிய கேந்திர நகரங்களில் இந்திய இராணுவ முகாம்கள் நிறுவப்பட்டன. இந்திய இராணுவ நிர்வாக அமைப்புகள் செயற்பட்ட நகரங்களில் பருத்தித்துறை, நெல்லியடி, பொலிகண்டி, உடுப்பிட்டி, துன்னாலை ஆகியவையும் அடங்கும். தடுப்புக் காவலும் சித்திரவதையும் பரவலாக இடம்பெற்ற நிலையங்களில் உடுப்பிட்டி முகாமும் ஒன்றாகும். அந்தப் பகுதி முழுவதிலும், பிரதான வீதிச் சந்திகளில் பலமாக ஆயுதம் தரித்த இந்திய இராணுவத்தினர் காவல் சாவடிகளை நிறுவியிருந்தார்கள். பகைமை உணர்வும், எடுத்ததற்கெல்லாம் துப்பாக்கியை நீட்டும் பண்புடனேயே சோதனைச் சாவடிகளில் அவர்கள் நின்றார்கள். இந்திய அமைதிப் படையின் பிரசன்னம் மக்களுக்கு அச்சுறுத்தலாகவே இருந்தது. வடமராட்சியில் இராணுவக் குவிப்பு படிப்படியாகத் தீவிரமடைய எமது பாதுகாப்புக்கான வாய்ப்பு குறையத் தொடங்கியது. இந்தியப் படையினர் துணிச்சலும் நம்பிக்கையும் பெறத் தொடங்கினர். கிராமங்களின் உட்பகுதிகளையும் ஊடறுக்கத் தொடங்கினர். நேரடியாகத் தெரியாத இடங்களை வரைபடங்களில் பார்த்து அறிந்தனர். குறித்த ஒரு பகுதியைத் தேர்ந்தெடுத்து அங்குள்ள பிரதான வீதியிலிருந்து கிளைபிரியும் ஒழுங்கைகளில் ஒவ்வொன்றாக ஒவ்வொரு நாளும் உலா செல்லத் தொடங்கினர். இத்தகைய நடவடிக்கைகள் தந்த துணிச்சலால், ஒரு பகுதியைச் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தி, அழிக்கும் பணியிலும் துணிந்து ஈடுபட்டனர். இந்திய இராணுவ நடவடிக்கையில் இது ஓர் ஆபத்தான வளர்ச்சியாக எமக்குப் பட்டது. ஆகவே, ஆபத்தான அவசர நிலை ஏற்படும் போதெல்லாம் நாமும் அவசர திட்டங்களை வகுத்து அடிக்கடி இடம்மாற நேர்ந்தது.

படையினரின் நடமாட்டம் பற்றி, அந்தப் பகுதி மக்கள் எமக்குப் புதிய புதிய தகவல்களை அடிக்கடி வழங்குவார்கள். சின்னப்பிள்ளைகள் எலும்பும் தோலுமான பிஞ்சுக் கால்களோடு எமது வீட்டுக்குள் வேகமாகப் பாய்ந்து நுழைந்து எதிர்பாராத வகையில் அங்கு வரும் இந்தியப் படையினர் பற்றி எம்மை எச்சரிப்பார்கள். எத்தனை பேர் வந்தார்கள், எவ்வளவு நேரம் நின்றார்கள், இறுதியாக எந்தப்பக்கமாகச் சென்றார்கள் என்ற விவரமும் வரும். குடும்பத்தினராலும் உறவினராலும் காப்பாற்றப்பட்டு வடமராட்சியில் தலைமறைவாக வாழ்ந்து கொண்டிருந்த வேறு புலிப் போராளிகள் அடிக்கடி எம்மை வந்து பார்ப்பார்கள். அப்போது தாம் சேகரித்திருந்த வேவுத் தகவல்களும் கொண்டுவருவார்கள். இவற்றை அடிப்படையாக வைத்துப் படையினரின் நடமாட்டங்களை நாம் ஊகித்து உணர்வோம். எப்பொழுதும் எமக்குத் தகவல்கள் வந்து கொண்டே இருக்கும். அதே போல இந்தியர்களுக்கும் தகவல்கள் போய்க் கொண்டிருக்கும் என்பதும் எமக்குத் தெரியும். குழுமங்களாக வாழும் சிறிய சமுதாயங்களில் எதுவும் ஒளிவுமறைவாக நீண்டநாள் இருக்காது. ஆகவே, நாம் எங்கே இருக்கிறோம் என்பது பற்றிய விவரம் நாம் இருந்த இடத்தை விட்டு வெளியே போயிருக்கும் என்பதில் எவருக்கும் ஐயம் இருக்கவில்லை. வடமராட்சியில் நாம் தொடர்ந்தும் இருக்கிறோம் என்பது மக்களிடையே வஞ்சகம் இன்றிப் பேசப்பட்டது. இதைத் தமிழ் பேசும் இந்திய இராணுவத்தினர் இலகுவாகப் புரிந்து கொண்டனர்.

(தொடரும்...)

# யாழில் பதற்றமான ஒரு தோற்றத்தை காட்டும் முயற்சி!

## தென்னிலங்கை அரசியல்வாதிகளின் தந்திரோபாயம்

-விதூசகன்-

யாழ்ப்பாணம் மீண்டும் போர்க் கோலம் பூண்டுள்ளது. வீதிகள் எங்கும் படையினர் குவிக்கப்பட்டிருக்கின்றார்கள். படையினரின் வாகனங்கள் யுத்த காலத்தில் நடமாடியதைப்போல் எல்லா வீதிகளிலும் ஊர்ந்து திரிகின்றன.கைகளில் ஆயுதம் ஏந்தியபடி பச்சை உடுப்புக்கள் மிரட்சியான பார்வையுடன் மக்களைப் பார்க்கின்றன.

திடீர் சுற்றிவளைப்புக்கள், சோதனைகள் என்று கடந்த 10 நாள்களாக யாழ். குடாநாடு மீண்டும் பயங்கரத்தைப் பூசிக்கொண்டுள்ளது.இதற்குக் காரணம்,தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வாள் வெட்டுச் சம்பவங்களும், பொலிஸார் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டுச் சம்பவங்களுமாகும்.



நல்லூரில் நீதிவான் இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலரான ஹேமச்சந்திரவின் துப்பாக்கியைப் பறித்து அவர்மீது ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு, தப்பிச்சென்ற சம்பவம் நடைபெற்ற நாளிலிருந்து யாழ். குடா நாட்டில் வாள்வெட்டுக் குழுக்களின் செயற்பாடுகள் அதிகரிக்கத் தொடங்கியிருக்கின்றன.



தன்னை இலக்கு வைத்து அந்தத் துப்பாக்கிப்பிரயோகம் நடைபெற்றதாக நீதிபதி இளஞ்செழியன் கூறியிருந்தார். ஆனால் பொலிஸ் அத்தியட்சகர் அச்சம்பவம் தொடர்பாக ஊடகங்களுக்கு கூறும்போது, தமது விசாரணைகளில் அந்தத் துப்பாக்கிச்சூடு நீதிபதியை இலக்கு வைத்து நடத்தப்படவில்லை என்றும், அது ஒரு தற்செயல் சம்பவம் என்றும் கூறியிருந்தார்.

இதில் நீதிபதியும், பொலிஸ் அத்தியட்சகரும் கூறுகின்ற வாக்கு மூலங்கள் வேறுபட்டுள்ளன. இதில் யார்? கூறுவது பொய் என்பதையும், எது உண்மை என்பதையும் விசாரணைகளின் முடிவுகளே வெளிப்படுத்தப்போகின்றன.

ஒருவேளை பொலிஸ் அத்தியட்சகர் கூறுவது பொய் என்று நிறுவினால்,பொது மக்களுக்கு பொலிஸாரின் மீது நம்பிக்கை இல்லாமல் போய்விடும். சமூகத்தில் நடக்கின்ற குற்றங்களை நீதிபதிகள் நேரடியாக நின்று பார்த்து தீர்ப்புகளை வழங்குவதில்லை. பொலிஸாரின் விசாரணை அறிக்கைகளையும், சாட்சிகளையும் வைத்தே தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன.

இந்த நிலையில் பொலிஸார் கூறுவது பொய்யாக இருக்கின்றது என்பதும், அதை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் தீர்ப்பு சரியானது தானா? என்ற கேள்விகளையும் இந்தச் சம்பவம் தோற்றுவிக்கும்.

இவ்விடயம் பொலிஸாரின் கடமை மற்றும் பொறுப்பு தொடர்பான சில கேள்விகளையும் தோற்றுவித்துள்ளது. அதாவது பிரச்சினைகளை அணுகும் பொலிஸார் தமது துப்பாக்கியை குற்றவாளி பறிக்கும் வாய்ப்பைக் கொடுத்திருந்தாரா? துப்பாக்கி பறிப்பு எதிர்பாராத ஒரு சம்பவமாக இருந்தால், குற்றவாளி 8 அடி தூரத்தில் துப்பாக்கியுடன் நின்றிருக்கையில் அவனை நோக்கி மற்றொரு பொலிஸ் அதிகாரியால் குறி பார்த்துச் சுட முடியவில்லையாயின் பொலிஸாரின் பயிற்சி பயனற்றதாகப் போய்விட்டதா என்ற கேள்விக்கு இதுவரை விடை காணப்படவில்லை.



ஏற்கனவே யாழ். குடாநாட்டில் சமூக விரோதச் செயற்பாடுகளும்,வாள்வெட்டுக் குழுக்களின் நடவடிக்கைகளும் நடைபெற்றுக் கொண்டிருந்த நிலையில், நல்லூர் சம்பவம் வாள்வெட்டுக் குழுக்களுக்கு புதிய உத்வேகத்தைக் கொடுத்துள்ளது.

இது நாள்வரை வாள்வெட்டுக் குழுக்கள் கூலிக்கு ஒருவரைத் தாக்குவதிலும், கொலை செய்வதிலும் ஈடுபட்டபோதும்,பொலிஸார் மீது எவ்விதமானதாக்குதல்களையும் நடத்தவில்லை. ஆனால் கடந்த வாரம் கொக்குவில் பகுதியில் நீதி மன்ற அழைப்பாணையை வழங்கச் சென்ற இரண்டு பொலிஸாரின் மோட்டார் சைக்கிளை வழிமறித்து அவர்கள் மீது வாளினால் சரமாரியாக வெட்டியுள்ளனர்.

பொலிஸார் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டு சம்பவத்தைத் தொடர்ந்து பொலிஸ்மா அதிபர் யாழ்ப்பாணத்திற்கு அவசர விஜயத்தை மேற்கொண்டு நிலைமையை ஆராய்ந்த தன் பின்னர்,யாழ். குடாநாட்டி ஏற்பட்டுள்ள அசாதாரண சூழலை சமாளிப்பதற்கு பொலிஸாருடன் மேலதிகமாக விஷேட அதிரடிப்படையினரையும் கடமையில் அமர்த்தி நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்று கூறியிருந்தார்.

அதைத் தொடர்ந்து யாழ். குடாநாட்டின் வீதிகள் எங்கும் படையினரின் பிரசன்னம் காணப்படுகின்றது. ஒரு காலத்தில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளிலிருந்து படையினர் வெளியேற வேண்டும் என்றும். படையினரின் எண்ணிக்கை குறைப்புச் செய்யப்பட வேண்டும் என்றும் மூச்சுக்கு முன்னூறு தடவை கூறியவர்கள் இப்போது நடப்பவற்றைப் பார்த்து மௌனித்துப் போய் இருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் நடக்கும் வன்முறைச் சம்பவங்களுக்கும், முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கும் சம்பந்தம் இருக்கின்றது என்றவிதமாகவே, அரசும்,வட மாகாண முதலமைச்சர் மற்றும்,நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூறுவது, முன்னாள் விடுதலைப் புலிகள் மீதான சந்தேகப் பார்வையை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது.

நல்லூரில் பொலிஸாரின் துப்பாக்கியைப் பறித்து சுட்ட சம்பவத்தில் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவரே சம்பந்தப்பட்டு இருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் வாள் வெட்டுக் குழுக்களில் முன்னாள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் ஈடுபடுகின்றார்கள் என்பது அபாண்டமான குற்றச்சாட்டாகும்.

இக்குற்றச்சாட்டை முன்னாள் விடு தலைப்புலிகளின் அரசியல் அமைப்பான ஜனநாயகப் போராளிகள் கட்சியும் தெளிவு படுத்தியிருப்பதுடன்,முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களை மேலும் மேலும் துன்பத்திற்குள் தள்ளி விடுவதற்கே இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் வழி வகுக்கும் என்றும் கூறியிருந்தார்கள்.

வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்பு பட்டவர்களாக தற்போதும் யாழ்ப்பாணச் சிறையில் பல இளைஞர்கள் அடைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் எவரும் உள்ளடங்கியிருக்கவில்லை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அரசுக்கு துதி பாடுகின்றவர்களும். சூழலை ஆராய்ந்து அறியாதவர்களும் எடுத்த எடுப்பிலேயே, வாள்வெட்டு மற்றும் சமூகவிரோதச் செயல்களில் பயிற்சி பெற்ற முன்னாள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களே ஈடுபடுகின்றார்கள் என்று குற்றம் சுமத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

மீண்டும் படையினர் நடமாட்டம், சுற்றிவளைப்புக்கள் என்று யாழ்ப்பாணத்தின் நிலைமை மாற்றமடைவதைப் பார்த்தால்,முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவும், தற்போதைய நல்லாட்சியின் முக்கிய அமைச்சர்களும் தொடர்ச்சியாகக் கூறிவருகின்ற ‘மீண்டும் புலி வருகின்றது’ என்ற கதையை உயிரோட்டத்துடன் காட்ட முயற்சிக்கின்றார்களோ என்ற சந்தேகம் எழுகின்றது.

தென் இலங்கை அரசியல் தலைமைகளுக்கு, தமிழ் மக்களை எப்போதும் ஆயுதங்களின் நிழலிலேயே வைத்திருக்க வேண்டும் என்ற தந்திரோபாயமே இருக்கின்றது. அதை நடைமுறைப் படுத்த இங்கு நடக்கும் வாள்வெட்டுக்களும், வன்முறைகளும் ஒரு வாய்ப்பாக அமைந்துவிட்டதாகவே தெரிகின்றது. ★

தென் இலங்கை அரசியல் தலைமைகளுக்கு, தமிழ் மக்களை எப்போதும் ஆயுதங்களின் நிழலிலேயே வைத்திருக்க வேண்டும் என்ற தந்திரோபாயமே இருக்கின்றது. அதை நடைமுறைப் படுத்த இங்கு நடக்கும் வாள்வெட்டுக்களும், வன்முறைகளும் ஒரு வாய்ப்பாக அமைந்துவிட்டதாகவே தெரிகின்றது.

மருத்துவர்.சி.யமுனாநந்தா

> இரவு நேர ஒளியூட்டல் தாவர சாகியத்தையும் பூச்சி இனங்களையும் பாதிப்பதுடன் மட்டுமல்லாது மனிதன் உட்பட ஏனைய உயிரினங்களையும் பாதிக்கின்றது.




# சூழலை அச்சுறுத்தும் ஒளிமாசு

இயற்கைக்கு மாறான ஒளி முதல்களால் சூழலில் ஏற்படும் பாதகநிலைகள் மிகவும் அண்மைக் காலத்தில் விஞ்ஞான ரீதியாக ஆவணப்படுத்தப்பட்டு உள்ளன. இன்று உலகம் செயற்கை ஒளி முதல்களினால் இரவு முழுவதும் ஒளியூட்டப்படுகின்றது. இந்தியாவில் 'ஒளிரும் இந்தியா' என்ற செயற்றிட்டங்களால் கிராமங்கள் முழுவதும் மின்னொளி இணைப்பைப் பெற நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இலங்கையிலும் அனைத்து வீடுகளுக்கும் மின் விளக்கு வசதி செய்வதற்கான திட்டங்கள் அமுலாக்கப்படுகின்றன. இவையாவும் சூழலில் மேலதிக ஒளியூட்டலை வழங்கும் நிகழ்ச்சிகளே ஆகும்.

''இரவு நேர செயற்கை ஒளியூட்டல், தாவரங்களின் மகரந்தச் சேர்க்கையை வெகுவாகப் பாதிக்கின்றது. இரவு நேர மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் பூச்சிகளின் நடமாட்டத்தை செயற்கை ஒளி முதல்கள் குறைகின்றன. தெருவிளக்குகள், வாகனங்களின் வெளிச்சம், ஒளிகாலும் இருவாயிகளின் (LED) ஒளிர்வுகள் இரவு நேர மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் பூச்சிகளின் வாழ்க்கையை வெகுவாகப் பாதிக்கின்றது. இவ்வாறு ஒளிக்கு ஒளிக்கும் பூச்சிகள் ஒழியத் தொடங்கிவிட்டன. இதனால் அந்தப் பூச்சிகளால் மகரந்தச் சேர்க்கை அடையும் தாவரங்களும் பாதிப்படைந்து அவற்றில் இருந்து விதைகள் உருவாகும் தன்மையும் அருகி வருகின்றது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் ஆய்வாளர்கள் இருட்டில் பார்க்கும் கண்ணாடிகளை அணிந்தவாறு காட்டுச் சூழலில் 300 வகையான பூச்சிகளைத் தாவரங்களில் அவதானித்தனர். பின் அவ்விடத்தை ஒளியூட்டிய போது 62 வீத பூச்சிகள் தாவரங்களை விட்டு அகன்றன. மேலும் தாவரங்களின் விதை உற்பத்தியாதலில் 13 வீதம் குறைவடைந்து இது சூழல் சாகியத்தை இரவு நேர ஒளிர்வு வெகுவாகப் பாதிக்கின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இது எமது சூழலில் இருந்து பல தாவரங்களும் பூச்சிகளும் உணவுச் சங்கிலி வழியே ஏனைய உயிரினங்களும் அருகிப் போகக் காரணமாக அமையலாம். எனவே சூழலில் இரவு நேர ஒளியூட்டலைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

மேலும் பகலில் மகரந்தச் சேர்க்கையை நிகழ்த்தும் பூச்சிகளும் இரவு



ஒளியில் நிகழ்த்தப்படும் செயற்கையான சூழலில் பகுதியாக மகரந்தச் சேர்க்கைக்கு உட்பட்டு முளை திறன் பாதிக்கப்பட்ட விதைகளை உற்பத்தியாக்குகின்றன.

இரவு நேர ஒளியூட்டல் தாவர சாகியத்தையும் பூச்சி இனங்களையும் பாதிப்பதுடன் மட்டுமல்லாது மனிதன் உட்பட ஏனைய உயிரினங்களையும் பாதிக்கின்றது. மனிதனிலும் ஏனைய உயிரினங்களிலும் உள்ள உடற்றொழிலியல் சக்கரத்தை (Biological clocks) இச்செயற்கை ஒளியூட்டல்கள் பாதிக்கின்றன.

நிலா ஒளியின் வட்டத்திலேயே கடல் ஆமைகளின் இனப் பெருக்கம் அமைந்து உள்ளது. ஆனால் கடற்கரைகளில் உள்ள பெரிய கட்டடங்களில் இருந்து கடலை நோக்கிப் பாய்ச்சப்படும் ஒளிகளால் கடல் ஆமைகளின் இயற்கை பாதிக்கப்பட்டு, தவறாக கடற்கரையை நோக்கி நகர்கின்றன. அவ்வாறே வலசைப் பறவைகளின் நடமாட்டமும் செயற்கை ஒளி முதல்களால் பாதிக்கப்படுகின்றன. பல பறவைகள் செயற்கை ஒளிகளால் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி புதிய சூழலில் மரணிக்கின்றன.

மனிதனிலும் செயற்கை ஒளியூட்டல் உடற்றொழிலியல் ரீதியில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இரவு பகல் ஓமோன்களின் அளவில் மாற்றம் ஏற்படுகின்றது. குறிப்பாக மெலட்டோனின் ஓமோனில் ஏற்படும் மாற்றம், பல நோய் நிலைகளை புற்றுநோய் உட்பட ஏற்படுத்தலாம். அடுத்து மாதவிடாய்ச் சக்கரத்தில் பாதிப்பு ஏற்படும். மனச் சோர்வு, களைப்பு, பாலியல் நாட்டம் குறைவு ஆகிய நிலைகளும் அவதானிக்கப்பட்டுள்ளன.

ஒளிமாசு எம்மை அச்சுறுத்தும் ஒரு சூழலியல் பிரச்சினையாகும். ஒளி மாசடைதலின் தன்மையை அதனைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதுவாக ஐந்து வகையான வகைப்படுத்தலாம்.

**அத்து மீறிய ஒளிப்பாச்சுகை** (Light tresbass)

**மேலதிகமான ஒளியூட்டல்** (Over illumiration)

**செறிவான ஒளிப்பாச்சல்** (Glare)

**கூட்டமாக்கப்பட்ட ஒழுங்கற்ற ஒளிப்பாய்ச்சல்** (Light clutter)

**வான் ஒளிரல்** (Sky glow)

என்பனவையே அவை. அத்து மீறிய ஒளிப் பாச்சுகை (Light tresbass) என்பது அயல் சூழலுக்கு அல்லது அயலவர்களுக்குத் தேவையற்ற விதத்தில் ஒளியைப் பரவச் செய்தல் ஆகும். சில வீடுகளிலும் வியாபார நிலையங்களிலும் உள்ள பிரகாசமான ஒளிமுதல்கள் அதனைச் சூழ வசிப்பவர்களைப் பாதிக்கின்றன. இதனைக் கட்டுப்படுத்த ஒழுக்கக் கோவைகள் அவசியமாகின்றன.


மேலதிகமான ஒளியூட்டல் என்பது ஓரிடத்தில் தேவையான ஒளியின் அளவை விட அதிகமான ஒளியைப் பிரயோகித்தல். இது குடியிருப்புக்கள், வேலைத் தளங்கள், பொது விடங்கள் என்பவற்றில் பிரச்சினையாக உள்ளது. இதற்கு முறையான திட்டமிடல்களும் கண்காணிப்புகளும் அவசியமானவைகளாகும்.

செறிவான ஒளிப் பாய்ச்சல் (Glare) என்பது சூரிய ஒளியை நேரில் பார்ப்பது போன்ற ஒளிப் பிரவாகம். இவை பொதுவாக வாகனங்களின் முன்பக்க வெளிச்சங்கள், தேடுதல் வெளிச்சங்கள், காவல் வெளிச்சங்கள் என்பனவாக அமைகின்றன. குறிப்பாக பெருந் தெருக்களைச் சூழ உள்ள சூழல் சாகியம் இவ்வகை ஒளிப் பாய்சலால் பாதிக்கப்படுவர். அடுத்து சக வாகன ஓட்டிகள், பாதசாரிகளும் மீதியோரங்களில் வசிப்பவர்களும் செறிவான ஒளி பாய்ச்சலால் அதிகம் பாதிக்கப்படுபவர்களாக இருப்பர்.

கூட்டமாக்கப்பட்ட ஒழுக்கமற்ற ஒளிப் பாய்ச்சல் (Light clutter) விளம்பரங்கள், அலங்கார ஒளியமைப்புக்கள் என்பவற்றில் மேற்கொள்ளப்படுகின்றன. பெரு வீதிகளில் போலி உரு அமைப்புகளைத் தோற்றுவித்து, விபத்துக்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றன. குறிப்பாக வீதிகளில் எறியங்கள் மூலம் செலுத்தப்படும் வர்ண ஒளிகள் வீதி விபத்தை ஏற்படுத்துவனவாக அமையலாம்.

வான் பரப்பில் இரவு நேரத்தில் ஏற்படும் செயற்கை ஒளிச் செறிவை வான் ஒளிரல் (Sky glow) என்பர். இது மக்கள் செறிவாக வாழும் நகரங்களில் அதிகமாகக் காணப்படுகின்றது. சில நகரங்களில் இவ்வொளிச் செறிவின் பருமன் இயற்கையான இரவு ஒளிச் செறிவை விட நூறு மடங்கு வரை அதிகமாக உள்ளது.

LED ஒளி காலும் இரு வாயி விளக்குகளின் பயன்பாட்டின் அதிகரிப்பும் வான் ஒளிரல் அதிகரிக்கப் பிரதான காரணமாக அமைகின்றது. இத்தகைய அதிகரித்த ஒளி மாசால் வளியில் உள்ள சடத்துவமான வாயுக்கள் உதாரணமாக $N_2$ வாயு, கதிரியக்கத் தாக்கத்துக்கு உட்படக் கூடிய தன்மை ஏற்படும். வான் வெளியில் இருந்து புவியை எவ்வாறு புற ஊதாக் கதிர்கள் தாக்கி, ஓசோன் துளைகளை ஏற்படுத்துகின்றனவோ அவ்வாறே




வான் ஒளிரல் செறிவு அதிகரிப்பால் பூமியின் வான் பரப்பில் உள்ளிருந்து ஓசோன் துளைகள் உருவாகும்.

எனவே, ஒளிமாசின் தாக்கம் பற்றிய விழிப்புணர்வு எமது எதிர்காலச் சந்ததியினருக்கு மிகவும் இன்றியமையாதது ஆகும். ஒளிக் கட்டுப்பாட்டுடன்கூடிய சமூக அபிவிருத்தியையே நாம் முன்னெடுக்க வேண்டும். இதற்கான பல்துறை அணுகுமுறைகளை ஆராய்தல் அவசியமானதாகும்.

# அந்த மூன்று நாட்களை வலியின்றி கடக்க வேண்டுமா?

**நிறுவனங்கள் தங்களது பெண் ஊழியர்களின் மாதாந்தப் பிரச்சினை தொடர்பில் கரிசனத்துடன் சிந்திக்க முன் வந்தமை தொடர்பில் பெண்களுக்கு மகிழ்ச்சியே.**



பெண்களை அச்சுறுத்திக்கொண்டிருக்கும் பலபிரச்சினைகளில் மாதவிடாய் கால மூன்று நாளகளுக்கு மட்டும் எப்போதுமே மிக முக்கியமான பங்கு உண்டு.

இன்று உலகமே மாதவிடாய் நாள்களில் பெண்களுக்கு விடுமுறை அவசியமா? இல்லையா? என்று விவாதித்துக் கொண்டிருக்கிறது. சில நிறுவனங்கள் பெண்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு விடுமுறையும் அறிவித்துள்ளன.

உலகம் முழுக்க பெண்கள் இதை வரவேற்கிறார்கள். நிறுவனங்கள் தங்களது பெண் ஊழியர்களின் மாதாந்தப் பிரச்சினை தொடர்பில் கரிசனத்துடன் சிந்திக்க முன் வந்தமை தொடர்பில் பெண்களுக்கு மகிழ்ச்சியே. ஆனால் அப்போது வலி எதனால் வருகிறது என்பதைப் பற்றியும் கொஞ்சம் சிந்திக்க வேண்டும்.

மாதவிடாய் காலங்களில் பெண்களுக்கு வரக்கூடிய கடுமையான வயிற்று வலிக்கான மூலகாரணங்களில் முதன்மையானது பெண்களின் உணவுப் பழக்கம்!

அந்தக் காலம் முதல் இந்தக் காலம் வரை உணவு விடயத்தில் பெண்கள் கையாளும் கவனக் குறைவே அவர்களது வலிக்கான மூலகாரணம் என்பதை எத்தனை பெண்கள் உணர்ந்திருக்கிறார்கள் எனத் தெரியவில்லை.

சத்தான ஆகாரம் எடுத்துக் கொண்டு உடல்நலனைப் பேணும் பழக்கமுள்ள பெண்களுக்கு மாதாந்த வலித் தொல்லை இருப்பதில்லை என்பது அனுபவ பூர்வமான உண்மைகளில் .

அப்படியான பெண்களான அநேகம் பேர் நம்முடன் இருக்கிறார்கள் என்பதும் நிஜம். ஏன் சிலருக்கு மட்டும் வலி இருப்பதில்லை? பலருக்கு இருக்கிறது என்றால் சமச்சீரற்ற பொருளாதார நிலை கொண்ட ஒரு நாட்டில் இது பெண்களின் தலையெழுத்து என்று தான் எண்ண வேண்டும். பல பெண்கள் வீட்டின் பொருளாதார நிலையைக் கருத்திற் கொண்டு தமக்கான உணவின் தரத்திலும், அளவிலும் சமரசம் செய்து கொள்கிறார்கள்.

இந்தச் சமரசத்தின் எல்லை ஒரு சில வேலைகளில் தமக்கு உண்பதற்கென ஒன்றுமே இல்லாவிட்டாலும் பரவாயில்லை குடும்பத்தில் மற்ற அனைவருக்கும் உண்ண உண விருந்தால் போதும் என்பது வரை நீள்கிறது. ஏழை அம்மாக்கள் மட்டுமல்ல பல நேரங்களில் பொருளாதார பேதங்களின்றி அனைத்து விதமான அம்மாக்களுக்கும் அப்படித்தான் நேர்ந்து விடுகிறது .

காரணம் உடல் நலன் விடயத்தில் பெண்களுக்கு இருக்கும் அலட்சியமான மனப் போக்கு. அதை விட முக்கியமான காரணம் உடல் நலன் விடயத்தில் பின்பற்றப்படும் அறியாமை. இளமையில் சத்தானதைத் தேடித் தேடி உண்ண வில்லை எனில் பின் நாள்களிலாவது அதைச் செய்திருக்க வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மருந்து, மாத்திரைகள் வந்த பின் என்ன கவலை? வலிக்கும் போதெல்லாம் அதைப் போட்டுக் கொண்டால் போகிறது என்றெண்ணும் மனநிலையால் பெண்கள் அனுபவிக்க நேரும் இம்சைகள் அதிகம். அதைப் பெண்களே உண ரும் வரையில் அவர்களுக்கு இந்த மாதாந்த வலியிலிருந்து விமோசனமே கிடைக்கப் போவதில்லை.



# பெண்களின் முன்னேற்றத்தை தடுக்கும் பயமும்.. கூச்சமும்...

பெண்கள் தங்களிடம் புதைந்திருக்கும் திறமைகளை வெளிப்படுத்துவதற்கு பயமும், கூச்ச சுபாவமும் முட்டுக் கட்டையாக உள்ளன.

பெண்களிடம் மறைந்திருக்கும் அனைத்துத் திறமைகளையும் ஒரு முகப்படுத்தி உடலையும், மனதையும் வலுப்படுத்தும் அபார சக்தி கொண்டது தன்னம்பிக்கை. எந்தவொரு செயலைச் செய்வதாக இருந்தாலும் முதலில் உங்கள் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். தாழ்வு மனப்பான்மை எட்டிப்பார்ப்பதற்கு ஒருபோதும் இடம்கொடுத்து விடக்கூடாது.

நீங்கள் எந்தவொரு காரியத்தையும் துடிப்புடனும், ஆர்வத்துடனும் செய்யக் கூடியவர் என்ற எண்ணத்தை உங்களுடைய தோற்றம் வெளிப்படுத்த வேண்டும். உங்களைச் சாதிக்கத் தூண்ட வைக்கும் முதல் மூலதனம் தன்னம்பிக்கை தான். எத்தகைய தடைகளையும், சிக்கல்களையும் தகர்த்தெறிய வைக்கும் வலிமை அதற்கு உண்டு.

மற்றவர்களோடு ஒப்பிடும்போது குறை வான தகுதியும், திறமையும் கொண்டவர்கள் கூட எடுத்த காரியங்களை கச்சிதமாக முடித்திருப்பார்கள். அதற்கு அவர்களுடைய முயற்சியும், தைரியமான செயற்பாடுமே காரணமாக அமையும். நம்பிக்கையும், தைரியமுமே ஒருவருடைய வெற்றிக்குத் தூண்டு கோலாய் இருக்கும்.

ஒருசிலரிடம் எல்லா திறமைகளும் இருக்கும். ஆனால் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் தங்களைத் தாங்களே தாழ்த்திக்கொண்டிருப்பார்கள். தாழ்வு மனப்பான்மை அவர்களிடம் குடி கொண்டிருக்கும். அதில் இருந்து மீள முடியாமல் தவிப்பார்கள். ஏதாவதொரு காரணத்தைச் சொல்லி அவர்களின் முன்னேற்றத்துக்கு அவர்களே தடைபோட்டுக் கொள்வார்கள்.

இவ்வாறு தன்னுடைய தகுதியைத் தானே குறைவாக மதிப்பிடுகின்றமை தாழ்வு மனப்பான்மையையும், அறியாமையையும் தான் உண்டாக்கும். பெண்கள் தங்களிடம் புதைந்திருக்கும் திறமைகளை வெளிப் படுத்த வேண்டும். தன்னைப் பற்றிய சுய மதிப்பீடு உயர்வானதாக இருக்க வேண்டும். தாழ்வு மனப்பான்மைக்கு இடம் கொடுக்காமல் உயர்வான எண்ணங்களையும், சிந்தனைகளையும் உள்ளத்தில் பதிய வைக்க வேண்டும்.


# தாலியின் மகத்துவம்

எமது முன்னோர் காலத்தில் தாலம் பனை என்ற பனை ஓலையால் செய்த ஒரு சிறிய மாலையையே மணமகள் கழுத்தில் மணமகன் கட்டுகின்றமை வழக்கம். அதிலிருந்து தான் தாலி என்ற பெயர் உருவானது.

பிற்காலத்தில் எம்மிடம் ஏற்பட்ட பொருளாதார நிலைகளும் வாழ்க்கை முறைகளும் மாறியமையால் தங்கத்தில் தாலி செய்து அணியப்படுகிறது.

திருமணத்தின் போது பெண் கழுத்தில் கட்டப்படுகின்ற மாங்கல்ய தாலிக் கயிறானது ஒன்பது நூல் இழைகளைக் கொண்டது. அந்த ஒன்பது இழைகளுக்கும் ஒவ்வொரு பொருளுண்டு. தெய்வீகம், தூய்மை, மேன்மை, தொண்டு ,தன்னடக்கம், ஆற்றல், விவேகம், உண்மை, உள்ளதை உள்ளபடி புரிந்து கொள்ளுதல். இந்த ஒன்பது குணங்களும் ஒரு பெண்ணிடம் இருக்க வேண்டும் என்பதற்காகவே ஒன்பது இழைகள் கொண்ட திருமாங்கல்யச் சரடு அணியப்படுகிறது.

மேலும், கணவன் வாழும் வரை மனைவியின் மார்பில் எப்பொழுதும் அவன் கட்டிய தாலி தவழ வேண்டும் என்றும் அர்த்தமாகும். பெண்ணின் மார்பில் உயிரோட்டம் உள்ள இதயத்தில் இந்தத் தாலி பட்டுக் கொண்டு இருக்க வேண்டும் என்பதற்காக சீன மருத்துவ முறையில் தாலி அக்குபஞ்சர் முறை போன்று செயற்படுகின்றது என்று குறிப்பிடப்படுகிறது.



மஞ்சள் கயிறு தாலியில் கோர்த்துப் போடப்பட்டிருந்த போதெல்லாம் நிறைய சுகப் பிரசவங்கள் நடந்தன என வரலாறுகள் கூறுகின்றன. மஞ்சள் கயிற்றில் மஞ்சள் கிழங்கைக் கட்டித் தாலியாக அணியும்போது மஞ்சளில் உள்ள மருத்துவக் குணங்களால் மார்பகப் புற்றுநோயின் பாதிப்புகளும் குறையும். இதனை இன்றைய நவீன ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

● முருகபூபதி – ஆஸ்திரேலியா














''கவிதை உலகளவு பரந்து பல்வேறுபட்டது.
கடவுளையும் காதலியையும் போற்றுவது
மட்டும் அன்று அதன் பணி.
கட்டித்த சிந்தனை உடைய பண்டிதர்களும்
கோட்பாடுகளை விழுங்கிவிட்டு
செமித்துக்கொள்ள முடியாதவர்களும்,
மோப்பதற்கும் மோந்து முணுமுணுப்பதற்குமாக
எழுதப்படுவதன்று கவிதை.
அது சாதாரண மனிதனின் பழுதுபடா
உள்ளத்திற் பாயப் பிறப்பது.
ஓய்வு கடமையின் ஒரு கூறே ஆகும்.
எனது குறும்பாக்கள் முற்றும்
ஓய்வுக்குரியனவும் அன்று.''

இதனை எழுதிய யாழ்ப்பாணம், அளவெட்டியில் 1927 இல் பிறந்து 1971 இல் மறைந்த ''மகாகவி'' உருத்திரமூர்த்தி அவர்களும் மகாகவி பாரதியைப் போன்று அற்பாயுளில் மறைந்தவரே. அற்பாயுளில் மறைந்த பல இலக்கிய வாதிகளின் மேதாவிலாசம் பிரமிக்கத் தக்கது.

இலங்கையில் மட்டுமல்ல தமிழர் வாழும் நாடுகள்தோறும் ''மகாகவி'' எனச்சொன்னவுடன், '' யார் மகாகவி பாரதியா..?'' என்றுதான் பெரும்பான்மை யானவர்கள் கேட்பார்கள். இலங்கை மகாகவி எனச் சொன்னாலும் பலர் அறிந்திருக்கமாட்டார்கள். எனினும் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு தமது கவிதைகள், காவியங்கள், குறும்பாக் களால் வளம் சேர்த்திருக்கும், **உருத் திரமூர்த்தி** என்ற இயற்பெயர் கொண்டு எம்மவர் மத்தியின் மகாகவியாக அறிமுகமாகியிருக்கும் அந்தக் கவி யாளுமை 1966 ஆம் ஆண்டு தமது **குறும்பா** என்ற நூலுக்கு எழுதியி ருக்கும் இரத்தினச்சுருக்கமான முன்னு ரையையே மேலே கண்டீர்கள்.

வள்ளி, கண்மணியாள் காதை, கோடை, ஒரு சாதாரண மனிதனின் சரித்திரம், வீடும் வெளியும், கந்தப்ப சபதம், கல்லழகி, தகனம், புதியதொரு வீடு முதலானவை இவரது புகழ்பெற்ற படைப்புகள்.

இவருடைய நூல்களை இலங் கையி லும் தமிழ்நாட்டிலும் வரதர், எஸ்.பொன் னுத்துரை, பேராசிரியர் நுஃமான், சாலை இளந்திரையன் முதலானோர் பதிப்பித்துள்ளனர்.

**கண்மணியாள் காதை** காவியத்தை ஈழத்தின் பிரபல வில்லிசைக் கலைஞர் லடீஸ் வீரமணி வில்லுப்பாட்டாக அரங்கேற்றியிருக்கிறார். **கோடை** பா நாடகத்தை கலைஞர் தாஸீசியஸ் இயக்கியிருக்கிறார். **மீண்டும் தொடங் கும் மிடுக்கு** கவிதையைக்கொண்டே மேடை நாடகம் இயக்கியிருக்கிறார் கோகிலா மகேந்திரன்.

மகாகவி உருத்திரமூர்த்தியிடத்திலும் பாரதியின் தாக்கம் இருந்திருக்கிறது. பாரதி குறித்து மகாகவியின் பார்வைகள் எவ்வாறு இருந்தன என்பதை அறிந்து கொள்வதற்கு குறிப்புகள் கிடைக்க வில்லையாயினும், ஈழத்து மகாகவி உருத்திரமூர்த்தியையும் இந்திய மகாகவி பாரதியையும் ஒப்புநோக்கும் இயல்பு விமர்சகர்களிடமும் இலக்கிய மேடைப்பேச்சாளர்களிடமும் மேலோங்கி யிருக்கிறது.

மகாகவி உருத்திரமூர்த்தியின் பிர பல்யமான ஒரு கவிதைதான் **மீண்டும் தொடங்கும் மிடுக்கு**. மழையைக் காணாத ஒரு விவசாயியின் வாழ்வைச் சித்திரிக்கும் அந்தக் கவிதை,'' மப் பன்றி கால மழை காணா மண்ணிலே சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாது, ஏர் ஏறாது. காளை இழுக்காது, எனினும் அந்தப்பாறை பிளந்து பயன்விளைப்பான் என் ஊரான்'' என ஆரம்பித்து.

**''சோ'' வென்று நள்ளிரவிற் கொட்டும், உடன் கூடும் கொலைக் காற்றும் தானுமாய் எட்டுத்திசையும் நடுங்க முழங்கி எழும், ஆட்டத்து மங்கையர் போல் அங்கு மொய்த்து நின்ற பயிர் பாட்டத்தில் வீழ்ந்தழிந்து பாழாகிப் போய்விடவே கொள்ளை போல் வந்து கொடுமை விளைவித்து வெள்ளம் வயலை விழுங்கிற்று....**

**பின்னர் அது வற்றியதும், ஓயா வலக்கரத்தில் மண்வெட்டி பற்றி, அதோபார், பழையபடி கிண்டுகிறான், சேர்த்தவற்றை முற்றும் சிதற வைக்கும் வானத்தைப் பார்த்தயர்ந்து நிற்கும் பழக்கமற்றோன் வாழி, அவன் ஈண்டு முதலில் இருந்து முன்னேறுதற்கு மீண்டும் தொடங்கும் மிடுக்கு''** என முடிக்கிறார்.



இந்தக் கவிதையில் அந்த கடும் உழைப்பாளியின் விந்தை மிகு தன் னம்பிக்கையை பார்க்கின்றோம்.


பாரதியின் இந்தக் கவிதையையும் பாருங்கள்:

தேடிச் சோறு நிதந் தின்று
பல சின்னஞ் சிறு கதைகள் பேசி
மனம் வாடித் துன்பமிக உழன்று
பிறர் வாடப் பல செயல்கள் செய்து
நரை கூடிக் கிழப்பருவம் எய்தி
கொடுங் கூற்றுக் கிரை யெனப்பின் மாயும்
பல வேடிக்கை மனிதரைப் போலே
நான் வீழ்வே னென்று நினைத்தாயோ...?'

பாரதி என்ற தனிமனிதனுக்கு ஏற் பட்ட துயரத்திற்கு ஒப்பானதே ஈழத்து மகாகவி படைத்திருக்கும் விவசா யியினது துயரம். ஆனாலும், மீண்டும் தொடங்கும் மிடுக்குப்போன்று மகாகவி உருத்திரமூர்த்தி படைத்த விவசாயி வீழ்ந்து விடவில்லை. எழுந்து நிற்கின் றான்.

பாரதியின் மறவன் பாட்டிலும் தன்னம்பிக்கையையும் துணிச்சலையும் காணமுடியும்.

பாரதி ரவுத்திரம் பழகு எனச் சொன்ன கவிஞர். அதாவது கோபப்படு என்றார். அவரது கொப்பளிக்கும் கோபம் உணர்ச்சிமயமானது. அதனால் தான்'' தனி மனிதனொருவனுக்கு உணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம்'' என்றார். ஆனால், அவருக்குப் பின்னர் வந்த எங்கள் ஈழத்து மகாகவியிடம் அத்தகைய கோபம் நிதானமாக வெளிவருகிறது.




இயற்கையின் சீற்றத்தால் வெள்ளம் வந்து வயலை விழுங்கினாலும், அவனது உணவுக்கு ஆபத்து வந்தாலும், பாரதிக்கு வந்தகோபம் போன்று எங் கள் நாட்டின் மகாகவிக்கு சீற்றம் வர வில்லை. அந்த விவசாயி அழிப்போம் எனச் சொல்லாமல், மீண்டும் மிடுக் கோடு வயலைக்கொத்துவோம் என் கின்றான்.

பாரதியிடத்தில் அங்கத எழுத்துக்க ளும் பிறந்திருக்கின்றன. கேலியும் கிண்டலும் அவருக்கு எட்டயபுர அரண் மனையிலேயே சின்னஞ்சிறு வயதில் இயல்பாகவே வந்துவிட்டது.

அந்தத்தன்மையை பாரதியின் பல கவிதைகள், கட்டுரைகளிலும் காணமுடி யும்.

அதுபோன்று மகாகவி உருத்திர மூர்த்தியின் குறும்பாக்களும் அங்கதச் சுவை நிரம்பியதுதான்.

''வண்டு வடைக்குள்ளிருந்து மேலே வந்தது,
நான் பிய்த்தபடியாலே
கண்டொரு சொல் பேசாமல்
காற்றில் அது போயினதுஇ
நன்றி சொல்லா தெம்மவரைப் போலே''

என்னும் குறும்பாவில், வடைக்குள் குற்றுயிராயிருந்த வண்டிற்கு விடுதலை கொடுத்தவருக்கு நன்றிகூடச் சொல் லாமல் எம்மவர் போன்று பறந்தது எனச் சொல்கிறார்.

''முத்தெடுக்க மூழ்குகிறான் சீலன்,
முன்னாலே வந்து நின்றான் காலன்.
சத்தமின்றி, வந்தவனின்
கைத்தலத்திற் பத்து முத்தைப்
பொத்தி வைத்தான். போனான் முச்சூலன்.''

என்ற குறும்பாவில், எமனுக்கும் லஞ்சம்கொடுக்கத் தயங்காதவர்கள்தான் எம்மவர்கள் என்று கேலி செய்கிறார்.

பாரதியின் எழுத்துக்களிலும் இத்த கைய பண்புகளை காணலாம்.


''கோளுக்கு மிகவும் சமர்த்தன் – பொய்ம்மை
சூத்திரம் பழிசொலக்கூசாச் சழக்கன்
ஆளுக் கிசைந்தபடி பேசித் – தெருவில்
அத்தனை பெண்களையும் ஆகாதடிப்பான்''
(கண்ணன் பாட்டு)

மகாகவி உருத்திரமூர்த்தி படைத்த முத்துக்குளிக்கும் சீலன், எமனுக்கு (காலனுக்கு) லஞ்சம் கொடுத்து தப்பிக் கின்றான், ஆனால், மகாகவி பாரதியோ, **''காலா...! உனை நான் சிறு புல்லென மதிக்கிறேன். என்றன் காலருகே வாடா... ! சற்றே உனை மிதிக்கி றேன்...!''** என்று காலனுக்குரைக்கிறார்.

பாரதி வாழ்ந்த காலத்துக்கும் மகா கவி உருத்திரமூர்த்தி வாழ்ந்த காலத் திற்கும் இடையிலிருக்கும் சமூக வேறு பாடுகளை இவர்களின் படைப்பு க ளிலிருந்து தெரிந்துகொள்கின்றோம்.

பாரதியின் பாஞ்சாலி சபதம் மற்றும் குயில்பாட்டு ஆகியனவற்றையும் மகா கவி உருத்திரமூர்த்தியின் காவியங்களு டன் எமது விமர்சகர்கள் ஒப்புநோக்கி யிருக்கின்றனர்.

( 18ஆம் பக்கம் பார்க்க)



## மண்டை தீவு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு!

மண்டைதீவு புனித பேதுருவானவர் கல்விக்குழுவின் புலம்பெயர் வாழ் பங்கு மக்களுக்கான தேநீர் உபசாரமும் மறைக்கல்வி மாணவர்களின் கலைநிகழ்வுகளும் பரிசளிப்பும் தீவகக் கோட்ட குரு முதல்வரும் மண்டைதீவு - அல்லைப்பிட்டி பங்குத்தந்தையுமான மனுவேற்பிள்ளை டேவிட் அடிகளாரின் தலைமையில் நடைபெற்றன. அன்றைய தினம் புலம் பெயர்வாழ் பங்கு மக்கள் ரூபா பத்து லட்சத்துக்கும் மேல் அன்பளிப்புச் செய்திருந்தனர்.

காலைக்கதிர்

கிறிஸ்தவ செய்தி இதழ்

TCNL

உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37

ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## காணாமற் போனவர்கள் அலுவலகத்திற்கு வரவேற்பு

இலங்கை அரசுத் தலைவர்மைத்திரிபால சிறிசேன காணாமற் போனவர்கள் அலுவலகத்திற்கு கையோப்பம் இட்டுள்ளமை நம்பிக்கை தருகிறது. காணாமற்போனவர்கள் குறித்த தேடலில் தீவிர நடவடிக்கைகள் நிகழ்ந்தால் மக்களின் நம்பிக்கை இன்னும் வளரும் எனக் கத்தோலிக்க சமுதாய ஆர்வலர் ருக்கி பேர்னாண்டோ கூறியுள்ளார். இது நல்லதொரு திசையில் நாட்டை வழிநடத்தும் என ஐ.நா. பொதுச் செயலர் அந்தோனியோ கூட்டேரஸ் கூறியுள்ளார்.

# பவள விழாக்காணும் நாவாந்துறை பரலோக அன்னை ஆலயம்



நாவாந்துறை புனித பரலோக அன்னை ஆலயப்பங்கினர் 1942ஆம் ஆண்டு பங்குத் தந்தையாகப் பணியாற்றிய வில்லியம் இயேசுதாசன் வண.அ.ம.தி அடிகளாரால் ஆயத்தங்கள் செய்யப்பட்டு ஆவணி மாதம் 15ஆம் திகதி அப்போதைய யாழ்.ஆயர் மேதகு ஜே.ஏ.கியோமர் ஆண்டகையால் அடிக்கல் நடப்பட்டதன் பவள விழாவை (1942 - 2017) கொண்டாடுகின்றனர். பவள விழாக் காணும் நாவாந்துறை பரலோக அன்னை ஆலயவிழா பற்றி நாவாந்துறை பங்குத்தந்தை வண. சீ.யே அன்ரனிபாலா அடிகளார் காலைக்கதிர் கிறிஸ்தவ இதழுக்கு தெரிவிக்கும்போது, நளை மறுதினம் 15ஆம் திகதி காலை 7 மணிக்கு திருநாள் கூட்டுத் திருப்பலி யாழ். ஆயர் மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேர்ணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படும். அதற்கு முந்திய தினம் வெஸ்பர்ஆராதனையை யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் கலாநிதி பி.ஜே. ஜெபரட்ணம் அடிகளார் நிகழ்த்துவார். நாவாந்துறை மக்கள் அனைவரும் இந்த நன்றியின் விழாவைக் கொண்டாடும் போது அன்னையின் பக்தர்கள் அனைவரும் திரண்டு வந்து அன்னையின் ஆசீர்பெற்றுச் செல்ல அன்புடன் அழைக்கிறோம் என அழைப்பு விடுத்தார்.

# உண்மையின் எண்ணங்கள்

## ஆலய பெருவிழாக் கொண்டாட்டங்கள் அர்த்தம் உள்ளவையாகட்டும்

வைரவிழா காணும் சின்ன உரோமை சில்லாலை புனித கதிரைமாதா ஆலயப்பங்கு மக்களையும் பவள விழாக்காணும் நாவாந்துறை பரலோக அன்னை ஆலயப்பங்கு மக்களையும் முதலில் வாழ்த்துவோம். தாம் பெற்ற விசுவா சத்தை பத்திரமாய் பாதுகாத்து வாழ்ந்து தம் பரம்பரையினருக்கு வழங்கியுள்ள இவ்வாலயங்களின் முன்னோரை நன்றியுடன் நினைப்போம். கிறிஸ்தவ உருவாக்கலின் தொட்டில் குடும்பம் என்பதை முன்னோர் எமக்கு வாழ்ந்து தாம் வாழ்ந்த விசுவாச வாழ்வை பத்திரமாக பாரம்பரியமாக வழங்கிச் சென்றுள்ளார்கள். இன்று எதிர்நோக்கப்படும் அனைத்து பிரச்சினைகளுக்குமான தீர்வு குடும்ப வட்டத்தின் உள்ளேயே உள்ளது. நவீன தொழில் நுட்பம் - கணினி உபயோகம் - சமூக ஊடகம் - தொலைக்காட்சி - தொடர் நாடகம் - சீரியல் - ரியூசன் என்பவற்றால் ஒவ்வொரு குடும்பமும் கிறிஸ்தவ உருவாக்கலின் தொட்டிலாக திகழ முடியாமல் போவது தடுக்கப்பட வேண்டும். இவற்றோடுகூட எப்படி குடும்பங்கள் கிறிஸ்தவ உருவாக்கலின் தொட்டிலாக திகழலாம் என்பது கண்டுபிடிக்கப்படவேண்டும்.

## சமூக ஊடகங்களை ஞானத்தோடு பயன்படுத்த இளையோர் உறுதி

இந்தோனேஷியாவின் யோக்யகார்த்தாவில் நடைபெற்ற 7ஆவது ஆசிய இளையோர் நாளில் கலந்து கொண்ட இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட ஆசிய இளையோர் சமூக ஊடகங்களை ஞானத்தோடு பயன்படுத்த உறுதியளித்தனர். தொழில் நுட்பமும் சமூக ஊடகங்களும் இளையோரின் சமூக வாழ்வில் ஓர் அங்கமாக மாறியுள்ள வேளை காழ்ப்புணர்வுப் பகைமை போன்ற எதிர்மறை நடவடிக்கைகளுக்கு அவற்றை பயன்படுத்தாமல் கடவுளின் வார்த்தையைப் பகிர்ந்து கொள்ளவும் மற்றவர்க்குத் தூண்டுதலாக வாழவும் இவற்றைப் பயன்படுத்த உறுதி எடுத்துள்ளோம் என ஆசிய இளையோர் நாள் நிகழ்வுகளில் கலந்துகொண்ட 21 ஆசிய நாடுகளைச் சேர்ந்த இளையோர் தாம் எடுத்துள்ள இத்தீர்மானத்தை இந்நிகழ்வின் நிறைவுத் திருப்பலியில் வாசித்தனர். 7ஆவது ஆசிய இளையோர் நாள் நிகழ்வுகளில் இந்தோனேஷிய மிதவாத முஸ்லிம் நிறுவனங்களைச் சார்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் தங்களின் பங்களிப்பை அளித்துள்ளன.

# வைரவிழாக் காணும் சின்ன உரோமை சில்லாலை புனித கதிரைமாதா ஆலயப்பங்கு



'சின்ன உரோமை' என அழைக்கப்படும் சில்லாலை பங்கின் புனித கதிரைமாதா ஆலயம் அடியிடப்பட்டு (1957 -2017) வைரவிழா காண்கிறது. வைரவிழா காணும் சின்ன உரோமை சில்லாலை புனித கதிரைமாதா ஆலயப்பங்குத் தந்தை வண. ஏ. அகஸ்ரீன் அடிகளார் மேற்படி வைரவிழா பற்றி கருத்துத்தெரிவிக்கும் போது, நாளை மறுதினம் 15ஆம் திகதி பெருவிழா திருப்பலியை யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார் நிகழ்த்துவார். அதற்கு முன்னதாக அன்னையின் பாடல்கள் அடங்கிய இறுவட்டு ஒன்று வெளியிடப்படும். அத்துடன், ஆவணி மாதம் 25ஆம் திகதி சில்லையூர் பற்றிய சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படும். இந்நிகழ்விற்காக ஆலயத்தை சுற்றி உள்ள வீதிகள் செப்பனிடப்பட்டுள்ளன. தேக்கு மரத் தோட்டம் ஒன்று ஆலயத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ளது. ஆலய முன்றிலில் அமைந்துள்ள புனித யோசவாஸ் அடிகளாரின் முன்றிலில் சிமேந்துத்தரை அமைக்கப்பட்டுள்ளது. இவ்விழாவையொட்டிய செலவுகளுக்கும் செயற்பாடுகளுக்கும் நிதி உதவி செய்த அனைவருக்கும் குறிப்பாக வெளிநாடுகளில் வாழும் சில்லாலை பங்கு மக்களுக்கும் அன்பான நன்றிகள்.- என்றார்.

## மடுத் திருத்தலத்தின் ஆவணித் திருவிழா பற்றி எமிலியானுஸ்பிள்ளை அடிகளார்




மடு திருத்தலத்தின் பரிபாலகர் வண.எமிலியானுஸ்பிள்ளைஅடிகளார் திருநாள் பற்றிய விவரங்களை காலைக்கதிர் கிறிஸ்தவ இதழுக்குத் தெரிவிக்கும் போது ஆலயச்சுற்றுப்புறச் சுழல்களில் சத்தம் போடுதல், விளையாடுதல் வியாபாரம், கேலி கூத்துகள் என்பன முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளன. அத்தோடு மது அருந்துதல் சீட்டு விளையாடுதல் வானொலி கேட்டல் போன்றன முற்றாகத் தடைசெய்யப்பட் டுள்ளது. நாளை 14 ஆம் திகதி நற்கருணை வேஸ்பர் ஆராதனையும் ஆசீரும் இடம் பெறும். நாளை மறுதினம் 15ஆம் திகதி காலை திருவிழா திருப்பலியானது தமிழ் சிங்கள மொழிகளில் ஆயர்கள் குருக்கள் இணைந்து கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுப்பார்கள். தொடர்ந்து மடு அன்னையின் திருச்சொரூப பவனியும் மடு அன்னையின் ஆசீர்வாதமும் இடம் பெறும்.- என்றார்.

## உரோம் நகரில் கடும் வறட்சி நிலவும்வேளை தண்ணீரைச் சேமிப்பதற்கு திருப்பீடம் புதிய நடவடிக்கை



வத்திக்கான் தூய பேதுரு வளாகத்திலுள்ள நீரூற்றுகள் வத்திக்கான் தோட்டத்திலுள்ள நீரூற்றுகள் உட்பட வத்திக்கானிலுள்ள எல்லா நீரூற்றுகளையும் நிறுத்துவதற்கு வத்திக்கான் நாட்டு நிர்வாகம் தீர்மானித்துள்ளது. நம் பூமியாகிய, பொதுவான இல்லத்தைப் பாதுகாப்போம் என திருத்தந்தை பிரான்சிஸ் வெளியிட்ட இறைவா உமக்கே புகழ் என்ற திருமடலின் போதனைகளுக்கு ஒத்திணங்கிச் செல்வதன் அடையாளமாக வத்திக்கான் நாட்டு நிர்வாகம் இத்தீர்மானத்தை எடுத்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தாலியில் கடந்த அறுபது ஆண்டுகளில் இவ்வாண்டின் வசந்தகாலம் கடும் வறட்சியாக இருந்ததென்றும் இவ்வாண்டின் முதல் ஆறு மாதங்களில் உரோம் நகரில் 26 நாள்களே மழை பெய்தது. உரோம் நகரின் சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள குடிதண்ணீர் குழாய்களில் எப்போதும் தண்ணீர் ஊற்றிக் கொண்டே இருக்கும். இந்தக் குழாய்களுக்கு அடைப்பான்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# ஆடம்பரமும் அதிக செலவும் கௌரவமல்ல; முட்டாள்தனம்!




சந்தியடியில் வாத்தியார்,ஏரம்பர்,ஜீவன், ரூபன்,பேப்பர்தம்பி,கச்சான் விற்கும் செல்லாச்சி ஆகியோர் வந்திருந்தனர். அப்போது தாமதமாக வந்த ஏரம்பர் ''கண்டறியாத கலியாணவீடு செய்யினமாம்.இனஞ்சனத்துக்குச் சொல்லாமல் செய்யிறதுக்குப் பேர் கலியாணமே?'' என்று கோபத்துடன் கேட்டபடி அமர்ந்தார்.

ஏரம்பரின் புலம்பலைக் கேட்ட செல்லாச்சி ''வரேக்கையே வலு வெப்பியாரத்தோடை வருகிற மாதிரித் தெரியுது'' என்றாள்.

நீயே நியாயத்தைச் சொல் ''என்ற ஏரம்பர்''என்றை பேத்தி முறையானவளுக்கு வெளிநாட்டிலை கலியாணம் நடந்தது. அதுக்கு அங்கையிருக்கிற எங்கடையாக்களிலை ஒருத்தருக்கும் சொல்லவில்லையாம்.இப்ப அவளின்றை தகப்பனும் தாயும் ஊருக்கு வந்திருக்கினம்.அவையிற்றை கேட்டால், கலியாணத்தை நடத்தினது மணமக்களாம்.அவை இன்னாருக்குத் தான் சொல்லுறது என்று முடிவெடுத்தாலை எல்லோருக்கும் சொல்ல முடியவில்லையாம்'' என்று கோபத்துக்குக் காரணத்தை விளக்கினார்.

இதைக்கேட்டு வாய்விட்டுச் சிரித்த பேப்பர்தம்பி ''நீங்கள் இன்னும் பழைய காலத்திலையே இருக்கிறீங்கள்.வெளிநாட்டிலேயே பிறந்து வளர்ந்த எங்களுடைய ஒரு தலைமுறையின் பழக்க வழக்கங்கள் வித்தியாசமானவையும் யதார்த்தமாக யோசித்து எடுக்கப்பட்ட முடிவுகளாகவும் இருக்கு'' என்றான்.

இதைக் கேட்ட ஏரம்பர் ''அந்தக்காலத்திலை....''என்று ஏதோ சொல்லத் தொடங்கினார்.

அவரை இடைமறித்த வாத்தியார் ''ஏரம்பர் கொஞ்சம் பொறுமையாகக் கேளும். வெளிநாடுகளிலை கடன் கேட்டால், என்னத்துக்குக் கடன் என்று கேட்பாங்களாம்.இறப்பு அல்லது மருத்துவச் செலவு என்று நினையாப்பிரகாரமாக நடக்கிறதுகளுக்கு மட்டும்தான் கைமாத்தாகப் பணம் கொடுப்பாங்களாம்.கலியாணச் செலவுக்குக் கடன் கேட்டால் 'கலியாணம் நடத்தவே காசில்லாத உனக்கு, ஏன் இப்ப கலியாணம் என்று கேட்பாங்களாம்.இப்படி ஒரு நிலைமையிலை தங்கடை திருமணத்துக்குத் தாங்களே உழைத்து பணம் சேர்த்த பிறகு, தங்கடை வசதிக்கு ஏற்ற மாதிரி கலியாணத்தை செய்யிறதுதான் வெளிநாடுகளிலை வழக்கம். அங்கேயே பிறந்து வளர்ந்த எங்கடை பிள்ளைகள் இப்ப அந்த வழக்கத்தைப் பின்பற்றுகினம்.இதிலை நாங்கள் கோபப்பட என்ன இருக்கு'' என்றார்.

''இங்கேயும் அப்பிடியொரு வழக்கம் வந்தால் எந்த நேரமும் கைபேசிக்குள்ளை தலையைப் புதைச்சுக் கொண்டு திரியிற கனபேருக்கு கலியாணமே நடக்காதே'' என்று ஜீவனைக் கடைக்கண்ணால் பார்த்தபடி நக்கலாகச் சொன்னாள் செல்லாச்சி.

''வெளிநாடுகளிலை நிறையப் பேரை அழைத்து விருந்து வைச்சுக் கலியாணம் செய்ய நிறையப் பணம் செலவாகும். தூரத்திலை இருக்கிறவைக்குப் போய் சொல்லுறதே செலவும் நேரமும் பிடிச்ச வேலை.அதனால் மணமக்கள் தமது வீட்டாரோடையும்நெருக்கமானநட்புகளுடனும் திருமணத்தை முடித்தால் போதும் என்று நினைக்கிறார்கள்.உண்மையில் இங்கும் அப்படிச் செய்யிற பழக்கம் வந்து கொண்டு இருக்கு.நீங்கள் விரும்பாவிட்டாலும் இன்னும் கொஞ்சம் காலத்தில் சாமத்திய வீடு செய்யிறதே பகிடிக்குரியதாகி விடும். ஏனென்றால் பெண்கள் நாகரிகமடைவது என்பது உடை அணிவதிலோ,ஊர் சுற்றுவதிலோ கிடையாது.சாமத்தியவீடு போன்ற விடயங்களைத் தூக்கி எறிவது என்ற உண்மை இங்கு இளைய தலைமுறைகளிடையே பரவி வருகிறது.'' என்று யதார்த்தத்தைப் போட்டுடைத்தான் பேப்பர்தம்பி.

''வெளிநாடுகளில்இருந்து,விடுமுறைக் காலங்களில் இங்கு வரும் எம்மவர்களின் பிள்ளைகளுக்கும்,இங்குள்ள இளைய தலைமுறையினருக்கும் இடையே ,இந்த மாதிரிவிசயங்களில்கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்வது, நிச்சயமாக ஆரோக்கியமாக இருக்கும்.இதனை இங்குள்ள சிவில் அமைப்புகள் வழிநடத்த முன்வர வேணும். ஏனென்றால் யுத்தத்தால் பெரும் பொருளாதார அழிவைச் சந்தித்திருக்கிற நாங்கள், வீண் ஆடம்பரங்களால் இருக்கிற பொருளாதார வளங்களையும் வீணாக்கி, இன்னும் இன்னும் கீழே போய்க் கொண்டிருக்கிறம்.அதனால் இவர்களிடையேயான கருத்தாடல்கள் உண்மைகளைப் பகிர்ந்து, எதிர்காலத்தை வளப்படுத்த உதவும்'' என்றார் வாத்தியார்.

அப்போது ரூபன் ''இங்கே நடக்கிற வீட்டு நிகழ்வுகளைப் பார்த்தால், காசைக் கொடுத்து முட்டாள் பட்டத்தை விரும்பி வாங்கிற மாதிரியெல்லே இருக்கு.முந்தநாள் சாமத்திய வீடு ஒன்றுக்கு திடீரென்று மல்லிகைமாலை வேணும் என்று போனம். விலையைக் கேட்டால் தலையைச் சுத்திப் போட்டுது.'எதுக்கு இவ்வளவு விலை?' என்று கேட்டால் அது மதுரை மல்லிகையாம்.இந்தியாவிலை இருந்து விமானத்திலை எடுப்பிக்கிறது என்று சொல்லுப்பட்டுது.வாங்கிக் கொண்டு போனம்.சாமத்திய வீட்டுக்கு தெற்கிலை இருந்து வந்த ஒருவர் நடந்ததைக் கேட்டுப் போட்டு 'இது காட்டு மல்லிகை. எங்கடை பக்கத்திலை குப்பையாக இருக்கு. மணந்து பார்த்தால் மல்லிகை மணமே இருக்காது' என்று சொன்னார். எங்களுக்கும் வாசம் இல்லையென்றது அப்பதான் உறைத்தது.எப்பிடியோ நாங்கள் முட்டாளாகிவிட்டம் என்று புரிந்தது'' என்றான்.

''முதலிலையே ஆற அமர விசாரிச்சு வாங்கியிருக்கலாமே?''என்று கேட்டான் ஜீவன்.

''அதுக்கு என்ன செய்யிறது.இப்ப வீட்டிலை நடக்கிற வைபவங்களை எப்பிடி நடத்த வேணும் என்று வீட்டுக்காரர் திட்டமிடுவதில்லையே.வீடியோகாரர் தானே திட்டமிடுகினம்.மாலையிலை இருந்து மணவறைவரை அவை சொன்ன மாதிரியிருக்கவேணும் என்றும் இல்லாவிட்டால் தாங்கள் வரமாட்டம் என்றும் சொல்லுகினமாம்''என்றான் ரூபன்.

''வீடியோகாரரிடம் கேட்டால் வீட்டுக்காரர் படம் எடுத்தது வடிவில்லை என்று பிரச்சினைபடுவினம்.அதாலைதான் நாங்கள் வடிவுக்குச் செலவழிக்கச் சொல்லுறம்'என்று நியாயப்படுத்துகினம்'' என்றான் பேப்பர்தம்பி.

''இதெல்லாம் மேயிற மாட்டை நக்கிற மாடு கெடுத்த கதைதான், செத்தவீட்டுக்குச் சுடலையிலை வைச்சு சோடா கொடுக்கிற பழக்கம் போல, ஒருத்தரைப் பார்த்து இன்னொருத்தர் நடக்கப் போய் கடைசியிலை எல்லோரும் படுகுழிக்குள்ளை விழுந்த கதையாகப் போட்டுது''என்றார் வாத்தியார்.

''அப்ப எங்கடை வீட்டு விசேசங்களுக்கு இனம்சனத்தைக் கூப்பிட்டு, நாலுகாசு செலவழிச்சு,அவையை உபசரிச்சுக் கூடிக்குலாவி மகிழ்ச்சியடையிறது பிழையென்று சொல்லுறீங்களோ'' என்று படபடத்தார் ஏரம்பர்.

அதற்கு வாத்தியார் ''ஒவ்வொருத்தருக்கும் தங்கடை வீட்டு நிகழ்வை எவ்வளவு பணம் செலவழிச்சு,எப்படி நடத்த வேணும் என்று தீர்மானிக்கிற உரிமை இருக்கு.ஆனால் ஏன் வீண் ஆடம்பரம் என்றுதான் கேட்கிறம்'' என்றார்.

''காசு இருக்கிறவை அள்ளி எறிஞ்சு செய்யினம்.அதனாலை இல்லாதவையும் வேற வழியில்லாமல், தகுதிக்கு மீறிச் செலவுசெய்ய வேண்டியிருக்கு.அதேநேரம், கஷ்டப்பட்டுத் தேடின காசை வீண் ஆடம்பரங்களுக்குச் செலவு செய்து விடுவதால்,பொருளாதாரத்திலை உயர முடியாமல் மீண்டும் கீழேயே இருக்க வேண்டியிருக்கு'' என்று யதார்த்தத்தைச் சொன்னாள் செல்லாச்சி.

''செல்லாச்சி சொல்வது மிகவும் சரி'' என்று பாராட்டிய பேப்பர்தம்பி ''மற்றவர்கள் சொல்லுகினம் என்பதாலேயே ,நாங்கள் செய்யும் ஒரு செயல் ஆடம்பரம் ஆகிவிடப் போவதில்லை.ஒரு விடயத்துக்கு அவசியத்தை மீறி அல்லது நமது சக்தியை மீறி,இன்னும்சொல்வதானால் அளவுகடந்து தேவையில்லாமல் செலவு செய்வதே ஆடம்பரம்'' என்றான்.

''உண்மைதான்,திருமணத்தை எடுத்துக் கொண்டால்,அலங்காரம்,உடுப்பு,படப்பிடிப்பு,அழைப்பிதழ், சாப்பாடு,போன்றவை தேவைதான்.இவற்றுக்கான செலவை அதிகமாகச் செய்வதைத்தான் ஆடம்பரம் என்று சொல்கிறோம்''என்றார் வாத்தியார்.

அதனைத் தலையசைப்பால் ஆமோதித்த ரூபன்''இதிலை நியாயம் இருக்குத்தான், உதாரணமாக, அழைப்பிதழுக்குப் பெரும் தொகைப் பணத்தைச் செலவு செய்வது, தங்கடை கௌரவத்தை உயர்த்தும் என்று பலரும் நம்புகினம்.ஆனால் அது முட்டாள்தனத்தின் வெளிப்பாடு என்பது பாவம் அவர்களுக்கு விளங்குதில்லை.அதிக விலையில் அழைப்பிதழ் அடிக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள்.அவற்றில் வீட்டுக்காரர் மட்டுமே சிலதுகளைப் பாதுகாத்து வைப்பார்கள். மிகுதி எல்லாமே குப்பைக்குத்தான் போகின்றன.அதாவது கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை அழைப்பிதழாக மாற்றி,குப்பைத்தொட்டியை நிரப்புகினம். ஆகவே அழைப்பிதழுக்கான செலவை முடிந்தவரை குறைப்பதுதானே புத்திசாலித்தனம்.இதனால் நமக்குத்தானே நன்மை''என்று சொன்னான்.

''நீங்கள் அதிக செலவு பற்றிக் கவலைப்படுகிறியள்.சரியானதிட்டமிடல் இல்லாமல் பொது வேலை ஒன்று இழுத்தடிக்கப்பட்டு ,மக்கள் பணம் வீணாகுதே,அதைப்பற்றி என்னசொல்லுறியள்?'' என்று புதுக்கதை தொடங்கினான் ஜீவன்.

''விளக்கமாகச் சொன்னால்தானே தெரியும்''என்றார் ஏரம்பர்.

சொல்லத் தொடங்கினான் ஜீவன்.

''யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இருக்கிற சேர்.பொன்.இராமநாதன் வீதியை 'கார்பெட்' வீதியாக்கியது யாழ். மாநகரசபை.இதற்கு நகரை அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ் நிதி கிடைத்ததாம். வீதியைப் போட்டவை ,ஒருபக்கத்தில் வடிகால் கட்டிச்சினம்.அதற்கு மூடியும் போட்டவை.இப்ப கட்டின வடிகாலின் பக்கச் சுவர்களை இடித்து உயரத்தைக் குறைக்கினம்.ஏனென்றால் வீதி மட்டத்தை விட வடிகால் உயரமாகிவிட்ட தாம். மழைத்தண்ணீர் வடிகாலுக்குள் போக வழியில்லையாம்.இதனால் ஏற்படுகிற வீண் செலவுக்கு யார் பொறுப்பேற்பது.மேற்பார்வைக்கு எத்தனை பேரை வைச்சிருப்பினம்.கடைசியில் மக்கள் பணம் கரியானதுதான் மிச்சம்.அரசுப் பணத்தை வீணடித்த குற்றத்துக்கு யார் பதில் சொல்வது என்று மக்கள் கேட்கினம்''என்று சொல்லி முடித்தான் ஜீவன்.

''அப்ப நானும் ஒரு விசயம் சொல்ல வேணும்''என்று பீடிகையுடன் தொடங்கிய ரூபன்''நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சுற்றாடலில் வாகனப் போக்குவரத்துக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கு.ஆலயச் சூழலில் குடியிருப்பவர்களுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டு,சனம் அதிகமில்லாத நேரத்தில் மட்டுமே வாகனத்தில் போய்வரலாம் என்று விதிகளை இறுக்கமாக கடைப்பிடிக்கிறார்கள்.இந்த நிலையில், போனவெள்ளிக்கிழமைசுவாமி வெளிவீதி வலம்வரும் சமயத்தில்,அதிகமான பக்தர்கள் நடமாட்டம் ஆலய வீதிகளில் இருந்தது. அப்போது மக்களுக்கு இடையூறாக பிரமுகர்களின் அகலமான வாகனங்கள் போய் வந்தன.சாதாரண மக்களுக்கு விதிகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்கும் மாநகரசபை , பக்தர் நடமாட்டம் அதிகமான நேரத்தில் பிரமுகர்களின் வாகனங்களை ஏன் அனுமதித்தது என்று மக்கள் சலித்துக் கொண்டனர்'' என்று சொல்லி மூச்சு வாங்கினான்.

''பிரமுகர்கள் வாகனங்களை வெளியில் நிறுத்தி மற்றைய மக்கள் போல நடந்தே போய் சாமி கும்பிட்டிருக்கலாமே''என்று சொன்னாள் செல்லாச்சி.

இதற்கு புன்னகைத்த பேப்பர்தம்பி ''அவை சாமி கும்பிடப்போக வில்லை செல்லாச்சி.அன்றைய தினம் கோவிலுக்கு அருகே இருக்கும் மாநகரசபையின் பழைய கலியாண மண்டபத்தில் புத்தகக் கண்காட்சி நடந்தது.அதற்கான நிகழ்ச்சியில் பங்கேற்கத்தான் அந்தப் பிரமுகர்கள் எல்லோரும் வந்தவர்கள்.'' என்றான் .

''அதுக்கு சனம் அதிகமான நேரத்தில் நிகழ்ச்சியை வைக்காமல் ,சனம் குறைவான நேரத்தில் வைச்சிருக்கலாமே. அந்த நேரத்தில் லொறியிலை பிரமுகர்கள் வந்தால் கூட சனத்துக்கு பிரச்சினை வராதுதானே'' என்றாள் செல்லாச்சி.

இதற்கெனவே சமயம் பார்த்திருந்தவன் போல ''அதுதானே, அப்ப செல்லாச்சியை மாநகரசபை ஆணையாளர் ஆக்கி விடுவம்.அந்த மாதிரி நிர்வாகம் நடக்கும்'' என்று நக்கலடித்தான் ஜீவன்.

அதனைக் காதில் வாங்காமலேயே கச்சான் வியாபாரத்தைக் கவனித்தாள் செல்லாச்சி.

''யாழ்.மாநகர சபை சிறப்பாகத்தான் செயல்படுகுது என்று பொதுமக்கள் கதைக்கினம்.ஆனால் இந்த மாதிரியான சில விசயங்களால்,நல்லதுகளும் மறைந்து விடுகின்றன.சம்பந்தப்பட்டவை இதிலை கவனமாக இருக்க வேணும்'' என்றார் வாத்தியார்.

''என்ன செய்யிறது. எங்களுக்கு வழி காட்டுவினம் என்று நாங்கள் நம்பினவை,தங்களுக்கை கடிபடுகினம்.இப்ப அவையிட்டை இருந்து எங்களைக் காப்பாத்திறதே எங்களுக்குப் பெரும்பாடாக இருக்கு.இதுகளுக்கெல்லாம் எப்பதான் முடிவோ?யார்தான் வந்து காப்பாற்றப் போகினமோ?''என்று அங்கலாய்த்தபடியே எழுந்து நடந்தார் ஏரம்பர்.

''இப்பிடியே சொல்லிக் கொண்டு இருந்தால் எதுவும் நடக்காது.நாங்கள்தான் எங்களுக்காக எதையும் செய்ய வேணும்'' என்றபடியே கச்சான் கடையைக் கட்டத் தொடங்கினாள் செல்லாச்சி.

# சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் இந்த அரசில் இருக்க மாட்டார்கள்!

## மஹிந்தவுடனேயே இருப்பர் என்கிறார் ரோஹித்த எம்.பி.



ஜாஎல, ஒக.13

உண்மையான சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் இந்த அரசில் இருக்க மாட்டார்கள். அவர்கள் மஹிந்த ராஜபக்ஷ வுடன் இருப்பார்கள்.

-இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித்த அபே குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஜாஎல பிரதேசத்தில் நடை பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையி லேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு:-

நாட்டில் இடம்பெறுவது இலங்கை சுதந்திரக் கட்சியின் ஆட்சி அல்ல. இது முழுக்க முழுக்க ஐக்கிய தேசியக் கட் சியின் அரசாங்கமாகும்.

சிறிமாவோ பண்டாரநாயக்க இந்தநாட்டைத்தன்னிறைவான நாடாக மாற்ற அர்ப்பணிப்புடன் செயற்பட்டார் ஆர்.பிரேமதாஸ, ஜே.ஆர்.ஜெயவர்த்தன போன்றவர்களிடம் பிழைகள் இருந் தாலும் அவர்கள் நாட்டுக்குச் சேவையாற்றி இருந்தனர். சந்திரிகாவின் காலத்தில் எதுவும் நடக்கவில்லை. நாமும் அந்த அரசில் அங்கம் வகித் தோம்.

உண்மையைச் சொல்ல வேண்டுமெனில் மஹிந்த ராஜபக்ஷவே இந்த நாட்டுக்கு மிகப் பெரிய சேவையை ஆற்றி இருந்தார். பிளவடைய இருந்த நாட்டை மீளவும் ஒன்றி ணைத்தார். பயங்கரவாதத்தை இல்லாதொழித்து பல அபி விருத்தித் திட்டங்களை முன் னெடுத்தார். இதனை எவ்வித அச்சமும் இன்றி கூற முடியும். -என்றார். (ச)

## இரத்ததான நிகழ்வு

காரைநகர், ஒக். 13

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் 22 ஆம் ஆண்டு நிறைவை முன் னிட்டு காரைநகர் வலந்த லைச் சந்தியில் உள்ள காரை நகர் தொழிற்பயிற்சி நிலை யத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை இரத்ததான நிகழ்வு நடைபெறவுள்ளது.

இரத்ததானம் செய்ய விரும்புபவர்கள் கலந்து கொள்ளுமாறு தொழிற்பயிற்சி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் கேட்டுக்கொண் டுள்ளார். (ச)

## நூலகவியல் டிப்ளோமா பரீட்சை செப்.9,10 இல்

யாழ்ப்பாணம், ஒக். 13

இலங்கைநூலக சங்கத்தால் நடத்தப்படும் நூலகவியல் டிப்ளோமா தரம் III இற்கான பரீட்சைஎதிர்வரும்செப்ரெம்பர் மாதம் 9, 10 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெற வுள்ளது

இதுவரை பரீட்சைக்கு விண்ணப்பிக்காத விண்ணப் தாரிகள் யாழ்ப்பாண நிலைய இணைப்பாளருடன் தொடர்பு கொண்டுவிண்ணப்பங்களைப் பெற்று காலதாமதமின்றி அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ச)

## மாலை பொழுதின் மயக்கத்திலே

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனது ஆரம்ப அரசியல் வாழ்வில் இலங் கையில் உள்ள ஏழுக்கும் மேற்பட்ட சிறைகளில் எட்டு ஆண்டு களாக தடுத்துவைக்கப் பட்ட ஒருவரால் தனது இன மக்கள் அனுபவிக்கும் இன்னல்களை இவ்வளவு கிள்ளுக்கீரையாக எண்ணிக்கொண்டு தனக்கொரு பெருவிழா நடத்துவதற்கு எப்படி மனம் வந்தது?

ஒருவேளை -

அமிர்தலிங்கத்தின் மரணத்தினால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு முதலாவது தடவையாக நாடாளுமன்ற உறுப்பினராகவும் நீலன் திருச்செல் வத்தின் மரணத்தினால் ஏற்பட்ட வெற்றிடத் தினால் இன்னொரு தடவையும் பதவிகளை பெற்றுக்கொண்டு வந்த அரசியல் பாரம்பரியத் தில் பயணம் செய்து செய்து சாவுகள் கொடுத்த சலுகைகள் சுவைக்கத் தொடங்கிவிட்டதோ என்னவோ.

இதில் மாவை அண்ணன் மாத்திரம் ஏக குற்றவாளியைப்போல விழித்துக்கொள்வதாக இங்கு அர்த்தம் கொள்ளுவது தவறு. இதேபோன்ற மார்தட்டு விழாக்கள், திருவாளர்கள் சம்பந்தன் - விக்னேஸ்வரன் ஆகியோருக்கும் கடந்த காலங்களில் நடைபெற்றதும் கொடி குடை ஆல வட்டங்களோடு கோமாளிகளாக அவர்கள் மேடையில் வீற்றிருந்த படங்கள் ஊடகங்கள் எங்கும் வெளிவந்ததும் யாரும் அறியாதது அல்ல. அவற்றுக்கு போட்டியாக கனடாவுக்கும் அழைத்து சம்பந்தருக்கு 'வாழும் வீரர்' என்று பட்டமளிப்பொன்றை நடத்தி புலம்பெயர்ந்த அமைப்பொன்று தன் பங்குக்கு திருப்திப்பட் டுக்கொண்டமை எல்லாம் பின் நடந்த சம்பவங் கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தங்கள் ஏக பிரதிநிதிகளாக தமிழ் மக்கள் தெரிவு செய்து கொண்டதன் காரணம், அந்த அமைப்பில் அங்கம் வகிக்கும் ஒவ்வொருவரினதும் மீதான தனி மதிப்பிலும் மரியாதையிலும் அல்ல. அந்த அமைப்பில் கொண்ட அபிமானத்தினால் மட் டுமே ஆகும். அது ஏன் என்ற வரலாற்றை திரும்பத்திரும்ப இங்கு நாம் பேச வேண்டிய தில்லை.

ஆனால், மாவை அண்ணன் உட்பட அந்த கட்சியில் அங்கம் வகிக்கும் பெரும்பாலானவர்கள் தமக்கு கிடைத்த வெற்றியை தாங்கள் ஏதோ வாழ்நாள் முழுவதும் உழைத்து பெற்றுக்கொண்ட பெருமைபோல தலைக்கு மேலே சுழற்றிக் கொண்டு திரிவதும் அதனை யாரும் கேள்வி கேட்க முடியாது என்று திமிரோடு நடந்துகொள் வதும் வேதனைக்கும் அதேவேளை பரிதாபத்துக் குரியது.

தங்களுக்கு தாங்களே ஒளிவட்டம் கீறுகின்ற தலைவர்களின் இந்தத் திருக்கூத்து தொடரு மானால், மக்களைப்பொறுத்தவரை இந்த நிகழ்வுகளுக்கு முன்பாகவும் வந்து நின்று ஒரு போராட்டத்தை செய்துவிட்டுப்போவதை தவிர வேறு வழியில்லை. போராட்டம்தான் அவர்களது வாழ்க்கையாயிற்றே! ★

## மழையுடன் கூடிய காலநிலை நாளை மறுதினம் வரை நீடிக்கலாம்!

### வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

கிழக்கு, ஊவா மற்றும் வடக்கு, வட மத்திய மாகாணங்களில் மழையுடன் கூடிய காலநிலை நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமை வரை நீடிக்கலாம் என வளிமண்டவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேற்கு, சப்ரகமுவ மற்றும் மத்திய, வடமேல் மாகாணங்களி லும், காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலும் காலை வேளையில் மழை பெய்யக்கூடும்.

இதேவேளை, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் பொலன்னறுவை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் 50 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகலாம் எனவும் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ச)

## இலங்கையில் பாரதி....

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பாஞ்சாலி சபதம் எழுதிய பாரதியார், மகா பாரதத்தில் வரும் அக்காட்சியை மீண்டும் தமது கவியாற்றலினால் நவீனமாக புனையவேண்டும் என்ற தூண் டலைவிட, தான் வாழ்ந்த இந் திய சமுதாயத்திற்கு வலியுறுத்திச் சொல்லவேண்டிய கருத்துக்களை பகிர்வதற்கு அதனை ஒரு ஊடகமாகப் பயன்படுத்தினார். *''தமிழ்ஜாதிக்குப்புதியவாழ்வு தர வேண்டுமென்று கங்கணம் கட்டி நிற்கும் பராசக்தியே என்னை இத்தொழிலிலே தூண் டினாள் . . . ''* என்றுதான் பாஞ் சாலி சபதத்திற்கு முன்னுரை எழுதினார் பாரதியார்.

கண்மணியாள் காதையின் பின்னுரையில் மகாகவி உருத் திரமூர்த்தி இவ்வாறு எழுதுகிறார்:

''கற்பனை கொண்டு செய்த கதை

இது,இதிலே நூறு சொற்பிழை இருத்தல் கூடும்.

சுவை பல குறைதல் கூடும்.

'அற்புதம்!' என்று

சொல்லும் அளவிலா திருக்கு மேனும்

'நற்பயன் விளைத்தல் கூடும்!' என்று தான்

நம்பித்தந்தேன். செல்லையன் என்ற இந்தச் சிறு கவிக்குரியோன் நம் மூர் எல்லையுட்

பிறந்து வாழும் எவனும்போல் ஒருவன்

ஆவான். புல்லல்ல, வளரவிட் டாற்,புது நெல்லாய்ப் பொலிவான், அல்ல, நெல்லல்ல

- நெல்லினுள்ளே நிறைகின்ற உயிரே என்க.

குறிப்பிட்ட பின்னுரையில் *''நெல்லல்ல - நெல்லினுள்ளே நிறைகின்ற உயிரே என்க.''* என்ற இறுதி வரிகளில்தான் மகாகவி உருத்திரமூர்த்தியின் சிந்தனை வளமும் கருத்தாழமும் எமக்குப் புரிகிறது. பாரதியும் பாஞ்சாலி சபதம் எழுதிஇ புதிய வாழ்வு தர விரும்பினார். மகாகவி உருத்திர மூர்த்தியும் *நெல்லினுள்ளே நிறை கின்ற உயிரே* என்க எனச் சொல்லி புதிய வாழ்வுதருவதற்கு தமது காவியத்தின் மூலம் முயன் றிருக்கின்றார்.

ஏற்கனவே தனித்தனி நூல்களாக வெளியான மகாகவி உருத்திர மூர்த்தியின் காவியங்களை ஒன்றாக இணைத்து தொகுத்து பதிப்பித் திருப்பவர் பேராசிரியர் எம். ஏ. நுஃமான். 2008 இல் தமிழ்நாடு அடையாளம் பதிப்பகம் இதனை வெளியிட்டிருக்கிறது. இதில் பின் னினைப்புகளும் இடம்பெற்றுள் ளன. ***நவீனதமிழ்க்காவியங்கள்*** என்றதலைப்பில்நுஃமான்விரிவான கட்டுரையை தந்திருக்கிறார்.

''நவீன தமிழ்க்கவிதையின் முன்னோடியான பாரதியே இத்த கைய நவீன தமிழ்க்காவியத்தின் முன்னோடியாகவும் அமைகின்றான். 1912ஆம்ஆண்டில்பதிப்பிக்கப்பட்ட பாரதியின் பாஞ்சாலி சபதம், குயில்பாட்டு ஆகிய இரண்டும் இத்தகைய நவீனகாவிய வடிவத்தின் முதன் முயற்சிகள் எனலாம்'' என்று பதிவுசெய்துள்ளார்.

மகாகவி உருத்திரமூர்த்தியின் கண் மணியாள் ஓடுகின்ற இறுதிக் காட்சியில், *''மாரியம் மன் வாசல் வழிவந்தாளே கண் மணியாள், ஊரின் ஒரு புறத்தே உறங்கினையோ மாரியம்மா...? நல்லான் ஓர் நல்ல வளை நாடுவது நாத் திகமோ...? எல்லோரும் ஒத்த குலம் என்று சொன்னால் ஏற்காதோ...?*

*எடி, முத்துமாரியம்மா எடுத்தொரு சொல் சொல்ல டியோ!''* என்ற வரிகள் வரு கின்றன.

பாரதியின் பாஞ்சாலி சபதத்தின் இறுதியில் பின்வரும் வரிகள் வருகின்றன: *''ஓம் தேவி பராசக்தி ஆணை யுரைத்தேன். பாவி துச்சாத னன் செந்நீர் அந்தப்பாழ்த் துரியோதனன் ஆக்கை இரத்தம், மேவி இரண்டுங் கலந்து - குழல் மீதினிற் பூசி நறுநெய்குளித்தேசீவிக்குழல் முடிப்பேன் யான்''*

இவ்வாறு இந்திய மகா கவியையும் இலங்கை மகா கவியையும் ஒப்பிட்டு ஆய்வு செய்யமுடியும். இத்தகைய முயற்சிகள் இலங்கையிலும் இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் பாரதி மற்றும் மகாகவி உருத்திரமூர்த்தி ஆகியோரை இன்றும் சுவைத்துக்கொண்டி ருக்கும் சுவைஞர்கள் மத்தியிலும் இடம்பெறுகின்றன.

(தொடரும்)



> உலக மக்களில் நூற்றுக்கு நான்கு பேர் இடது கைப் பழக்கமுள்ளோர்களாக இருக்கின்றார்கள் என்பது விஞ்ஞானிகளின் கருத்து.

# இடது கைப்பழக்கம்
# வரமா சாபமா?



ஒவ்வொரு வருடமும் ஒகஸ்ட் 13 ஆம் திகதி, இடது கைப் பழக்கமுள்ளவர்கள்தினமாகக்கொண்டாடப்படுகின்றது. இந்நாளில் இடக்கை பழக்கமுள்ளவர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள். வலது கைப் பழக்கம், இடது கைப்பழக்கம் இவையெல்லாம் மூளையைக் கட்டுப்படுத்தும் பகுதியைப் பொறுத்தே அமைகின்றன.

நம்மில் அதிகமானோர் வலதுகைப் பழக்கமுள்ளவர்களாக இருக்கிறோம். இடது கைப்பழக்கமுடையோர் செயல்களைக் கண்டு வியக்கிறோம். உலக மக்களில் நூற்றுக்கு நான்கு பேர் இடது கைப் பழக்கமுள்ளோர்களாக இருக்கின்றார்கள் என்பது விஞ்ஞானிகளின் கருத்து.

நீங்கள் என்றாவது உங்கள் வீட்டுக் கதவின் கைப்பிடியை வலது கையால் திறக்கும்போது, இதே கதவை இடது கைப்பழக்கமுள்ள ஒருவர் எப்படிச் சிரமமில்லாமல் திறக்கிறார் என்று சிந் தித்திருக்கிறீர்களா? என்றாவது கருத்தரங்குகளில் இருக்கையுடன் இணைக்கப்பட்டிருக்கும் மேசையைப் பார்த்து இது இடது கைப்பழக்கமுள்ள ஒருவருக்கு மிகவும் சிரமமான ஒன்றாயிற்றே என்று கவலை அடைந்திருக்கிறீர்களா? அவர்கள் மொத்த மக்கள் தொகையில் வெறும் 10% மட்டுமே என்றாலும், வாகனம் ஓட்டுதல் தொடங்கி, கணினியின் விசைப் பலகை வரை நாம் உருவாக்கிய பெரும்பாலான விஷயங்கள் வலது கைக்காரர்களுக்கு மட்டுமே வசதியான விதத்தில் அமைந்துள்ளன. வலது கைப்பழக்கமுடையோர் உருவாக்கிய உலகில் சிரமத்துடனேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் இந்த கைப் பழக்கமுள்ளவர்கள்!

### இடது கைப்பழக்கத்துக்கு என்ன காரணம்?

இதற்கு முக்கியக் காரணம், முன்பே அவர்கள் பரம்பரையில் யாரேனும் ஒருவருக்கு இடதுகைப்பழக்கம் இருந்திருக்கலாம். வெகு சிலருக்கு இயல்பாகவே வந்தாலும், பெரும்பாலும் இது பெற்றோர் அல்லது மூதாதையர்களிடமிருந்து குழந்தைகளுக்கு வருகின்ற ஒரு பழக்கமாகவே இருக்கிறது. மேலும், பெண்களைவிட ஆண்களில் இடது கைப்பழக்கமுள்ளோர் 23% அதிகமாகக் காணப்படுகிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

### யாரெல்லாம் இடது கைப் பழக்கமுள்ளவர்கள்?

மிகச் சாதாரண கேள்வியாகத் தோன்றினாலும், இது நாம் அறிந்திராத பல்வேறு விஷயங்களை உள்ளடக்கியிருக்கிறது. நம்மைப் பொறுத்தவரை ஒருவர் இடது கையால் எழுதினாலே அவர் இடது கைப்பழக்கமுள்ளவர் என்று எடுத்துக்கொள்வோம். ஆனால், தர்க்கரீதியாக இதை அணுகினால், எழுதப் பயன்படுத்தும் கை மட்டும் இதைத்தீர்மானிப்பதில்லை! எழுதுவது தொடங்கி, சாதாரண செய்கைகள், விளையாட்டுகள் மற்றும் கைகளால் செய்யப்படும் சின்னச் சின்ன வேலைகள் வரை, பெரும்பாலும் ஒருவர் எந்தக் கையைப் பயன்படுத்துகிறார் என்பதற்கு விடை இடது என்றால், நிச்சயம் அவர் இடது கைப்பழக்கமுள்ளவர்தான்! தன்னை அறியமாலே இடக்கையை நீட்டுவது, இயல்பாகவே இடக்கை தான் தன் பலம் என நினைத்துக் கொள்பவர் வரை அனைவருமே இடது கைப்பழக்க முள்ளவர்கள் தான் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

### இடது என்றால் புத்திசாலிகளா?

இடது கைப்பழக்கமுள்ளவர்கள் என்ற பரவலான ஒரு கருத்தும் நிலவி வருகிறது. அதனை ஏற்றுக்கொள்ள வைக்கும் விதமாகப் பல்வேறு செய்திகளும் ஆராய்ச்சி முடிவுகளும் அவ்வப்போது வந்தவண்ணம் உள்ளன.

ஆனால், இயல்பில் அவர்களும் வலது கைக்காரர்களைப் போலத்தான்! கைப்பழக்கம் மட்டுமே இங்கே மாறுகின்றது, மற்றபடி வலது கைக்காரர்களின் குணாதிசயங்கள் தான் இடது கைக்காரர்களுக்கும் இருக்கும் என்று சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறார்கள் நரம்பியல் நிபுணர்கள்.

### இடது கையில் எழுதப் பழகும் குழந்தைகளை வலது கைப் பழக்கத்துக்கு மாற்றலாமா?

இடது கைப்பழக்கத்தை மாற்ற முயற்சி செய்தால் மனரீதியாக நிறைய பாதிப்புகள் வரும் என்றொரு பொதுவான கருத்து இருக்கிறது. இங்கிலாந்தை ஆண்ட ஆறாம் ஜோர்ஜ் மன்னர் வலக்கைப் பழக்கத்திற்கு மாற்றியமையால் திக்குவாயாக மாறினார் என்று வரலாறு குறிப்பிடுகின்றது.

ஆனால், உண்மையில் அதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு என்கிறார்கள் மருத்துவர்கள். பெரும்பாலான பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் இடது கைப்பழக்கத்தை மாற்ற முயற்சி செய்வதற்கு ஒரே காரணம், இது வலது கைக்காரர்களுக்கு என்றே உருவாக்கப்பட்ட உலகம் என்பது தான்! பின்னாளில், இயல்பான வாழ்க்கை வாழ்வது அவர்களுக்குச் சிரமமாகி விடக் கூடாது என்பதே அவர்களின் கவலை.



### இடதுகைப் பழக்கமுடைய பிரபலங்கள் யார்?

இடதுகைப் பழக்கம் பல பிரபலங்களுக்கு இருந்திருக்கிறது. மாவீரன் அலெக்ஸாண்டர், ஓவியர் மைக்கேல் ஏஞ்சலோ, லியனார்டோ டாவின்ஸி, விஞ்ஞானி பெஞ்சமின் பிராங்ளின், புகழ்பெற்ற நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளின், டென்னிஸ் வீராங்கனை மார்ட்டினா நவரத்திலோவா, நடிகை மர்லின் மன்றோ, அமெரிக்க அதிபராக இருந்த ஜோர்ஜ் புஷ் - இப்படி ஒவ்வொரு துறையிலும் இடக்கை பழக்கமுடையோர் இருக்கின்றனர்.



இந்தப் பட்டியலில் லியனார்டோ டாவின்சி மேலும் ஒரு சிறப்புப் பெறுகிறார். பொதுவாக வலக்கையாலே கண்ணாடி பிம்பம் போல எழுதுவது கடினம். ஆனால், டாவின்சியோ கண்ணாடி பிம்பம் போல இடது கையால் எழுதும் ஆற்றல் பெற்றவராம்.

### ஆராய்ச்சியாளர்களின் முடிவு என்ன கூறுகின்றது?

பொதுவாக நமது மூளையின் வலது பக்கம் உடலின் இடது பக்கத்திற்கும் மூளையின் இடது பக்கம் உடலின் வலது பக்கத்திற்கும் சமிக்ஞைகளை அனுப்பிக் கட்டுப்படுத்துகின்றன. மூளையின் ஒரு பகுதியில் உள்ள சில நரம்புகள் கழுத்துப் பகுதி வழியே கடந்து உடலின் எதிர் பாகத்தில் முடிவடையும். மூளையில் உள்ள இந்த நரம்புகள்தான் நம் கைப்பழக்கத்தை உண்டாக்குகின்றன என்பது ஓர் ஆச்சரியமான விடயமாக உள்ளது.

1648 ஆம் ஆண்டு சர் தாமஸ் பிரவுன் என்பவர் எழுதிய வல்கர் எர்ரர்ஸ் (Vulgar Errors) என்ற நூலில் முதன் முதலாக இடக்கைப் பழக்கத்துக்கும் மூளைக்கும் உள்ள தொடர்பைப் பொது மக்களுக்குத் தெரிவித்தார். இடக்கைப் பழக்கம் பற்றிப் பலர் ஆய்வு செய்துள்ளனர். அன்னீட் (Anneet) என்பவர் செய்த ஆய்வின்படி இடக் கைப் பழக்க முள்ளோர்களை இரு வகையாகப் பிரித்தார். இடக்கைப் பழக்கம் பரம்பரையாகத் தோன்றுகிறது என்றும் பரம்பரைக் காரணமில்லாமல் தனித்தும் தோன்றுகிறது என்றும் வகைப்படுத்தினார்.

மெக்கால் (Mchal) என்பவர் நடத்திய ஆய்வின்படி வலக்கைப் பழக்கமுடையோரின் மூளையின் சிறு கிளைகள் (Occipital Horns), பக்கவாட்டு இரத்தக் குழாய்கள் ஆகியவை மூளையின் இடப்பக்கத்தில் இருந்தவற்றைக் காட்டிலும் ஐந்து மடங்கு நீளமாக இருப்பதாகக் கூறப்படுகிறது. இடக் கைப்பழக்கமுடையோர்களுக்கு இந்த அமைப்பு நேர்மாறாக இருக்கிறதாம். பெரும்பாலான பொருள்கள் வலக் கைப்பழக்கமுடையோர் பயன்படுத்தக் கூடியனவாகவே தயாரிக்கப்படுகின்றன. ஆனால், சில வெளிநாடுகளில் கத்திரிக்கோல், கோல்ஃப்விளையாட்டு விளையாடப் பயன்படும் மட்டை போன்ற பொருள்கள் இடக் கைப் பழக்கமுடையோர் பயன்படுத்த ஏதுவாகவும் தனிப்பட்ட முறையில் தயாரிக்கப்படுகின்றன.


எண்ணிக்கையில் மிகவும் குறைவு என்பதால் இடது கைக்காரர்களை நாம் இன்றும் ஆச்சர்யமாகப் பார்க்கிறோம். அதனாலேயே அவர்கள் தனித்தன்மையாகி விடுகின்றார்கள்! உலகெங்கிலும் உள்ள இடது கைப்பழக்கம் கொண்டவர்களைக் கொண்டாடும் விதமாக வருடந் தோறும் ஒகஸ்ட் 13 'சர்வ தேச இடது கைப்பழக்கமுடையோர் தினமாக அனுசரிக்கப்படுகிறது.

இடது கைப்பழக்கம் ஒன்றும் நோயோ பெரிய சிக்கலோ இல்லை என்பதை அறிவுறுத்தும் விதமாகவும் இது குறித்து ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் இந்த நாள் கொண்டாடப் படுகிறது. நிச்சயம் உங்கள் குடும்பத்திலோ அல்லது நண்பர்கள் வட்டாரத்திலோ இடது கைப்பழக்கம் கொண்டவர்கள் இருக்கலாம்.

அவர்களுக்கு மறக்காமல் வாழ்த்துச் சொல்லி ஊக்கப்படுத்துங்கள். ஒரு வேளை, நீங்களே இடது கைப் பழக்கம் கொண்டவர் என்றால், கையைக் கொடுங்கள். (அட! இடது கையைத் தான்!) நீங்கள் என்றுமே தனித்துவமானவர் என்று உணர்ந்து கொள்ளும் நாள் இது! ★

காலைக்கதிர் Kalaikkathir



## 2 ரயில்கள் நேருக்கு நேர் மோதி

# எகிப்தில் கோர விபத்து; 43 பேர் பரிதாபச் சாவு!





கெய்ரோ,ஓக.13

எகிப்து நாட்டின் அலெக் ஸாண்ட்ரியா நகரில் இரண்டு ரயில்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 43 பேர் உயிரிழந்துள்ளனர்; 150 இற்கும் அதிகமானோர் படுகாயம் அடைந் தனர்.

தலைநகர் கெய்ரோவில் இருந்து வந்த ரயிலும், கோர்சித் பகுதியில் இருந்து வந்த மற்றொரு ரயிலும் மோதியே இந்த விபத்து ஏற்பட் டுள்ளது.

படுகாயமடைந்தவர்கள் அரு கில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள் ளனர் என எகிப்து நாட்டின் சுகா தாரத்துறை செயலாளர் தெரிவித் தார்.

சமிக்ஞை விளக்கு மாற்றிப் போடப்பட்டமையே இந்த விபத் துக்குக் காரணமாக இருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட் டுள்ளது.

விபத்துக்கான காரணம் தொடர் பான விசாரணைகளை எகிப்து பொலிஸார்மேற்கொண்டுள்ளனர்.

கடந்த 10 ஆண்டுகளில் எகிப் தில் நடைபெற்ற மிகப்பெரிய விபத்து இது தான் என்று அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள் ளன. கடந்த 2013 ஆம் ஆண்டு கிஸாவில் நிகழ்ந்த விபத்தில் 19 பேர் உயிரிழந்தமை குறிப்பி டத்தக்கது. (ச)

## அ.தி.மு.க. இணைப்பில் மீண்டும் திடீர் முடக்கம்?





சென்னை,ஓக.13

சசிகலாவிவகாரத்தில் தெளிவான முடிவு தெரிந்த பின்னர் அ.தி. மு.க. அணிகள்இணைப் பில் தீவிரம் காட்டலாம் என்று ஓ.பன்னீர்செல் வம் அணியினர் தெரி வித்துள்ளனர்.

தினகரனுக்கு எதிராக நடவடிக்கை எடுத்த முத லமைச்சர் பழனிச்சாமி, சசிகலாவுக்கு எதிராக இதுவரை எந்தவித அறி விப்பையும் வெளியிட வில்லை. எனவே அ.தி. மு.க. பொதுச்செயலா ளராக சசிகலா பதவி வகிக்கின்றமை தொடர் பில் தேர்தல் ஆணை யகம் தீர்ப்பு வழங்கும் வரை காத்திருக்கலாம் என்ற முடிவுக்கு பன்னீர் அணியினர் வந்துள்ளனர் என அ.தி.மு.க. வட்டா ரங்கள் தெரிவித்துள் ளன.

அ.தி.மு.க. அணிகள் இணைந்தாலும் ஆட்சி நீடிக்குமா? என்ற உத்தர வாதம் இல்லையே என்ற கவலை பன்னீர் அணியி னருக்கு ஏற்பட்டுள்ளது. சசிகலாவையும், டி.டி. வி.தினகரனையும் முழு மையாக அ.தி.மு.கவில் இருந்து விலக்கினால் தான் ஆட்சியை மீத முள்ள 4 ஆண்டுகளும் சுமுகமாக நடத்த முடியும் என்று அவர்கள் கருது கிறார்கள்.

இதனால், சசிகலா விவகாரத்தில் தெளி வான முடிவு எட்டப்பட்ட பிறகு அ.தி.மு.க. அணி கள் இணைப்பு பேச்சில் தீவிரம் காட்டலாம் என்று அவர்கள் தீர்மா னித்துள்ளனர்.

இதன் காரணமாக அ.தி.மு.க. அணிகள் இணைப்பு முயற்சிக ளில் திடீர் முடக்கம் ஏற் பட்டுள்ளது.

அ.தி.மு.க. அணிகள் இணையுமா? என்பதில் கேள்விக்குறி எழுந்துள் ளது. சசிகலா பதவி தொடர்பில் தேர்தல் ஆணையகம் தரும் தீர்ப்பின் மூலமே இதற் குப் பதில் கிடைக்கும் என தமிழக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக் கின்றன. (ச)



## சீனாவில் சூறாவளி: 5 பேர் சாவு!

பீஜிங், ஓக. 13

சீனாவின் மங்கோ லியா பகுதியில் ஏற்பட்ட சூறாவளியில் சிக்கி நேற்றுமுன்தினம் வெள் ளிக்கிழமை ஐந்து பேர் உயிரிழந்தனர்.

இந்தச் சூறாவளியால் சுமார் 30 வீடுகள் சேதம டைந்தன. இதன் காரண மாக 270 பேர் பாதிக்கப் பட்டனர் என சீன ஊட கங்கள் தெரிவித்துள் ளன.

இந்தச் சூறாவளியால் பாதிக்கப்பட்டுள்ள மக்க ளுக்கு நிவாரண உதவி கள் வழங்கும் நடவடிக் கைகளை சீன அரசு மேற் கொண்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ச)

## ஒட்ஸிசன் பற்றாக்குறை காரணமாக

# உத்தரப்பிரதேச மருத்துவமனையில் 30 குழந்தைகள் பரிதாபச் சாவு!



உத்தரப் பிரதேச மாநிலம் கோரக் பூரில் அமைந்துள்ள பாபா ராகவ் தாஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் (பிராணவாயு) ஒட்ஸிசன் பற்றாக்குறை காரண மாகக்கடந்த 48 மணித்தியாலத்தில் 30 குழந்தைகள் உயிரிழந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த மருத்துவமனையில் இறந்த குழந்தைகளின் எண் ணிக்கை 30 என்று தகவல் வெளி யாகியுள்ள நிலையில், உள்ளூர் ஊடகங்கள் இறந்தோரின் எண் ணிக்கையை 50 என்று குறிப்பிட் டுள்ளது.

அந்த மருத்துவமனையின் வெளியில் இருந்தோரிடமும், அவசரப் பிரிவில் இருந்தோரிடமும் பி.பி.ஸி. செய்தியாளர் பேசிய போது தெரிவித்தவை வருமாறு:-

"10 முதல் 20 குழந்தைகள் ஒவ் வொரு நாளும் இறந்து கொண்டி ருக்கின்றன. ஆனால், கடந்த வெள்ளிக்கிழமை அன்று இறந்த உடல்களுக்கு மேல் உடல்கள் கிடக்கும் அளவுக்கு அதிக மரணங் கள் நிகழ்ந்து விட்டன" என்று பொருள்படும் வகையில் மூத்த பெண்ணொருவர் உள்ளூர் போஜ் புரி மொழியில் தெரிவித்தார்.

"50 குழந்தைகள் இறந்து விட்டன. யாரும் கேள்வி கேட்பதற் கில்லை" என்று அந்தப் பெண் ணோடு நின்றிருந்தோர் சூசகமாகத் தெரிவித்தனர்.

அனைவருமே அங்கு நடப்பதை வெளிப்படையாகத் தெரிவிக்கா மல் கடும் கவனக்குறைவைப் பற்றி சூசகமாகக் குறிப்பிட்டனர் என அந்தச் செய்தியாளர் தெரி வித்துள்ளார்.

மேற்படி மருத்துவமனையில் ஒட்ஸிசன் தீர்ந்து விட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. இது தெரிந்த பின்னரும் மருத்துவமனை அதிகாரிகள் கூடுதலான ஒட்ஸி சனை வழங்க நடவடிக்கை எடுக்க வில்லை என்றும் கூறப்படுகிறது.

இதேவேளையில், குழந் தைகளின் இறப்புக்கு ஒட்ஸிசன் பற்றாக்குறையே காரணம் என்று மருத்துவமனை நிர்வாகம் கூற மறுத்துள்ளது. ஊடகங்களில் வருகின்ற செய்திகள் தவறானவை என்று உத்தரப் பிரதேச மாநில சுகாதார அமைச்சர் சித்தார்த் நாத் சிங் தெரிவித்திருக்கிறார்.

ஆனால், ஒட்ஸிசன் சிலிண்டர் வழங்கி வருவதற்குக் கட்டணம் செலுத்தாமல் இருப்பதை சுட் டிக்காட்டும் கடிதத்தை ஒட்ஸிசன் விநியோக நிறுவனம் மருத்துவ கல்லூரியின் முதல்வருக்கு எழுதி யுள்ளமை தொடர்பில் ஊடகங் களில் செய்திகள் வெளியாகி உள் ளன. (ச)



## உலகத்தின் அதிகவயதானவர் 113 வயதில் காலமானார்!

கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்த உலகின் அதிக வயதான முதியவர் தனது 113 வயதில் காலமானார்.

இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த கிறிஸ்டல் என்ற முதியவர் உலகின் அதிக வயதான நபராக கின் னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் இடம்பெற்றார்.

1903 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி பிறந்த அவர், தனது 114 ஆவது பிறந்தநாளைக் கொண் டாட இன்னும் ஒரு மாத காலம் மட்டுமே உள்ள நிலையில் உயிரிழந்துள் ளார். கிறிஸ்டலுக்கு இரண்டு பிள்ளைகள், 9 பேரன்கள் மற்றும் 32 கொள்ளுப் பேரன்கள் ஆகியோர் உள்ளனர்.

## நான் பிச்சை கேட்கவில்லை: ஸ்ரீசாந்த் அதிருப்தி



இந்திய கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபையிடம் பிச்சை கேட்கவில்லை என முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இது குறித்து தனது டுவிட்டரில் கருத்து பதிவிட்டுள்ளார் ஸ்ரீசாந்த். எனது வாழ்வாதாரத்தை திருப்பித் தருமாறே இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையிடம் கேட்கின்றேன். அது என்னுடைய உரிமை. நீங்கள் ஒன்றும் இறைவனுக்கு மேலானவர்கள் இல்லை. நான் மீண்டும் விளையாடு வேன். நான் அப்பாவி என்று மீண்டும் மீண்டும் நிருபித்த பின்னரும் என் மீதான தடையை நீக்குவதற்கு மறுப்பது ஏன்?, ஊழல் மற்றும் சூதாட்டத்தை ஒருபோதும் சகித்துக் கொள்ளமாட்டீர்கள் என்றால் ராஜஸ்தான் ரோயல்ஸ் மற்றும் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் விடயத்தில் என்னசெய்தீர்கள்? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.பி.எல். தொடரில் இடம் பெற்றதாகக் கூறப்படும் சூதாட்டம் தொடர்பில் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த் மீதும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு அவர் கைதுசெய்யப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஆயுள் காலத் தடைவிதித்தது.

எனினும், ஸ்ரீசாந்த் மீதான ஆயுள் கால தடையை நீக்க வேண்டும் என்று கேரள உயர் நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்திருந்தது. இவ்வாறிருக்க அந்த உத்தரவை மீறி மேன்முறையீடு செய்யவுள்ளதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

இந்நிலையில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் இத்தகைய நடவடிக்கையால் ஆத்திர மடைந்துள்ள ஸ்ரீசாந்த் மேற்படி டுவிட்டர்பதிவை வெளியிட்டுள்ளார்.

## பல்லேகல டெஸ்ட்:
# இலங்கையின் கதி என்னவாகும்...?



இந்தியா - இலங்கை அணிகள் மோதும் 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி பல்லேகலவில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

விராட்கோஹ்லி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான 3 டெஸ்ட் போட்டித் தொடரில் காலியில் நடந்த முதல் போட்டியில் 304 ஓட்ட வித்தியாசத்திலும், கொழும்பில் நடந்த 2ஆவது டெஸ்டில் இன்னிங்ஸில் 53 ஓட்ட வித்தியாசத்திலும் இந்தியா வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது.

இந்தியா - இலங்கை அணிகள் மோதும் 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி பல்லேகலயில் நேற்று ஆரம்பமாகியது.

இந்திய அணியில் ஒரே ஒரு மாற்றம் செய்யப்பட்டு இருந்தது. ரவீந்திர ஜடேஜாவுக்குப் பதிலாக சுழற்பந்து வீரர் குல்தீப் யாதவ் சேர்க்கப்பட்டார். அவருக்கு இது2 ஆவது டெஸ்ட் போட்டி ஆகும்.

இதற்கு முன்பு ஆஸ்திரேலியாவுக்கு எதிராக கடந்த மார்ச் மாதம் நடந்த டெஸ்டில் விளையாடினார். இதில் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி இருந்தார்.

இலங்கை அணியில் 3 மாற்றம் செய்யப்பட்டு இருந்தது. ஹேரத், நவன்பிரதீப், தனஞ்செய டிசில்வா ஆகியோர் நீக்கப்பட்டனர். பதிலாக லக்குமார, விஷ்வாபெர்னாண்டோ, லக்சன் சண்டகன் ஆகியோர் சேர்க்கப்பட்டனர்.

இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி நாணயச் சுழற்சியில் வென்று தனது அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தார். தவானும், லோகேஷ் ராகுலும் தொடக்க வீரர்களாக விளையாடினார்கள். இருவரும் மிகவும் நிதானமாக விளையாடி ஓட்டங்களைச் சேர்த்தனர்.


முதல்நாள் உணவு இடைவேளைவரை இந்திய அணி விக்கெட் இழப்பின்றி 134 ஓட்டங்களைக் குவித்தது. லோகேஷ் ராகுல் 67 ஓட்டங்களும், ஷிகார் தவான் 64 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

மதிய இடை வேளைக்குப் பின் 188 ஓட்டங்கள் வரை இலங்கை அணியால் எந்த ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்த முடியவில்லை. ஆட்ட நேர முடிவில் இந்திய அணி 6 விக்கெட் இழப்பிற்கு 329 ஓட்டங்களை எடுத்தி ருந்தது.

கருணாரத்னவின் பந்து வீச்சில் லோகேஸ் ராகுல் 85 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதனைத் தொடர்ந்து தவான் 119 ஓட்டங்களுடனும், புஜாரா 8 ஓட்டங்களுடனும், ரகானே 17 ஓட்டங்களுடனும், கோஹ்லி 42 ஓட்டங்களுடனும், அஸ்வின் 31 ஓட்டங்கள் எடுத்த நிலையிலும் ஆட்டமிழந்தார்கள்.

பண்டையா ஆட்டமிழக்காமல் 13 ஓட்டங்களுடனும், சகா ஆட்டமிழக்காமல் 01 ஓட்டத்துடனும் களத்தில் உள்ளனர். பந்து வீச்சில் புஷ்பகுமார 3 விக்கெட்டுக்களையும், சண்டகன் 2 விக்கெட்டுக்களையும், பெர்னான்டோ 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

# ஐ.சி.சி. விதிமுறைகள் நிலையானவையாக இருக்க வேண்டும் – கோஹ்லி



வீரர்களின் நடத்தை விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதில் சர்வதேச கிரிக்கெட் சபை மேலும் உறுதியானதாக இருக்க வேண்டும் என இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி தற்போது மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் போட்டித் தொடரில் விளையாடி வருகின்றது.

இத்தொடரின் மூன்றாவது போட்டி கண்டி பல்லேகல மைதானத்தில் நேற்று ஆரம்பமாகியுள்ளது. இப்போட்டியில் விளையாடுவதற்கு இந்திய அணியின் முன்னணி சுழற் பந்து வீச்சாளர் ரவீந்திர ஜடேஜாவுக்கு சர்வதேச கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் வீரர்கள் நடத்தை விதி மீறல் காரணமாக அவருக்கு போட்டித் தடையும் 50 சதவீத அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அவருடைய ஐ.சி. சி. சிதைவுப் புள்ளி கடந்த இரண்டு வருடங்களில் 6 புள்ளிகளாகியுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த கோஹ்லி, வீரர்கள் எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று நான் நினைக்கின்றேன். அத்துடன் வெளிப்படையாக தமது துறையில் முன்னேறிச்செல்லவேண்டும். நம்பிக்கையுடன் செயற்பட வேண்டும். ஐ.சி.சி. விதிமுறைகளை வீரர்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். அதே வேளை அத்தகைய முடிவுகளை எடுக்கும்போது ஐ.சி.சி. தமது நிலைப்பாட்டைத் தெளிவு படுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

## ரோஜர்ஸ் கோப்பை டென்னிஸ்:
# காலிறுதியில் பில்ஸ்கோவாவை வீழ்த்தினார் வோஸ்நியாகி



ரோஜர்ஸ் கோப்பை டென் னிஸ் போட்டியின் பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் முதல்நிலை வீராங்கனையான பில்ஸ் கோவாவை வீழ்த்தி வோஸ் நியாகி அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.


ரோஜர்ஸ் கோப்பை டென்னிஸ் போட்டிகள் கனடாவில் கடந்த 7ஆம் திகதி தொடங்கியது. இந்தப் போட்டிகள் இன்றுடன் நிறைவடைகின் றன. ஆடவர் பிரிவு போட்டிகள் மோண்ட் ரியல் நகரிலும், பெண்கள் பிரிவு போட்டிகள் ரொராண்டோ நகரிலும் நடைபெற்று வருகின்றன.

நேற்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் காலிறுதி ஆட்டத்தில் தரவரிசையில் முதல் நிலையில் உள்ள பில்ஸ் கோவா, ஆறாம்நிலை வீராங்கனையான வோஸ்நியாகியை எதிர்கொண் டார். விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் வோஸ்நியாகி 7:5, 6:7(3), 6:4 என்ற செட் கணக்கில் பில்ஸ் கோவாவை வீழ்த்தினார்.

பெண்கள் பிரிவில் நடைபெற்ற மற்றொரு போட்டியில் ஐந்தாம் நிலை வீராங்கனையான ஸ்விடோலினா, ஒன்பதாம்நிலை வீராங்கனையான வீனஸ் வில்லி யம்ஸை எதிர்கொண்டார். இப்போட்டியில் 6:2, 6:1 என்ற நேர் செட்களில் ஸ்விடோலினா எளிதாக வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

அதே சுற்றில் நடைபெற்ற மற்றொரு ஆட்டங்களில் இரண்டாம்நிலை வீராங்கனை ஹலிப்பும், நான்காம்நிலை வீராங்கனை முருகுசாவும் வெற்றி பெற்று காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறினர். மூன்றாம்நிலை வீராங்கனை கெர்பர் அமெரிக்காவை சேர்ந்த ஸ்டீபன்ஸிடம் தோல்வியடைந்து வெளியேறினார்.

# 6 பந்துகளில் 6 விக்கெட்டுக்கள்;
## 13 வயதுச் சிறுவன் அசத்தல்!



இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த 13 வயது சிறுவன் உள்ளூர் போட்டிகளில் ஆறு பந்துகளில் 6 விக்கெட்டுக் களைச் சாய்த்து அசத்தியுள்ளான்.

இங்கிலாந்து நாட்டின் வட-கிழக்கு பகுதியில் பில டில்பியா கிரிக்கெட் கிளப் சார்பில் 13 வயதுக்குட் பட்டோருக்கான கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்றன. டர்ஹம் நகருக்கு அருகில் உள்ள லாங்கலே மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெற்றது.

இந்தப் போட்டியில் லுகே ரொபின்சன் என்ற 13 வயது சிறுவன் 6 பந்துகளில் 6 விக்கெட்டுகளை சாய்த்தார். அனைத்து விக்கெட்டுகளும் கிளீன் போல்ட் என்பது தான் இதில் சிறப்பு.

இதனைவிட லுகேயின் தந்தை ஸ்டீபன் தான் இந்தப் போட்டி யின் நடுவர். தனது மகன் விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தியதை கண் இமைக்காது பார்த்து ரசித்தார்.

பிலடில்பியா கிளப் போட்டி வரலாற்றில் 149 ஆண்டுகால சாதனையாக இது உள்ளதாக நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.






மேசன் தொழிற் பயிற்சி பெற்ற 400 பயிற்சியாளர்களுக்கான தொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்.திருமறைக் கலாமன்றத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், தேசியவீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் சஜித் பிரேமதாச, தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பி னரான மாவை சேனாதிராஜா, சிறு வர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் இணைந்து உபகரணங்களை வழங்கினர்

இந்த நிகழ்வில், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மற்றும் கிளிநொச்சி மாவட்ட முகாமை யாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (செய்தி முதலாம் பக்கத்தில்) (ம)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுக்கதை களை உருவாக்கி பொய்யான பிரசாரங்களைச் செய்வதன் மூலமாக எமது நாட் டைப் பிளவுபடுத்த முயற்சிக் கின்றார்கள் என்றும் சஜித் பிரேம தாச குற்றம் சாட்டினார்.

தேசிய வீடமைப்பு அபிவி ருத்தி அதிகார சபையுடன் சீடா மற்றும் தொழிற்பயிற்சி அதிகார சபை ஆகியன இணைந்து வழங் கிய மேசன் தொழில் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு தொழில் உபகரணம் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். திருமறைக் கலாமன்றத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதி யாகக் கலந்துகொண்ட அமைச் சர் சஜித் பிரேமதாச உரை யாற்றுகையிலேயே மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் –

மேசன் தொழில் பயிற்சியைப் பெற்ற உங்களுக்கு மாதாந்தம் 60ஆயிரம்ரூபாவருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன. வடமாகாண அரச அதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க வட மாகாணத்தில் 2 ஆயிரத்து 551 வீடு களும் 43 கிராமங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நிகழ்வுகள் ஆரம்பம் மட்டுமே. எதிர்வரும் 2018 மற்றும் 2019, 2020 ஆம் ஆண்டுகளில், குறிப்பாக நடை பெறவுள்ள தேர்தலுக்கு முன்னர் வட மாகாண மக்களுக்கு வீட்டுத் திட்டம் கிடைக்கும்.

தேசிய வீடமைப்பு அமைச் சினால் புதிதாக குடிதண்ணீர் மற் றும்மின்சாரம்வசதிகள்உள்ளடங் கலாக கட்டப்பட்டு வரும் 49 வீடு களும் திறந்து வைப்பதற்கு நான் 49தடவைகள்யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வேன் என்றார்.

மேலும், எதிர்வரும் 3 வருடங் களில் 2 ஆயிரத்து 500 வீட்டுத் திட்டத்தை அமைத்து தேர்தல் ஒன்றிற்கு முகம் கொடுக்க வேண்டுமென்பதே எமது நோக் காக இருக்கின்றது. நாங்கள் அனைவரும் எந்த விதத்திலும் மத மற்றும் சாதி வித்தியாசம் இல்லாமல் ஒரே நாட்டு மக்கள் என்ற வகையில், சகோதரத்துவத் தையும் அன்பையும், சமாதா னத்தையும் பகிர்ந்து வாழ வேண்டும்.

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் நல்லிணக்க முயற்சிகளில் பயணித்துக் கொண்டிருக்கின்ற இந்த வேளையில் நாங்கள் அனைவரும் இன, மத, சாதி வேற்றுமையின்றி நல்லிணக் கத்துடனும், சமாதானத்துடனும் இந்த நாட்டில் வாழ வேண்டும். – என்றார். (ம)

## இன்றுவரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று ரெலோவின் தலை மைக்குழு வவுனியாவில் கூடி யது. தலைமைக்குழுவின் 21 உறுப்பினர்களில் பதினைந்து பேர் பங்குபற்றினர். தலைவர் செல்வம் அடைக்கலநாதன், செய லாளர் என்.சிறிகாந்தா மற்றும் இந்திரகுமார், விந்தன், மருத்துவர் குணசீலன் உட்படப் பலர் பங்கு பற்றினர். தலைமைக்குழு உறுப் பினர் என்ற முறையில் வட மாகாண அமைச்சர் டெனீஸ் வரனும் பங்குபற்றினார்.

முதலமைச்சர்சி.வீ.விக்னேஸ் வனுக்கு எதிராக முன்மொழி யப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையில் தாம் ஒப்பமிட் டமைக்கான காரணத்தை தன் னிலை விளக்கமாக டெனீஸ் வரன் வழங்கினார்.

ஆனால் தலைமைக்குழு அந்த விளக்கத்தை ஏற்க மறுத் தது. வடக்கு மாகாண சபையில் அங்கம் வகிக்கும் ரெலோவின் ஆறு உறுப்பினர்களில் ஐவர் கட்சியுடன் கலந்தாலோசித்து அதன் முடிவெடுக்க, டெனீஸ் வரன் மட்டும் தன்பாட்டில் முடி வெடுத்து மேற்படி பிரேரணை யில் ஒப்பமிட்டமை தவறு என கட்சியின் தலைவரும் செயலா ளரும் சுட்டிக் காட்டினர்.

ஏற்கனவே கூட்டமைப் பின் பங்காளிக் கட்சித் தலை வர்களுடன் முதலமைச்சர் விக் னேஸ்வரன் நடத்திய ஆலோ சனைக் கூட்டத்தில் முதலமைச் சர் மாகாண அமைச்சரவையை மாற்றியமைப்பதற்கு இடமளிப் பது எனத் தீர்மானிக்கப்பட்டுள் ளது. அதற்கு இடமளிக்கும் வகை யில் டெனீஸ்வரனை உடனடியா கத் தமது இராஜினாமாக் கடி தத்தை முதலமைச்சரிடம் ஒப்ப டைக்கும்படி தலைமைக் குழு கோரியது.

எனினும், தமக்கு நான்கு மாத கால அவகாசம் தரும்படி கூறிய டெனீஸ்வரன் அதற்கான கார ணங்களையும் முன்வைத்தார்.

ஆனால் தலைமைக்குழு அந்தக்கோரிக்கையைநிராகரித்து முடிவு எடுத்தது.

அடுத்த 24 மணி நேரத்துக் குள் (அதாவது இன்றைக்கு முன்) தமது முடிவை டெனீஸ்வரன் அறி விக்க வேண்டும் என்றும் –

தவறின் கட்சி தனது முடிவை எடுத்து அதனை வெளியிடும் என்றும் –

தலைமைக்குழுக் கூட்டத்தில் டெனீஸ்வரன் அறிவுறுத்தப்பட் டார்.

ரெலோவின் ஐந்து வெளி நாடுகளின் பொறுப்பாளர்களும், சர்வதேச பொறுப்பாளரும் நேற் றைய கூட்டத்தில் பங்குபற்றினர்.

## அதிரப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப் படுத்தப்பட்டிருந்தது என்றும் கூறப்பட்டது.

மேலதிக தகவல் ஏதும் நேற்று நள்ளிரவு வரை கிடைக்க வில்லை. (இ–ச)

## நீதி அமைச்சருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் முஜிபுர் ரஹ் மான் வெளிப்படையாக கருத்துத்தெரி வித்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

*(மற்றொரு செய்தி 7 ஆம் பக்கத்தில்)*

## பதவி விலக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுக்கொள்கிறேன்." – என்ற சாரப்பட சத்தியலிங்கத்துக்கு நேற்று முன்தினம் கடிதம் அனுப்பி வைத்திருக்கிறார் முதல் வர் விக் னேஸ்வரன்.

நாளை அல்லது நாளை மறு தினம் சுகாதார அமைச்சை தமக் குக் கீழ் முதல்வர் கொண்டு வரு வார் என எதிர்பார்க்கப்படுகிறது. புதிய சுகாதார அமைச்சர் நிய மிக்கப்படும் வரை அந்த அமைச் சையும் முதல்வரே கவனிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## நேர்மையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்தவொரு அரசும் நிறை வேற்றாத பணிகளை தற் போதைய அரசு குறுகிய காலத் தில் நாட்டுக்காகவும் மக்களுக் காகவும் நிறைவேற்றியுள்ள தாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, விவசாய சமூகத்தின் பொருளா தாரத்தை பலப்படுத்தி, அதன் மூலம் தேசிய பொருளாதா ரத்தை கட்டியெழுப்பும் பணிக்கு அரசுமுன்னுரிமைஅளித்துள்ள தாக குறிப்பிட்டார்.

நாட்டின் பெரும்பான்மை விவசாய சமூகத்தின் எதிர்பார்ப் புகளை நிறைவேற்றும் மொரக ஹகந்த திட்டத்தின் கீழ் முன் னைய அரசர்களின் காலத் திற்கு பின்னர் அதிக எண்ணிக் கையான குளங்கள் இப்போது ஒரேயடியாக நாட்டில் புனர்நிர் மாணம் செய்யப்படுவதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, இதன் மூலம் இப்பிரதேச விவசாய சமூகத் தின் வாழ்க்கை சுபீட்சம் அடையுமெனத் தெரிவித்தார்.

இதுவரை எந்தவொரு அர சாங்கத்திடம் இருந்தும் தீர்வு கிடைக்காத குப்பை பிரச்சி னைக்கு இந்த நாட்டில் இதற்கு பின்னர் ஆட்சிக்கு வரும் எந்த வொரு அரசாங்கமும் அதற்கு முகங்கொடுக்க வேண்டிய தேவையில்லாத வகையில் நிலையானதொரு தீர்வை அர சாங்கம் அடுத்த வருடத்திற்குள் நடைமுறைப்படுத்தும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, வரலாற் றில் முதல் முறையாக குப்பை களிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யவும் கூட்டு உரம் தயாரிக்கவும் நடவடிக்கை களை ஆரம்பித்து இருப்பதாகக் குறிப்பிட்டார். அந்த வகையில் முதலாவது மற்றும் இரண்டா வது சுற்றில் தயாரிக்கப்படும் கூட்டு உரம் விவசாய சமூகத்தி ற்கு இலவசமாக வழங்க நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா கவும் தெரிவித்தார்.

மகாவலி குடியேற்றவாசி களுக்கு ஒரு லட்சம் காணி உறுதிகளை வழங்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மகா வலி எச் வலயத்தில் விவசாய சமூகத்திற்கு 6200 காணி உறுதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வை அடையாளப்படுத்தும் வகையில் நூறு பேருக்கு ஜனாதி பதியால் காணி உறுதிகள் வழங் கப்பட்டன.

மகா சங்கத்தினர் உள்ளிட்ட சமயத் தலைவர்கள் அமைச் சர்களான பி.ஹெரிசன், சந் ராணி பண்டார, பிரதி அமைச் சர் அநுராத ஜயரத்ன, இந்திக்க பண்டாரநாயக்க, சாரானாத் பஸ் நாயக்க, வடமத்திய மாகாண ஆளுநர் பீ.பி.திசாநாயக்க, முன்னாள் அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம மஹிந்த சூரிய ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வை தொடர்ந்து எப்பாவல கூட்டுறவு நிலைய வளாகத்திற்கு சென்ற ஜனாதி பதி அவர்கள், தான் அங்கு வழங்கள் அதிகாரியாக சேவை செய்த காலத்தில் தன்னுடன் கடமையாற்றிய ஊழியர்களைச் சந்தித்து சுமுகமாக கலந்துரை யாடினார்.

ஜனாதிபதி அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்ற பணிக் குழாம் உறுப்பினர்கள் விசேட நினைவுச் சின்னம் ஒன்றையும் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் சரத் சந்திரசேகர ஒரு விசேட நினைவுச் சின்னத்தையும் ஜனாதிபதிக்கு வழங்கி வைத்த னர்.

## அரசிலிருந்து..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சிக்கு 106 ஆசனங்கள் இருக் கின்ற அதே சமயம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட் சிக்கு 35 ஆசனங் கள் மாத்திரமே உள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பான்மை பலத்தை கவ னத்தில் கொள்ளாது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பல சந்தர்ப்பங் களில் ஐக்கிய தேசியக் கட்சியை புறந்தள்ளி விட்டு தன்னிச்சை யாகச் செயற்பட்டுள்ளது என பிரதமர், ஜனாதிபதியிடம் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியினருக்கு நடக் கும் அநீதிகள் இதேவிதமாக தொடர்ந்தால், எதிர்வரும் ஜனவரி மாதம் அரசில் இருந்து விலக நேரிடும் என பிரதமர், ஜனாதிபதி யிடம் கூறியுள்ளார் என சிரேஷ்ட அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள் ளார். (இ–சி)

## மஹிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுப்ரிம் நிறுவனத்தின் தொழில் நுட்ப குழுவில் பிரதான பொறி யியலாளராக ரோஹித செயற் பட்டார் எனக் கூறப்படுகின்றது. சுப்ரிம் செட் செயற்கைக்கோள் களை ஏவு வதற்காக 32 கோடி டொலர் செலவிடப்பட்டுள்ளதாக வும் கணிப்பிடப்பட்டுள்ளது.

இதற்காகபாதுகாப்புஅமைச்சு மற்றும் தொலைத் தொடர்பு ஆணைக்குழுவின் அனுமதி கிடைக்கவில்லை எனவும், அர சாங்க பணம் 50 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன் னாள்பொதுச்செயலாளர்திஸ்ஸ அத்தநாயக்க நாடாளுமன்றத் தில் தெரிவித்திருந்தமை குறிப் பிடத்தக்கது. (ம)

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்கள் மத்தியில் கருத் துக் கூறிய போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

ரெலோ சார்பில் அமைச்சர் பதவிக்கு விந்தனின் பெயர் பரிந் துரைக்கப்பட்ட பின்னர் அதற்கு எதிராகவும் அந்த முடிவை ஆட்சே பிக்கும் வகையிலும் ரெலோ வின் தேசிய அமைப்பாளரும், வடக்கு மாகாண சபை உறுப்பின ருமான சிவாஜிலிங்கம் பகிரங்க மாகக் கருத்து வெளியிட்டார் என சில ஊடகங்களில் செய்தி வெளி யாகியமை தெரிந்ததே.

ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வர னைத் தொடர்பு கொண்டு விந் தன் அல்லாத வேறு ஒரு ரெலோ உறுப்பினரை அமைச்சராக நியமிக்கும்படி கோரியிருந்தார் எனவும் பேச்சடிபட்டது.

நேற்று நண்பகல் 12மணி முதல் மாலை 6 மணிவரை வவுனியாவில் நடைபெற்ற ரெலோவின் தலைமைக்குழு வின் கூட்டத்திற்கு கட்சித் தலை வர் செல்வம் அடைக்கலநாதன் தலைமை வகித்தார். சிவாஜிலிங் கமும்கூட்டத்தில்பங்குபற்றினார்.

எனினும், அக்கூட்டத்தில் எந் தச் சமயத்திலும் அமைச்சர் பத விக்கு விந்தனின் பெயர் பரிந்து ரைத்து முன்னர் செய்யப்பட்ட தீர்மானத்துக்கு எதிராக சிவாஜி லிங்கம், ரெலோ தலைவர் செல் வம் அடைக்கலநாதன் உட்பட எவருமே வாய்திறக்கவேயில்லை என நம்பகரமாகத் தெரியவந் தது. (உ)

# ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு மும்முனைகளில் ராஜபக்‌ஷாக்கள்

## கொழும்பு ஊடகம் தகவல்





கொழும்பு, ஓக 13

மூன்று முனைகளில் ஆட்சியைக் கைப்பற்றும் முனைப்புக்களில் மஹிந்த ராஜபக்‌ஷாக்கள் ஈடுபட்டுள்ளனர் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் அந்த ஊடகம் வெளியிட்ட செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

முன்னாள்மஹிந்தராஜபக்‌ஷ, முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்‌ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்‌ஷ ஆகியோர் இவ்வாறு மூன்றுமுனைகளில்ஆட்சியைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் சந்திப்புக்களை நடத்துதல், மத வழிபாடுகளை நடத்துதல் உள்ளிட்டவை மூலம்மக்களைத்தெளிவூட்டும் நடவடிக்கைகளில் மஹிந்த ராஜபக்‌ஷ ஈடுபட்டுள்ளார்.

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்காபொதுஜனமுன்னணியின் ஊடாகத் தொகுதி அமைப்பாளர்களைநியமித்தல், இளைஞர் அணிகளை உருவாக்குதல், மகளிர் அணிகளை உருவாக்குதல் போன்றவை ஊடாக 20 லட்சம் உறுப்பினர்களைக் கட்சியில் இணைக்கும் முயற்சியில் பஸில் ராஜபக்‌ஷ ஈடுபட்டுள்ளார்.

நாட்டின் புத்திஜீவிகள், தொழில்வாண்மையாளர்கள், நிபுணர்களை மறைமுகமாக இணைத்துக் கொண்டு மற்றுமொரு முனையில் கோட்டாபய ராஜபக்‌ஷ அணி திரட்டி வருகின்றார்.-என்றுள்ளது.

புத்திஜீவிகளையும், தொழில் வண்மையாளர்களையும் இணைத்துக்கொண்டுநாட்டை கட்டியெழுப்பும் கோட்டாபயவின் திட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் முன்னெடுக்கப்பட உள்ளதாகச் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (எ)

## மாட்டு வண்டில் சவாரிப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 13

கிளிநொச்சி மாவட்ட மாட்டு வண்டில் சவாரிச் சங்கத்தின் அனுசரணையுடன் பூநகரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கமும் பூநகரி விவசாய பெருங்குடி மக்களும் இணைந்து நடத்தும் மாபெரும் மாட்டு வண்டில் சவாரிப் போட்டி இன்று பிற்பகல் ஒரு மணிக்கு பூநகரி நல்லூர் சாமிப்புலம் மடத்துப்பிட்டி சவாரித்திடலில் நடைபெறும். (ப)

## கலந்துரையாடல்

தென்மராட்சி அபிவிருத்திக் கழகக் கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் பேராசிரியர் க.கந்தசாமி தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வுக்கான அறிமுக உரையை பேராசிரியர் க.கந்தசாமி மற்றும் வைத்திய கலாநிதி ஆ.புவிநாதன் ஆகியோர் வழங்குவர். (ச)

# எம்.பிக்களுக்குத் தமிழ் மொழி கற்பிக்கும் நிகழ்வு ஆரம்பம்



கொழும்பு, ஓக 13

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தமிழ் மொழியைக் கற்பிக்கும் அறிமுக நிகழ்வு நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் நடத்தப் படும் இந்தப் பயிற்சி வகுப்புக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரில் 40 உறுப் பினர்கள் மாத்திரமே பதிவு செய்துள்ளனர். அதே வேளை, இந்த அறிமுக நிகழ்வுக்கு 12 உறுப்பினர்கள் மாத்திரமே சமுகமளித்திருந்தனர்.

தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத் தின் தலைவர் சந்தன அருணதேவ மற்றும் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ஆர். ஹேரத் ஆகியோரின் பங்கு பற்றலில் சபா நாயகர் கருஜெயசூரிய தலைமையில் இந்த அறிமுக நிகழ்வு இடம்பெற்றது.

விசேட பயிற்சிகளுடன் கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான இந்த மொழிப் பயிற்சி வகுப்புகள் ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை காலை 9 மணி முதல் முற்பகல் 10 மணி வரை நாடாளுமன்றத்தில் நடைபெற உள்ளன.

தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் சிங்களம் மற்றும் தமிழ் மொழி வளவாளர்களால் இந்தப் பயிற்சி வகுப்புகள் நடத்தப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# பிணை முறி மோசடி விவகாரம் தொடர்பில் மஹிந்த, கப்ரால் மீதும் விசாரணை தேவை

## வலியுறுத்துகிறார் நளின் பண்டார எம்.பி.




கொழும்பு, ஓக 13

மத்திய வங்கி பிணை முறி மோசடி விவகாரத்தில் ரவி கருணாநாயக்க மாத்திர மன்றி மஹிந்த ராஜபக்‌ஷ மற்றும் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோரும் விசாரிக்கப்பட வேண்டியவர்களேஎன்று நாடாளுமன்ற உறுப் பினர் நளின் பண்டார வலியு றுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தனிநபர் பிரேரணையொன்றை முன் வைத்து உரையாற்றிய மக்கள்விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பிணைமுறி மோசடியு டன் தொடர்புபட்ட நிறுவனம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷ நிதி அமைச்சராக இருந்த காலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அக்காலகட்டத்தில் மத்திய வங்கியின்ஆளுநராகஇருந்தவர் அஜித் நிவாட் கப்ரால். அத்துடன் நிவாட் கப்ராலின் சகோதரி ஒருவரும் பெர்பெசுவல் ட்ரஷரீஸ்நிறுவனத்தின் பணிப்பாளர் சபையில் அக்காலப் பகுதியில் பதவி வகித்துள்ளார்.

எனவே பிணைமுறி மோசடி விவகாரத்தில் ரவி கருணாநாயக்கவை மட்டும் விசாரித்தால் போதாது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷ மற்றும் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோரும் இந்த விவகாரம் தொடர்பில் விசாரிக்கப்பட வேண்டியவர்களே.- என்றார். (எ)

# ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் செப்.7 இல் ஆரம்பம்

கொழும்பு, ஓக 13

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் அடுத்த மாதம் 7 ஆம் திகதி முதல் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளன. இதே வேளை தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் எதிர் வரும் 31 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே. புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சைகளின் மதிப்பீட்டுப் பணிகள் தொடர்பில் பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 2 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. எனவே, ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப் பீட்டுப் பணிகள் நான்கு கட்டங்களாக நடைபெறவுள்ளன. அதற்கிணங்க முதற் கட்ட மதிப் பீட்டுப் பணிகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதிவரையும் இரண்டாம் கட்டப்பணிகள் செப்ரெம்பர் மாதம் 13 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளன. அத்துடன் மூன்றாம் கட்ட மதிப்பீட்டுப் பணிகள் செப்ரெம்பர் மாதம் 18 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளதுடன்-

பொதுச் சாதாரண பரீட்சையின் மதிப்பீட்டுப் பணிகள் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி முதல் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளன.

மேலும் முதற் கட்ட மதிப்பீட்டுப் பணிகள் 31 மத்திய நிலையங்களில் இடம்பெறவுள்ளதுடன் 446 குழுக்களாக 9 ஆயிரத்து 245 ஆசிரியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை, எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் எதிர் வரும் 31 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. மதிப்பீட்டு மத்திய நிலையங்கள் 40 இல் இடம்பெறவுள்ள இந்தப் பணிகளில் 384 குழுக்களூடாக ஆறாயிரத்து 965 ஆசிரியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.-என்றுள்ளது. (எ)

# விதிகளை மீறுவோருக்கான அபராதம் அடுத்த வாரம் முதல் நடைமுறைக்கு!

போக்குவரத்து விதிகளை மீறுவோருக்கு எதிராக விதிக்கப்படும் அபராதத் தொகை அடுத்த வாரம் முதல் நடைமுறைக்கு வரும் என்று போக்குவரத்து பிரதி அமைச்சர் அசோக அபேசிங்க தெரிவித்துள்ளார்.


போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகளுக்கு எதிராக 25 ஆயிரம் ரூபா ஆக்க குறைந்தது அபராதமாக விதிக்கப்படவுள்ளது.

சாரதி அனுமதிபத்திர மின்றி வாகனம் செலுத் துதல், போதைப் பொருள் பாவனையுடன் வாகனம் செலுத்துதல், அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்துதல், ரயில் பாதையில் பாதுகாப்பற்ற முறையில் வாகனம் செலுத்துதல் போன்ற குற்றங்களுக்காக இந்த அபராதம் விதிக்கப் படவுள்ளது.

அத்துடன், அதிவேகத்தில் வாகனத்தை செலுத்துதல், வயது குறைந்தோர் வாகனம் செலுத்துதல், இடதுபக்கம் முன்னோக்கிச் செல்லல் போன்ற குற்றங்களுக்காக விதிக்கப்பட்ட அபராதத் தொகை 2 ஆயிரத்து 500 ரூபாவால் அதிகரிக்கப் பட்டுள்ளது.

# நல்லூரில் புத்தகக் கண்காட்சி, விற்பனை






நல்லூரில் புத்தகக் கண்காட்சியை முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் நேற்றுமுன் தினம் ஆரம்பித்து வைத்தார்.



இந்திய சுதந்திர தினத்தின் 70ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டும் யாழ். இந்தியத் துணைத் தூதரகம் யாழ்ப்பாணம் மாநகர சபையுடன் இணைந்து இந்தப் புத்தகக் கண்காட்சியை 12ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை ஏற்பாடு செய்துள்ளது. கண்காட்சியும் விற்பனையும் தொடர்ந்து 21ஆம் திகதி வரை நடைபெறும்.

ஏறத்தாழ 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் புத்தகங்கள் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டு இந்தியாவின் பிரபல பதிப்பகங்களான கவிதா பதிப்பகம், கற்பகம் புத்தகாலயம், அருணா பதிப்பகம் மற்றும் இலங்கை பூபாலசிங்கம் புத்தகசாலை ஆகிய பதிப்பகத்தினரால் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. (இ

# தென்மராட்சியில் நாதநர்த்தன நடன நிகழ்வு




தென்மராட்சி கல்வி வலயம் நடத்திய நாதநர்த்தன நடன நிகழ்வுகள் சாவகச்சேரி நகராட்சி மன்ற பொன் விழா மண்டபத்தில், வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்றன. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனும், கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி தமிழரசுக் கட்சி அமைப்பாளர் க.அருந்தவபாலன், விரிவுரையாளர் செல்வி சி.ரஜிதா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வில் இரு காட்சிகள். (இ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
வாழ்த்துகின்றோம்



செல்லத்துரை
திருமாறன் (பிரபு)
(உரிமையாளர், இராஜேஸ்வரி கல்யாண மண்டபம் கோண்டாவில், தெல்லிப்பழை)

2017 ஒகஸ்ட் 3ஆம் திகதி அகில இலங்கை சமாதான நீதவான் பதவியை பெற்றமையையிட்டு மனமுவந்து பாராட்டுகின்றோம். அவர் இன்னும் பல பட்டம், பதவிகளைப் பெற்று எம் மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என நாச்சி அம்மாளை பணிந்து வேண்டுகின்றோம்.
வாழ்த்துவோர்:
ரூபி ஜுவல்லரி உரிமையாளரும், ஊழியர்களும்.

பிரபல தென்னிந்தியப் பாடகர் கலைமாமணி
உன்னிகிருஷ்ணன்
உத்ரா உன்னிகிருஷ்ணன்
இணைந்து வழங்கும்
இன்னிசை பாடிவரும்...
மாபெரும்
இசை நிகழ்ச்சி
திருமலையில்
இன்று மாலை
6.00 மணிக்கு



நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு: K.T.பிரசாத்
திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில்
டிக்கெட் பெற்றுக் கொள்வதற்கு....
0714444777
டிக்கெட்டுக்களை நிகழ்ச்சி நடைபெறும் நுழைவாயிலிலும் பெற்றுக்கொள்ளலாம்.
Event Management C.A.C Tel: 077 550 4910
டிக்கெட்டுக்கள்: 300/= 500/= 1000/=

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள், பொதிகள் சேவை



அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர்வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
Call - 021 222 6113



எமது சேவை 365 நாட்களும்
விரைவாகவும் பாதுகாப்பாகவும்
72 மணி நேரத்தில்
உலகின் எப்பாகத்திலும் ஒப்படைக்கப்படும்
(EXPRESS SERVICE)
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் ஏற்கப்பட்டு வெளிநாடுகளில் ஒப்படைக்கப்படும்
(Door to Door Service)
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
இல.10, புதிய மாநகரசபைக் கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Call - 021 222 3536

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.08.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.